# தமிழரசு

திங்கள் இருமுறை செப் 1 1970 35 காசு



## உறுதியான கட்டடங்கள்: *நகரங்களில்-1*




எங்க அப்பா புது வீடு கட்டறாரே!

# சங்கர் சிமெண்ட்

IS:269 ISI

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது

**ISI** மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2**

23 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-1443TM



மலர் 1 1970 செப்டம்பர் 1 இதழ் 5

முதல்வர் எழுதும் தொடர் கட்டுரை

உன்னைத்தான் தம்பி !
கல்வி சிறந்த தமிழ்நாடு
நாடகக் கலை
நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை
இலக்கியச் சோலை
நாற்றையும் சுருட்டலாம்
அம்மா பசிக்குதே !
வாழையடி வாழை
நீதிமன்றத்தில் தமிழ்
செய்தவை பல
கடல் மல்லை காணீரோ !
கொத்தளத்தில் விழா
இங்கே எல்லாம் கிடைக்கும்
கைத்தறியே அணிவோம்
அச்சமில்லை ! அச்சமில்லை !
தொடர்ந்து பரிசு பெறும் தொழிற்கூடம்
வழிவிடுக ஏழையர்க்கே !

முகப்பில்: தஞ்சைப் பெரியகோயில் வாயிலின் பக்கத்தில் திறக்கப்பட இருக்கும் ராஜராஜ சோழன் சிலை.
மையப்பக்கத்தில்: தஞ்சை மாநகரின் நெஞ்சையள்ளும் காட்சிகள்.



## பிறமாநிலமும் போற்றும் !

இதுவரைக்கும் எந்த மாநில மும் செய்யாத புதிய வடிவத்தில் —தமிழக அரசு தந்திருக்கும் ' தமிழரசு ' இதழ், பிற மாநில மக்களும் போற்றுகின்ற அளவுக் குத் தேன் ஊற்ருக இருக்கிறது. 'காலம் மாறிவிட்டது' படக்கதை படிக்கப்படிக்க இன்பம்தருகிறது. ஆகையால் எல்லா இதழ்களிலும் அது இடம் பெற வேண்டும்.

—எஸ். என். மணிமாறன்,
பெங்களூர்-1.

## தலையங்கம் தந்தால் என்ன?

கண்கவர் வண்ணப் படத்தை யும் கருத்தாழமிக்க கட்டுரை களையும் புதுமைகள் பலவற்றை யும் புகுத்திய 'தமிழரசு' தலையங் கத்தையும் தந்தால் அறுசுவை உணவும் உண்ட எக்களிப்பு உண்டாகுமே !

—சே. ஏகப்பன்,
மணப்பாறை.

## காவியமாக்குக !

'இனியவை இருபது' என்ற தொடரை முதல்வர் அவர்கள் சில பல மாதங்களில் முடித்து விடாமல் நீண்ட நெடுங்கதை போல் ஒரு காவியமாக எழுதி வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

—ம. கி. இராமலிங்கம்,
சென்னை-14.

## படமே பாடம்.

'தமிழரசு' குறைந்த விலையில் சிறந்த பதிப்பாக வெளியாவது கண்டு மகிழ்கிறேன். விளக்கப் படங்கள் இன்னும் அதிகமாக வேண்டும் படங்கள் அதிகமாகவும் எழுத்துக் குறைவாகவும் இருப் பின் குறைந்த கல்வியறிவுடை யவர்களும் விவரம் அறிந்து கொள்ள உதவும்.

—சா. ல. கரு. சாமி,
சிங்கப்பூர்-2

## துப்பறிந்த கதை.

ஆகஸ்டு 16 இதழில் வெளி யான "ஒரு துப்பறியும் கதை" மிக மிக அற்புதமாக இருந்தது. இப் பகுதி படிக்கப் படிக்க ஆவலைத் தூண்டுகிறது, இதழ் தவருமல் இப்பகுதியை வெளி யிடவும்.

—ஏ. மகிமைநாதன்,
பெங்களூர்-7.

## களிப்புத் தந்த காட்சி.

தமிழ் நலங் கூறும் நால்வர்— தமிழக நிதியமைச்சர், முதல்வர், திரு கருத்திருமன், புதுவை முதல் வர்—காம்போலன் சிலை அருகே காட்சி தருவதைக் கண்ணுற்றுக் களிப்பெய்தினேன். கைதி கந்த சாமி கூறும் உண்மை நிகழ்ச்சியும், எல்லாம் அவனுக்காக நாடகமும் பயனுள்ளவைகளாகவும் படிப் பினை தருபவைகளாகவும் விளங்குகின்றன.

—துரை, தமிழழகன்,
சேலம்-2.

## மறக்க முடியாது.

"தமிழரசு" மூன்ருவது இதழில் "கடல்படு செல்வம்" பற்றிய கட்டுரை சிந்தனைக்கு விருந்தாகவும், மீன் பிடித்தல் தொழிலைப் பற்றிய ஆய்வுக்களஞ் சியமாகவும், அமைந்திருக்கிறது. நான்காவது இதழில் காணப் பட்ட "விடுதலை நாள் விழா" கவி தையை ஊன்றிப்படித்தவிடத்து, கடமையுணர்ச்சி. வெள்ளம் போலப் பீரிட்டுக் கிளம்பியதை என்னல் மறக்க முடியாது.

—பெ. சு. தியாகராசன்,
அருப்புக்கோட்டை.

## இடர்வரினும் நடத்துக.

படிப்பதற்கும், அரசாங்கச் சாதனைகளை நல்ல முறையில் தெரிந்து கொள்வதற்கும் உயர் தரமான இதழ் ' தமிழரசு ' இப் பத்திரிகையை—எவ்வளவு இடர் வந்தாலும் தொடர்ந்து நடத்திவர வேண்டுகிறேன்.

வாழ்க—வளர்க !

—க. நவநீதகிருட்டிணன்,
மதுரை-1.





# இனியவை இருபது

## 3. ரோமாபுரியில்

ரோம் நகரத்து விமான நிலையத்தின் பெயர் ''லியர்னடோ டாவின்சி'' என்பதாகும். கலைத் துறையில் ஒளிவிளக்காகவும், ஓவியத் துறையில் ஒப்பற்ற மேதையாகவும், விஞ்ஞானத்துறை வித்தகராகவும் விளங்கியவர் ''லியர்னடோ டாவின்சி'' என்பவராவார். இத்தாலியில் பிளாரன்ஸ் நகரத்தைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞர், அந்நாட்டுக் குடியானவன் ஒருவனின் மகளைக் காதலித்தார். காதலின் முடிவு திருமணமாயிற்று. அவர்களின் மணவாழ்க்கையின் அன்புச் சின்னமாகத் தோன்றியவர் தான் லியர்னடோ டாவின்சி. வெனிசில் தான் புகழ் பெற்ற அந்தக் குழந்தை பிறந்தது. சர்பயரோ என்ற சித்திரக்காரரின் மாணவனாக டாவின்சி திகழ்ந்தார். அப்போது, ''இயேசுநாதரின் இரவு உணவு'' என்ற ஓவியத்தை சர்பயரோ தீட்டிக் கொண்டிருந்தார். அந்த அழகு மிகு சித்திரத்தை எழுதி முடிக்கும் வேலையைத் தன்மாணவன் லியர்னடோவிடம் ஆசிரியர் ஒப்படைத்த போது, ஆர்வம்படைத்தஅந்த மாணவன் அந்தச் செயலை அற்புதமாகச் செய்து முடித்தான். இப்போதும் அந்தப்படம் பிளாரன்சில் இருக்கிறது. அந்தப் படத்தை எழுதி முடித்தபோது டாவின்சி இருபது வயது இளங்காளை!

''மன்னர்களை வணங்கியது'' ''வர்ஜின் ஆப் திராக்ஸ்'' போன்ற கீர்த்தி மிகு ஓவியங்களின் படைப்புக்கர்த்தா லியர்னடோ டாவின்சியாகும்.

ஐரோப்பாக் கண்டத்தில் பதினைந்தாம் நூற்றுண்டில் ஏற்பட்ட இலக்கிய, ஓவிய, சிற்ப, இசைத் துறைப் புரட்சிகளுக்குக் காரணமாக இருந்தவர்கள், டாண்டே, டாவின்சி, மைக்கேல் ஆஞ்சலோ, ரஃவேல், டிட்டியன் போன்றவர்கள்தாம். ஏதென்ஸ் நகரத்தின் ஏற்றமிகு நிலைமைக்கு 'பெரிக்ளிஸ்' எவ்வாறு ஆணிவேராக இருந்தாரோ, அவ்வாறு பிளாரன்ஸ் நகரத்துப் புகழ் வெளிச்சத்திற்கு லியர்னடோ தீபமாகத் திகழ்ந்தார். பறக்கும் ஓர் இயந்திரத்தைக் கூட இவர் செய்தார். அக்காலத்தில் நிலவிவந்த விஞ்ஞான எண்ணங்களை நடைமுறைப் படுத்தப் பாசன வசதிகளும், வடிகால்களும், கோட்டைகளும் மிலான் நகரத்தில் இவர் உருவாக்கிக் காட்டினர். இவரது அரிய பணிகளுக்கும், கலை உணர்வுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு 'லியர்னடோ' விமான நிலையம் ஓங்கி உயர்ந்து விரிந்து பரந்து நிற்கின்ற காட்சியை நாங்கள் கண்டோம். இவருக்கு நிகராக ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டடக் கலை பற்றி இத்தாலிநாடு முழுவதும் உச்சரிக்கப்படுகிற மற்றொரு

பெயர் தான் 'மைக்கேல் ஆஞ்சலோ' என்பதாகும்.

மனித முயற்சியினால் அமைக்கப்பட்டதா? அதுவும் பதினைந்தாம் நூற்றாண்டில்? என்று அதிசயித்து நாமும் சிலையாக நின்று விடுகிறோம்; அவரது கைத்திறனால் உயிர் பெற்று நிற்கும் சிலைகளைக் காணும்போதும், உயர்ந்து நிற்கும் தொன்மையான கட்டடங்களைக் காணும் போதும்! எளிய ஏழைக் குடும்பத்தில் பிறந்து, இன்று இத்தாலி நாட்டைச் சுற்றுலாப்பயணிகளின் மூலம் பெரிய வருமானத்துக்குரிய நாடாக மாற்றிய பெருமைக்குரிய விற்பன்னர் தான் மைக்கேல் ஆஞ்சலோ.

ரோம் நகரில் சலவைக் கற்களால் கட்டப் பெற்றுள்ள செயின்ட் பீட்டர்ஸ் ஆலயத்திற்கு நாங்கள் சென்றபோது அயர்ந்து விட்டோம். எதைப் பார்ப்பது? எதை விடுவது? புரியவில்லை. ரோம் போன்ற இடங்களில் நாகரிகம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தாலும், இன்றைக்கும் உடல் தெரிய உடுத்திவருகிற ஆண்களும் பெண்களும் அந்த செயின்ட் பீட்டர்ஸ் ஆலயத்திற்குள் அனுமதிக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதுதான். ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒரு டேப் ரிகார்டரை என் தோளில் மாட்டி விட்டு, அதன் 'மைக்'கை என் காதில் நுழைத்து விட்டார்கள். என்னைப் போலவே நூற்றுக் கணக்கானவர், அந்த ஒலிப்பதிவு சாதனங்களை வாங்கி மாட்டிக் கொள்ளுகிறார்கள். அதற்கு வாடகை உண்டு. செயின்ட் பீட்டர்ஸ் ஆலயத்தில் நாம் குறிப்பிடப்பட்ட வழியில் சென்று கொண்டேயிருந்தால் அந்த ஒலிப்பதிவுக் கருவி, அங்குள்ள அற்புதங்களையெல்லாம் நம் காதில் விளக்கிச் சொல்லிக் கொண்டேயிருக்கிறது; ஆங்கில மொழியில்.



ஆனால் நாலு வாக்கியங்களுக்கு ஒரு வாக்கியம், மைக்கேல் ஆஞ்சலோவைப் பற்றி இருக்கிறது. மைக்கேலின் ஓவியம் அல்லது சிற்பம்அல்லது கட்டட அமைப்பு இப்படி எந்தப் பெருமையிலும் அவனது பெயர் இணைக்கப்பட்டே இருக்கிறது. ஆலயம் முழுவதையும் சுற்றிப்பார்க்க: ஆங்காங்குள்ள ஓவிய நுணுக்கங்களை ரசித்திட; சிற்பங்களின் அழகைப் பருகிட எங்களுக்குக் கிடைத்த சில மணி நேரம் நிச்சயமாகப் போதாது. குறைந்தது மூன்று நாட்களாவது அந்த ஆலயத்தைச் சுற்றிப் பார்த்தால் தான் கலை உள்ளத்தில் நிறைவு ஏற்படமுடியும். எந்தப் பிடிப்பும் இல்லாமல் வானளாவிய மணிமண்டபம் உயர்ந்து நிற்கிறது. குறுக்கு உத்திரங்கள் இல்லாமல் பிரம்மாண்டமான மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. தூய வெள்ளைச் சலவைக் கற்கள் நம்மோடு மேரியாக நின்று பேசுகின்றன. இயேசுவாக நின்று கனிவுடன் நோக்குகின்றன. கன்னிப் பெண்களோ; கற்சிலைகளோ என ஐயுறத்தக்க வண்ணம், சிலைகள் புன்னகை பூத்து நிற்கின்றன. முன்னாள் போப்புக்களின் சிலைகள், நம் முன்னால் போப்புக்களே நிற்பது போன்ற மரியாதை உணர்வைத் தூண்டுகின்றன. கழுத்து வலியெடுக்க அண்ணாந்து பார்க்க வேண்டும். வைத்த கண் எடுக்காமல் சிற்பங்கள், ஓவியங்களைக் காணவேண்டும்; பசியேதெரியாது போலிருக்கிறதே; இங்கேயே இருந்து விடலாமா என்று தான் தோன்றுகிறது. ஆனால் அதற்குள் வாடிகன் சிட்டியில் போப்பாண்டவரைச் சந்திப்பதற்காகக் குறித்த நேரம் நெருங்கி விடுகிறது. ரோமிலுள்ள இந்தியத் தூதுவர் ஆலயத்தினர் அவசரப்படுத்துகின்றனர். உயிர்பெற்று விளங்கும் அந்த எழில்மாடத்தை விட்டுப் போப்பாண்டவரைக் காணப் புறப்பட்டோம். நாங்கள் கண்டுகளித்த அந்த ஆலயத்திலிருந்து சிறிது தொலைவில் தான்



செயின்ட் பீட்டர்ஸ் ஆலயத்தில் உள்ள சிலை.

வாடிகன் சிட்டியில்போப்பாண்டவர்வாழ்ந்திடும்இடம்இருக்கிறது. 'வாடிகன்' என்பது, ஒரு குன்றின் பெயர். டைபர்நதியின் மேற்குக் கரையிலுள்ள அந்தக் குன்றின் மீது பெருங் கட்டடங்கள் கட்டப்பட்டு ஒரு சிறிய நகரை உண்டாக்கியதால், அந்த இடத்திற்கு ''வாடிகன் சிட்டி'' என்று பெயர் வழங்கலாயிற்று. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் இந்தக் கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டு, பதின்மூன்றும் நூற்றாண்டிலும் புதுப்பிக்கப்பட்டனவாம். ரோமாபுரிப் போப்பாண்டவர்கள் இந்த இடத்தில் 1377ஆம் ஆண்டு முதல் வாழ்ந்திடத் தொடங்கினர். இந்தக் கட்டடங்களும், இதனையொட்டியுள்ள செயின்ட்பீட்டர் ஆலயமும் தலைமுறை தலைமுறையாக விரிவாக்கப் பெற்று அழகு செய்யப்பட்டுள்ளன.

அதனால் இங்கு பல தலைமுறைகளின் கட்டடப் பாங்கினைக் காணலாம். வாடிகனில் உள்ள சிஸ்டைன் கோயிலின் கூரையில் மைக்கேல் ஆஞ்சலோ தீட்டிய கேலிச் சித்திரங்கள் நம்மைக் கவர்ந்திழுக்கின்றன. மிகப்பெரிய நூலகமும், தொல்பொருட்காட்சி சாலைகளும் வாடிகன் சிட்டியின் கீர்த்திக்கு மெருகூட்டுகின்றன. உலகக் கத்தோலிக்க மக்களின் புனிதமிகு தலைவராக விளங்குகிற போப்பாண்டவரைக் காண நாங்கள் அந்த மாளிகைக்குள் நுழைந்தோம். சில மண்டபங்களைத் தாண்டியதும், என்னையும் என் துணைவியையும் மட்டுமே பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக எனக்குச் சொல்லப்பட்டது. அதில் எனக்குப்பெரும் ஏமாற்றம் விளைந்தது. என்னுடன் வந்துள்ள மற்ற நண்பர்கள் அனைவரையும் அனுமதிக்காவிட்டாலும், கிறித்துவ மதத்தைச்சேர்ந்த டாக்டர் ஆபிரகாம் அவர்களையாவது அனுமதிக்க வேண்டுமென்று சொல்லியனுப்பினேன். சிறிது நேரத்திற்கெல்லாம், மூவரும் வரலாம் என்று தகவல் வந்தது. என்னுடன் இருந்த மற்ற நண்பர்களின்முகம் மாறிவிட்டதை நான் உணராமல் இல்லை. எப்படியும் அவர்களை உள்ளே அழைத்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் போப்பாண்டவர் அறை நோக்கிச் சென்றேன். சில விநாடிகளில் அவர் வந்தார். தூய வெண்ணிற ஆடை! களங்கமில்லாத புன்னகை! அருள் ததும்பி நிற்கும் முகம்! அவ்வாறே அகமும் இருக்கும் என்பதற்கான பண்புநிறை பேச்சு! புதிதாக இருவர் சந்திக்கிறோம் என்ற உணர்ச்சியே இல்லாத நிலை! மனைவியையும் டாக்டரையும் அறிமுகப்படுத்தினேன்; குடும்பநலன், குழந்தைகள் நலன் விசாரித்தார். இந்திய நாட்டுக்குத் தான் வந்தபோது இனிய வரவேற்பு அளித்தது குறித்துப் பசுமை மாறாத நினைவோடு நன்றியைத் தெரிவித்தார். அண்ணா அவர்கள் அவரைச் சந்தித்ததையும், கோவா விடுதலை வீரர்களைச் சிறை மீட்கத் துணைபுரியுமாறு போப்பாண்டவரைக் கேட்டதையும் நினைவுபடுத்தியபோது, அவர் மகிழ்ந்தார். அந்த மகிழ்ச்சி, அண்ணாவின் மறைவை எண்ணி மின்னல் வேகத்தில் மறைந்ததையும் நான் உணர்ந்தேன். தமிழ் நாட்டுக்கும் ரோமாபுரிக்குமுள்ள



பழைய வரலாற்றுக் காலத் தொடர்புகளையெல்லாம் நான் விவரித்தபோது அவர் முகத்தில் நான் கண்ட பொலிவை மறந்திடவே இயலாது. ஜெபமாலையை எடுத்து தயாளுவிடம் தந்தார்'. எத்தனை குழந்தைகள் என்று கேட்டு அத்தனை குழந்தைகளுக்கும் அளிக்குமாறு பதக்கங்களை அள்ளிக் கொடுத்தார். போப்பாண்டவர் உருவம் அமைந்த பெரிய பதக்க மொன்றை என்னிடம் அளித்தார். இன்னும் ஏதாவது இருக்கிறதா எங்களுக்குத்தருவதற்கு, என்று அவரது கருணை பொழியும் கண்கள்தேடிக் கொண்டே யிருந்தன. மற்றும் சில நண்பர்கள் என்னுடன் வந்தார்கள். அவர்கள் தங்களைக் காண முடியாமல் வெளியே இருக்கிருர்கள் என்றதும் போப்பாண்டவரின் விழிகள் அன்புக்கட்டளை பிறப்பித்தன. சில நிமிடங்களில் வெளியில் இருந்த நண்பர்கள் மகிழ்ச்சி கூத்தாட உள்ளேவந்து போப்பாண்டவரை வணங்கினர். மேலும் சிறிது நேரம் உரையாடி விட்டு, அவரை வணங்கித் திரும்பினேம்.



என்னே அன்பு!

என்னே பண்பு!

எவ்வளவு அடக்கம்!

எத்துணை அமைதி! அதனுல் தானே உலகக் கத்தோலிக்க மக்களின் உள்ளங்களில் எல்லாம் அவர் குடியேறியிருக்கிருர்; என எண்ணியவாறு வாடிகன் சிட்டியை விட்டுப் புறப்பட்டோம்.

ரோம் நகரின் வேருெரு பகுதியில் நீரூற்று ஒன்று இருக்கிறது. அந்த நீரூற்றின் சிறப்பே அங்கு அமைக்கப்பட்டுள்ள சிலைகளால் தான் என்று கூறினுர்கள். அங்கே போக ஆவல் எழுந்தது. சென்ருேம். சிலைகளா அவைகள்? அப்பப்பா! எவ்வளவு உயரம்? எவ்வளவு கம்பீரம்? வளைவு—நெளிவு -அந்தக் கலையின் எழிலே எழில். அந்தச்சிலைகளின் ஒரத்தில் நீரூற்றுக்கள். நீர்தேங்கிப் பின்னர், வழிந்தோடும் சிறிய தடாகம்போன்ற அமைப்பு. அதற்குக் கற்களால் ஆன சுவர்கள். அங்கே வருகிறவர்கள் பின்னுல் திரும்பிக் கொண்டு, அந்தத் தடாகத்தில் நாணயங்களை வீசி எறிகிருர்கள் அப்படி வீசி எறிந்தால், மீண்டும் ஒரு முறை ரோமாபுரிக்கு வரக் கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பது அவர்களது நம்பிக்கை! அந்த நாணயங்களை எடுப்பதற்கு அந்தப்பகுதியில் உள்ள சிறுவர்கள் தயாராக இருக்கிருர்கள். அவர்கள் யாரும் தண்ணீரில் இறங்கக் கூடாதென்று தடை! அதற்காக அந்த இளஞ்சிருர் செய்யும் தந்



'' அது கண்ணாடிக்கடையாகவே இல்லை ஜொலிக்கும் வைரமணிகள், நவரத்தினங்கள் தொங்கிடும் ஒரு மாய மாளிகையாகவே எனக்குத் தோன்றியது''

திரம் வேடிக்கையானது. தூண்டில்கள் போலக் குச்சிகளைத் தயாரித்து, அவற்றின் நூல் முனையில் காந்தத்துண்டுகளைக் கட்டிவிட்டு, அவைகளைத் தண்ணீருக்குள் அமிழ்ந்து கிடக்கும் நாணயங்களின் மீது போடுகிறார்கள். குறிபார்த்துச் சரியாகப் போட்டுவிட்டால் அந்தக் காந்தத் துண்டில் நீரில் கிடக்கும் நாணயம் ஒட்டிக் கொள்கிறது. இதில் அங்குள்ள சிறுவர்களுக்கு நல்ல வருமானம்.

அந்த நீரூற்றுக்கு அண்மையில் உள்ள ஒரு கண்ணாடிக் கடையில் நுழைந்தோம். கண்ணாடியில் என்னென்ன பொருள்களைச் செய்ய முடியும் என்பதை அங்கு சென்றால் தான் புரிந்து கொள்ள முடியும். சிறிய நீர்த்தொட்டியில் வண்ண மீன்கள் நீந்துவது போல ஒன்று! அருகில் சென்று கையில் எடுத்துப் பார்த்தேன். நீருமில்லை, உயிர் மீனுமில்லை, எல்லாமே ஒரு அகன்ற கண்ணாடித் துண்டுக்குள் செய்யப்பட்ட கலைத்திறன் தான்! அதன் விலை கேட்டேன்-நமது நாணய மதிப்புக்கு ஆயிரம் ரூபாய் ஆயிற்று! பேசாமல் வைத்துவிட்டு வேறு பக்கம் போய் விட்டேன். அது கண்ணாடிக் கடையாகவே இல்லை. ஜொலிக்கும் வைரமணிகள், நவரத்தினங்கள் தொங்கிடும் ஒரு மாய மாளிகையாகவே எனக்குத் தோன்றியது.

(தொடரும்)

புது ஆற்றில் பொங்கி ஓடிய புது வெள்ளத்திற்குத்தான் எவ்வளவு வேகம்—

கால வெள்ளத்தின் கணக்கைப் புரிந்து கொள்ளாமல்—ஒரு காலத்தில் அகழியின் ஒரு பகுதியாக இருந்த இடம் ஆற்றின் ஒரு பகுதியாக மாறியதாலோ என்னவோ ஆனந்தத்தோடு பொங்கியோடுகிறது புனல்—அந்தக் காவிரிக் கால்வாயில் !

உலகின் ஏற்றத் தாழ்வுக்கு, இல்லை, இல்லை ; உலகியலின் உண்மைத் தோற்றத்துக்கு இதோ எடுத்துக்காட்டுகள்.

அங்கே—

வரலாற்றை நன்கு சொல்லி, வாழ்ந்திருந்த நிலையைச்சொல்லி, வந்துற்ற நிலையையும் சொல்லி மைய அரசின் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையிலிருந்து எப்பொழுது விடுபடுவோமோ புது வாழ்வு பெறுவோமோ என்று ஏங்கித் தவித்தாலும் வானுயர்ந்து நிற்கும் பெருவுடையார் கோவில்.

இங்கே—

எதையும் எண்ணிப் பாராது விரைந்து ஓடும் வெள்ளப்பெருக்கு....



மாலைமயங்கும் அந்திப் பொழுதில் சிந்தனை வயப்பட்டுக் கோட்டையின் மேல் பகுதியில் நின்று கொண்டு பொங்கியோடும் புனலைப் பார்த்துக் கொண்டிருந்த என்னை அந்தக் கம்பீரமான குரல் மறுபக்கம் திருப்பியது.

**''உன்னைத்தான் தம்பி!''**

இப்படி அழைத்திடும் குரலுக்குச் சொந்தக்காரர் எனக்கு அறிமுகமானவர் ஒருவர் உண்டு. அவர் அல்லர் இவர். ஆனால்—

அதே அறிவொளி வீசிடும் கண்கள். புன்னகை சிந்திடும் முகம். உயரத்தில் மட்டும் மாற்றம்: நெடிதுயர்ந்த வலிவான உடல் தோற்றம்.

அவரைப் பார்த்துக் கொண்டிருந்தேனே தவிரப் பதில் சொல்ல இயலவில்லை.

''உன்னைத்தான் தம்பி''-மீண்டும் அழைத்தார்.

''என்ன ஐயா''—உருவத்தைப் பார்த்ததாலோ என்னவோ என் குரலில் மரியாதைமிகுந்தது.

''ஓய்வு தானே தம்பி, கொஞ்ச நேரம் உரையாடலாமா ?''

என் மன நிலையைக் குறிப்பறிந்து கேட்பது போல இருந்தது. ஆர்வத்தோடு உரையாடத் தொடங்கினேன்.

''பழம்பெரும் நகரான தஞ்சையைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறேன்.''

''நானும் அதையே தான் தம்பி நினைத்துப் பார்க்கிறேன்....''

''ஆமாம் ஐயா, ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னாலே அப்பரடிகள் திருவீழிமிழலைத் திருத் தாண்டகத்தில் **'தஞ்சைத் தளிக் குளத்தார்'** எனவும் அதற்கு அடுத்த நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் **'வம்புலாஞ் சோலை மாமதில் தஞ்சை'** என்றும் பாடியிருக்கிறார்கள். அக் காலத்திலேயே தஞ்சை சிறந்த மதில் அரண் உடையதாக இருந்திருக்கிறது.''

''ஆயிரத்து இருநூறு ஆண்டுகட்கு முன்பு முத்தரையர் என்ற பட்டத்துடன் அரசாண்ட சிற்றரசர்களுக்கு இது தலைநகராக இருந்தது தம்பி !''

''ஆமாம் ஐயா, திருக்காட்டுப்பள்ளியின் பக்கத்திலுள்ள செந்தலைக் கோயிலில் காணப்படும் கல் வெட்டுக்களால் 'பெரும்பிடுகு முத்தரையன்' என்ற சுவரன் மாறன் என்பவர் **'தஞ்சைக்கோன்'**, **'தஞ்சை நற்புகழான்'** என்று அழைக்கப்பட்டதாக அறிகிறோம். அதன் பிறகு பிற்காலச் சோழர்கள் காலத்தில் தான் தஞ்சை பெரும்புகழ் எய்தத் தொடங்கியது.''

''தம்பி, கற்றுணர்ந்தவனாய் இருக்கின்றாய். எனக்குத் தெரிந்த சில தகவல்களையும் சொல்கிறேன் கேள்.''—அவர் தொடர்ந்தார். வீரம் செறிந்த அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

''பிற்காலச் சோழர்களில் முதல் மன்னரான விஜயாலய





சோழர்தான் தஞ்சை மாநகரைக் கைப்பற்றித் தன் தலைநகராக வைத்துக் கொண்டார். அவர் 'தஞ்சை கொண்ட கோப்பர கேசரி' என்று அழைக்கப்பட்டார்...."

''இந்தத் தகவல்களை மட்டுமல்ல, சோழ மன்னர்களின் ஆட்சி முறைகளைப் பற்றியும் செந்தலைக் கல்வெட்டுக்கள், திருவாலங்காட்டுச் செப்பேடுகள், கன்னியாகுமரிக் கல்வெட்டு, வீர சோழபுரம் கல்வெட்டு முதலியவை நமக்குச் சொல்லும் செய்திகள் கொஞ்சமா?' என்று கூறிவிட்டுப் பெருமூச்சுவிட்டேன்

''தம்பி இவ்வளவு இளம் பருவத்திலேயே நிரம்பச் செய்திகளை அறிந்திருக்கிறாயே..! உன்னைச் சந்தித்ததில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.''

''ஐயா, அக்காலத்தில் முடிமன்னர் ஆட்சி என்றாலும் குடிகளின் நன்மை கருதி எவ்வளவு செய்திருக்கிறார்கள் தெரியுமா'' விஜயாலய சோழர் பேரனும் ஆதித்த சோழர் புதல்வனுமாகிய முதற் பராந்தகச் சோழர் மக்கள் நலங் கருதித் தன் தலைநகர்க்கு வடபால் வெட்டிய ஆறுதான் இப்பொழுது 'வடவாறு' என்று அழைக்கப்படும் 'வீரசோழ வடவாறு''

''தம்பி, இவ்வளவு விவரமாக அந்தப் பழைய வரலாறுகளை எல்லாம் நீ சொல்லும்பொழுது எனக்கு எப்படி இருக்கிறது தெரியுமா?.. உம்.. உன்னிடம் இக்காலத்தையும் இப்பொழுதுள்ள நிலையையும் பற்றி அறிந்து கொள்ளலாம் என்று எண்ணினேன். நீயோ என் காலத்துக்கே இழுத்துச் செல்கிறாயே..''

''ஐயா, நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே..! எனக்குப் புரியும்படி உரையாடுங்களேன்!''

''தம்பி, தவறு என்னுடையதுதான்! முதலில் என்னை உன்னிடம் அறிமுகப் படுத்திக் கொள்ளவில்லையே..''— தங்கு தடையின்றிக் கம்பீரமாகப் பேசினார். அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

''தம்பி, இக்கால இளைஞனை உனக்கு, மறைந்த தமிழ்மன்னர்களின் ஆண்டுக் கணக்குப் புரியாது. உன் போன்றார்க்கு இப்பொழுது பழக்கப்பட்டிருக்கும் கி.மு. கி.பி. ஆண்டுக் கணக்குகளில் சொல்கிறேன். கி.பி. 985 முதல் 1014 வரையில் சோழ மண்ணில் ஆட்சி புரிந்த முதல் இராச ராச சோழன் தான் நான்..''

வியப்பால் என் கண்கள் விரிந்தன. ஆனால் இதழ்களோ இறுக ஒட்டிக் கொண்டன. என்னால் பேசமுடியவில்லை!

''தம்பி, கனவா, நனவா, என்று சிந்திக்கிறாயா? எதுவாக இருந்தால் என்ன? நம் உரையாடல் ஏன் தடைப்பட வேண்டும்?''

''ஐயா, தங்களை எப்படியோ சந்தித்ததில் எனக்கு மகிழ்ச்சிதான். உங்களிடம் பல விவரங்களைப் பற்றிக் கேட்டறிந்து கொள்ளலாமல்லவா?

''ஆமாம், உன்னிடத்திலிருந்து நானும் சில தகவல்களை அறிந்து கொள்ள முடியுமே தம்பி!

''ஐயா முதலில் எனக்குத் தஞ்சையைப் பற்றிய செய்திகளைச் சொல்லுங்கள்: பின்னால் நீங்கள் கேட்கும் விவரங்களை எனக்குத் தெரிந்த வரையில் சொல்ல முயல்கின்றேன்''—என்று இந்தக் காலத்து எழுத்தாளர்கள் பாணியில் சொல்லிவிட்டுத் தொடர்ந்தேன்.

''ஐயா, கருவூர்த் தேவர் பாடிய திருவிசைப்பாப் பாடல்களால் தஞ்சை நகர், கடல் போன்ற ஆரவாரம் மிகுந்த தெருக்களையும் நெடுநிலை மாடங்களையும், யாழ் பயில் கூடங்களையும், நாடக சாலைகளையும், கழுநீர்ப் பொய்கைகளையும், நந்த வனங்களையும் உடையது என்பதை அறிய முடிகிறது. தாங்கள் ஆண்ட இந் நகர் பற்றிய வேறு தகவல்களை உங்கள் மூலமாகவே அறிய விரும்புகிறேன்.''

**அட்டைப் படத்தை அணி பாராண்ட இராசராச பக்கத்திற்கு அழைத்துவந்து யாடுவதற்கு வலுவான**

'' தம்பி, அந்நாளில் தஞ்சை நகர் 'உள்ளாலை' 'புறம்படி' என்ற இருபெரும் பகுதிகளை உடையதாக இருந்தது. உள்ளாலை என்பது உள்நகராகும், 'புறம்படி' என்பது புற நகராகும். வீர சோழப் பெருந்தெரு, சயங்கொண்ட சோழப்பெருந்தெரு, சூரசிகாமணிப் பெருந்தெரு, வானவன் மாதேவிப் பெருந் தெரு, கந்தர்வத் தெரு, வில்லிகள் தெரு ஆனையாட்கள் தெரு, ஆனை நடவுவார் தெரு, மடைப்பள்ளித் தெரு, சாலியத் தெரு, முதலான பெருஞ்சாலைகளும், திருபுவன மாதேவிப் பேரங்காடி, கொங்காள் வாரங்காடி, இராச இராச பிரமராயன் அங்காடி முதலான கடை வீதிகளும், உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார்

வேளம், அருமொழித் தேவத் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளம், பஞ்சவன் மாதேவியார் வேளம், அருமொழித் தேவத் தெரிந்த திருப்பரிநலத்தார் முதலான அரண்மனைப் பணியாளர் இடங்களும் இருந்தன.''

''இவ்வளவு பெரிய நகரம், முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் கி.பி. 1219-ல் படையெடுத்து வந்தபொழுது பேரழிவிற்கு ஆளாகியது. ஆனால் மன்னவா! உங்கள் பெயர் சொல்லி நிற்கும் இந்த 'இராசராசேச்சுரம்' என்ற திருக்கற்றளி அசாதாரணமானதல்லவா?''

''தம்பி, 216 அடி உயரமுள்ள நடுவிமானத்தோடு 793 அடி நீளமும் 397 அடி அகலமுமுள்ள இப்பெருங்கோயிலைக் கட்டியபோது பூரித்து நின்றேன். ஆனால், இன்றுள்ள அதன் நிலையை எண்ணும்போது....''

**செய்யும் ஆலயமும்**
**சோழனும் உங்களை இந்தப்**
**உள்ளம் திறந்து உரை**
**அடித்தளம் உண்டு!**

''ஐயா, உங்கள் மனநிலையில் உள்ள தமிழக அரசு அரும்பெரும் செல்வமான இக்கோயிலைப் பாதுகாக்க முயற்சி செய்து வருகிறது.''

''அலட்சியமாக இல்லாமல் ஆவன செய்து வருகிறீர்களே; அகமகிழ்கிறேன்!''

''ஐயா, நாங்கள் அக்கறையின்றி வாழ்ந்த காலமும் உண்டு. ஆனால், அந்நிலை இன்று மாறிவிட்டது. நன்றி மறவாமல் தஞ்சைநகரில் உங்களுக்குச் சிலையெடுக்க விருக்கிறோம்.''

''நன்றி, தம்பி, நன்றி!''

''ஐயா, உங்களைமட்டுமல்ல. இந்தத் தஞ்சைத் தரணியை பதின்மூன்றும் நூற்றாண்டின் இடையில் ஆளத்தொடங்கிய நாயக்க மன்னர்களில் முதல்வரான சேவப்ப நாயக்கரையும் நாங்கள் மறக்கவில்லை. சிவகங்கைக் கோட்டையும் சேவப்பன் ஏரியும் அவரால் தானே அமைக்கப்பட்டன! கி.பி. 1676-ல் தஞ்சையை ஆளத்தொடங்கிய மராட்டிய மன்னர்களில் சிறந்து விளங்கிய இரண்டாம் சரபோஜி மன்னரையும் நாங்கள் மறக்கவில்லை,

''ஏட்டுச் சுவடிகளையெல்லாம் தேடிக் கொணர்ந்து அரண்மனையில் 'சரஸ்வதிமால்' என்னும் அறிவுக் களஞ்சியத்தைத் தேடிவைத்த பெருமகன் அல்லவா.......... அவரை மறப்போமா?''

''ஐயா, அதுமட்டுமல்ல, உங்கள் போன்ற மன்னர் தேடி வைத்த கலைச் செல்வங்களையெல்லாம் திரட்டி வைத்து கலைக்கூடம் ஒன்று உருவாக்கியுள்ளோம்.

''மன்னவா, இன்றைய தஞ்சை நகரம் ஒருமாவட்டத்தின் தலைநகராக விளங்குகிறது. தஞ்சைதான் எதிலும் முன்னணி என்று கற்றறிந்தோர் புகழ்கின்றனர்.

''இந் நகரில் அமைந்திருக்கும் மணிக்கூண்டாகட்டும், பேருந்து நிலையமாகட்டும் சிறப்புமிகுந்தவைகளாக அமைந்திருக்கின்றன. மூவேந்தர் காலத்தில் வளர்த்த தமிழை மேலும் வளர்க்கக் கரந்தையிலே தமிழ்ச் சங்கம், பிணிபோக்க வழி கற்பிக்கும் மருத்துவக் கல்லூரி, இப்படி அநேகம் வளர்ந்துள்ளன. எப்படி எப்படியோ மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் இம்மண்ணிலுள்ள மக்கள், உங்களை என்றும் மறந்ததில்லை; ஆண்டுதோறும் விழா வெடுக்கிறோம்.''

—நீண்ட நேரம் தொடர்ந்து பேசினேன். அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த அவர் பேசலுற்றார்:

''தம்பி செந்நெல் விளையும் இம்மண்ணில் செய்ந்நன்றி மறப்பவர்கள் பிறப்பதில்லை என்பதை நான் நன்கறிவேன். ஆனாலும், ................''

''மன்னவா மீண்டும் சொல்லுகிறேன். காவிரி நீரால், ஈரமாகும் தஞ்சைத்தரணியில் வளங்கொஞ்சும் நஞ்சைக்கு' மட்டும் பஞ்சமில்லை என்று எண்ணிவிடாதீர்கள். வற்றாத கலைஞானத்திற்கும் இங்கே பஞ்சமில்லை. கல்வி அறிவுக்கும் பஞ்சமில்லை.''

ராஜராஜசோழர் உரக்கச் சிரித்தார். ''தம்பி, நான் உன்னிடம் குற்றம் குறை சொல்ல வரவில்லை. மாண்ட புகழை மீண்டும் பெற்றிட வேண்டும் என்ற விருப்பத்தால் சொல்கிறேன்.''

''ஐயா, உங்கள் எண்ணங்களை ஈடேற்றும் பணியில்தான் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். நீங்கள் ஆண்ட தஞ்சை நிலம் தான் தமிழ்நில மக்களுக்கு உண்டி கொடுக்கும் உயிர்நிலமாக விளங்குகிறது. உங்கள் முன்னோர் ஆண்ட பூம்புகார் கடலுக்கு இரையானாலும் இன்று



புத்துருவம் பெற எத்தனை புது முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்!''

'' தம்பி, தஞ்சை என்றால் தலையாட்டி பொம்மையும், கதம்பமும், குடமிளகாயும் நெட்டிவேலையும் என்று மட்டும் எண்ணாமல் எல்லா விவரங்களையும் உன்னைப்போல் அனைவரும் உணர வேண்டும் என்று விரும்புகிறேன்........... ஏனெனில் தஞ்சை மண்ணுக்குத் தனியாகச் சில பெருமைகள் உண்டு....''

அவர்வார்த்தையைமுடிப்பதற்குள் சொல்லத் தொடங்கினேன். '' இங்கேதான் இந்துக்களும் முகமதியர்களும் வேறுபாடு காட்டாமல் செல்லும் நாகூர் ஆண்டவர் கோவில் உண்டு. கிறித்துவர்களும் மற்றவர்களும் விரும்பிச் செல்லும் வேளாங்கண்ணி கோவிலும் இருக்கின்றது.''

'' எங்கள் முன்னோர் போற்றிய பழம் பெரும் கோவிலான ஆரூர்ப் பூங்கோயில்....''

'' ஆம், ஐயா இன்று கமலாலயம் என்று வழங்கப்படும் அக்கோயிலின் தேரோட்டமும் இவ்வாண்டு நடைபெற்றது. தென்னகத்திலேயே திருவாரூர்த் தேர்தான் பெரிது.''

'' தம்பி மீண்டும் பழைய காலச் செய்திகளையல்லவா சொல்லிக் கொண்டிருக்கிறாய்................ புதிய செய்திகளைச் சொல்லேன்....''

''ஐயா, தாங்கள்தான் பழைய செய்திகளுக்கு மீண்டும் இழுத்துச்சென்றீர்கள்..........''

'' ஆர்வம் மிகுதியின் விளைவு............. எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்பு ஒரு தமிழனுடன் உரையாடுகிறேன் எல்லாவற்றையும் பேசவேண்டும் என்பதால்தான் தம்பி இப்படி மாறி மாறிப் பேசுகிறேன்''

''மன்னவா, உங்கள் ஆர்வம்



புரிகிறது. அதனால் இன்றைய நிலையைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். கேளுங்கள்........ உணவு உற்பத்தியில் மட்டும் சிறந்து விளங்கிய தஞ்சைத் தரணியில் நவீன அரிசி ஆலை உண்டு, நெல் உலர்த்தும் ஆலை சர்க்கரை ஆலை, கூட்டுறவு நெசவாலை, சைக்கிள் தொழிற்சாலை, தொழிற்பேட்டைகள் என்று பல்கிப் பெருகியுள்ளன பலவகைத் தொழில்கள்!

''உங்கள் பழைய தலைநகரான பழையாறைக்குப் பக்கத்திலுள்ள குடந்தை என்ற கும்பகோணத்தில் பாத்திரத்தொழில்கள், பட்டுநெசவுத் தொழில்கள் பெருகியுள்ளன.

'' எங்கும் நவீனமுறையில் சாகுபடிகள். கலை வளர்க்கும் பள்ளிகள்......உம்.... இந்த இடங்களை நீங்கள் நேரில் காண வேண்டும்........!''

'' தம்பி, நீ சொல்லிய பிறகும் நேரில் காண வேண்டுமா? என்னரும் தஞ்சை நிலத்தார் உன்னத இமயமலைபோல் உயர்ந்து விளங்கும் காட்சியைக் காண்கிறேன்....... வருகிறேன் தம்பி..........வளர்க! வாழ்க!''

* * *

நிலவொளி என் மீது படர்ந்துள்ளது. புது ஆற்றில் ஓடும் வெள்ளத்தின் வேகம் ஏற்படுத்தும் சலசலப்பு—உறக்கத்தில் ஆழ்ந்துவிட்ட அழகு நகரத்தின் அமைதியில் ஓர் அலாதியான ஓசையாகப் பரவுகிறது.

தஞ்சைப் பெரிய கோவிலைச் சுற்றி வந்த நான் களைப்பின் மிகுதியால் கோட்டைச் சுவரில் சாய்ந்து உறங்கியது........ மேகத்தால் மறைக்கப்படும் நிலவொளி போல மங்கலாக நினைவுத்திரையில் தெரிகிறது.

—இளவல்.

ஏன்மா! இந்த ஆளுங்க தண்ணீருக்குள்ளே பாயிறாங்க! ஆனா வெளியே வரும்போது உன்னை மாதிரி அவுங்க வாயிலே மீனைக் காணோமே!





என்ன சார்! மரத்திலே தலை கீழாத் தொங்குறீங்க?

வெளவால் சுடப் போகிறேன்! அதனால்தான்!!

# நாற்றையும்.......



# .......சுருட்டலாம்

வேளாண்மைக் கல்லூரி,
கோவை-3,
1—9—'70.

அன்புள்ள அப்பா,

தங்கள் கடிதம் கிடைத்தது. நான் நன்கு படித்து வருகின்றேன். இன்னும் சம்பாவுக்கு நாற்று விடவில்லை என்று எழுதியிருந்தீர்கள். இன்னும் போதிய மழை பெய்யாததால், ஏரியில் நீர் பிடிக்கவில்லை என்றும், சம்பா பட்ட நடவுக்குக் கால தாமதமாகும் போல் உள்ளது என்றும் கவலையுடன் குறிப்பிட்டுள்ளீர்கள்.

இக் கடிதம் தங்களுக்குக் கிடைப்பதற்குள் போதிய மழை பெய்துவிடும் சூழ்நிலை உள்ளது. சம்பா நாற்றுவிடக் காலதாமதமாகி விட்டதே என்று கவலைப் படாமல், நான் குறிப்பிடுகின்ற ''தபாக்'' முறையில் நாற்று விடுவீர்களேயானால், பருவந்தவறாமல் நட்டு விடலாம் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

''தபாக்'' நாற்றங்கால் என்பது பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து, நமது நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் நாடு முதலமைச்சர் மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள், இந் நாற்றங்காலைச் சென்ற ஆண்டு தஞ்சையில் பார்வையிட்டபோது ''சுருட்டுப்பாய் நாற்றங்கால்'' என்று மிகவும் பொருத்தமாகப் பெயரிட்டார்கள். இது ''சுருட்டுப்பாய் நாற்றங்கால்'', ''சுருள் பாய் நாற்றங்கால்'' என்றெல்லாம் தற்பொழுது வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் இம்முறை பிரபலமாகியது. தற்பொழுது இம்முறை செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, கோவை ஆகிய மாவட்டங்களிலும் பரவி வருகிறது.

சேற்று நாற்றங்கால் தயாரித்தால், நீங்கள் சாதாரணமாக நாற்றுவிட்ட 30 நாட்களுக்குப் பிறகே நாற்றுப் பறித்து நட முடியும். ஆனால் ''தபாக்'' முறையில் நாற்று விட்டால், 12 முதல் 14 நாட்களிலேயே நடவு செய்து விடலாம். அது மட்டுமல்ல; சாதாரணமாக ஒரு ஏக்கர் நடவு செய்ய 10 அல்லது 12 சென்ட் பரப்பில் நீங்கள் சேற்று நாற்றங்கால் தயாரிப்பீர்கள். ஆனால் இம்முறையில் நாற்றுத் தயாரிக்க ½ சென்ட் பரப்பே போதுமானது.

அப்பா! இது உங்களுக்கு விந்தையாகத் தெரியலாம்! இன்னும் சொல்லப் போனால், இம்முறையில் நாற்றுத் தயாரிக்க நிலமே (மண்) தேவையில்லை! நம் வீட்டு முற்றத்திலும், சிமெண்ட் களத்திலும், மொட்டை மாடியிலும், வீட்டுத் தோட்டத்திலும் கூட ''தபாக்'' நாற்றங்கால் தயாரிக்கலாம். ''என்னடா! எதையோ படித்துவிட்டு உளறுகிறாயா?'' என்று தாங்கள் கேட்க நினைக்கலாம். நான் கூறுவது அனைத்தும் உண்மையே.

சூரிய ஒளி கிடைக்கும் எந்த இடத்திலும் 'பாலிதீன்' காகிதங்களை (என்னமோவென்று எண்ணாதீர்கள். இரசாயன உர மூட்டைகளின் உள்ளே இருக்குமே கண்ணாடிப் பேப்பர், அது தானப்பா 'பாலிதீன்' எனப்படுவது; கடைகளிலும் கிடைக்கும்.) விரித்து நாற்று விட்டு விடலாம். ''பாலிதீன்'' காகிதம் கிடைக்கவில்லை என்றால் வாழை இலைகளை விரித்துக்கூட அதன் மேல் நாற்று விடலாம்! அவ்வளவு சுலபமான முறையப்பா இது!

இம்முறையில் நாற்றுத் தயாரிக்கச் செலவும் குறைவு. ஏனெனில் இம் முறைக்கு உழவு செய்தல், களை எடுத்தல், நாற்றுப் பறித்தல் ஆகியவை தேவையில்லை. இந்நாற்றங்காலை, பாய்போல் சுருட்டி எடுத்துச் செல்ல முடியுமாதலின், நடவு வயலுக்கு நாற்றைக் கொண்டு செல்ல ஆகும் செலவும்குறையும்.

சுருள்பாய் நாற்றங்காலுக்கு உரமிடவும் தேவையில்லை. விதைகளிலுள்ள சத்துக்களைக் கொண்டே நாற்று 12 முதல் 14 நாட்கள் வரை நன்கு உயிர் வாழ்கிறது. மேலும், சேற்று நாற்றங்காலுக்குத் தேவையான அளவு தண்ணீரும் இம் முறைக்குத் தேவையில்லை.

சேற்று நாற்றங்காலிலிருந்து நாற்றுப் பறிக்கும்போது தண்டு ஒடிந்துவிடவோ, வேர் அறுந்து விடவோ கூடும். இம்முறையில் தண்டு ஒடிந்துவிடவோ, வேர் அறுந்து விடவோ காரணமே இல்லை. எனவே நாற்றுகள் விரைவிலேயே வேர் பிடித்து, பயிரும் பச்சை கட்டி விடுகிறது; விரைவிலும், பெருமளவிலும் கிளைப்பதால், மகசூலும் பெருகும். இந் நாற்றுகளைப் பொதுவாக பூச்சியும் நோயும் தாக்காது. மேலும், இந்நாற்றுகளைக் கொண்டு நடப்பட்ட பயிர் 7 முதல் 10 நாட்கள் முன்னதாகவே அறுவடைக்கு வந்துவிடும்.

ஒரு ஏக்கர் நடவுசெய்ய 12 சென்ட் நிலத்தில் சாதாரண முறையில் நாற்றுவிட உங்களுக்குச் சுமார் ரூ. 55-00 செலவு ஆகும்; ஆனால், ''தபாக்'' முறையில் ½ சென்ட் பரப்பில் நாற்றுவிட ரூ. 35-00 தான் செலவு ஆகிறது. எனவே, நாற்றுவிடும் செலவில் ரூபாய் 20-00 குறையும்.

ஒரு மீட்டர் அகலமும், வசதிக்கேற்ற நீளமும் உடைய பாத்திகளை வயலிலோ, களத்திலோ, வீட்டுத் தோட்டத்திலோ அமைக்கவும். பாத்திகளைச்சுற்றி வரப்பு அமைக்கவும். ஒரு ஏக்கர் நடவு செய்ய 20 சதுர மீட்டர் நாற்றங்கால் தேவை.

பாத்திகளின் மேற்பரப்பு இறுக்கமாகவும், ஒரே சம தளமாகவும் இருக்குமாறும் செய்ய வேண்டும். பாத்திகளின்மேல் ''பாலிதீன்'' காகிதங்களையோ அல்லது வாழை இலைகளையோ நன்றாகப் பரப்ப வேண்டும். அதன்மேல் மரத்தூளையோ அல்லது சிறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்ட வைக்கோல் துண்டுகளையோ சுமார் 1 அங்குல கனத்திற்குப் பரப்பவும் (இது இல்லாமலும் நாற்று விடலாம்). அதன்மேல் முளைவிட்ட விதைகளை (மூன்றாங் கொம்பு விதைகளை) ஒரு சதுர மீட்டருக்கு 1·1 முதல் 1·5 கிலோ வீதம் பரப்ப வேண்டும்.

நாள்தோறும் 3 முறை பூவாளியால் தண்ணீர் தெளித்து நாற்றங்காலை ஈரமாகவைக்கவும். விதைத்தது முதல் 3 அல்லது 4 நாட்களுக்குக் காலையிலும் மாலையிலும் கையினால் விதைகளை மிருதுவாக அமுக்கி வைக்க வேண்டும். இதனால், வேர்கள் மேல் நோக்கிக் கிளம்புவதைத் தடுக்கலாம்.



முன்பு தரிசாகக் கிடந்த இடத்தை விளைநிலமாக்கிட வியர்வை சிந்துவோர், குறை அளவு இயங்கி வந்த இயந்திரத் தொழிற்சாலையை முழு அளவு இயங்கிடச் செய்யப் பாடுபடுவோர், மக்களின் வசதிப் பெருக்கத்துக்காக உற்பத்தி, விநியோகம், ஆகியவற்றில் ஈடுபட்டு அதனை நேர்மையான முறையில் நடத்துவோர், இவர்களெல்லாம் நம் வணக்கத்துக்கு உரியவர்கள்.

12 முதல் 14 நாட்களில் நாற்றுகள் 4 முதல் 5 அங்குலம் வளர்ந்து நடவுக்கு ஏற்ற நிலையில் இருக்கும். 16 நாட்களுக்கு மேல் வயதான நாற்றுகளை நட வேண்டாம்.

''பாலிதீன்'' காகிதங்களின் மேல் இருக்கும் நாற்றுகளைப் பாய் போல் சுருட்டி, சுருணைகளைத் தகுந்த அளவு பத்தைகளாகப் பிரித்து, நடவு செய்யலாம். நடும்பொழுது கீழ்க்கண்டவைகளைக் கவனத்திற் கொள்ள வேண்டும்:—

(1) நடவு வயலைப் பரம்பு அடித்து மேடுபள்ளமின்றி சமதளமாகச் செய்து கொள்ளவும். (2) நடவின்போது ½ அங்குல அளவிற்கு மேல் தண்ணீர் கட்டக் கூடாது. (3) குழிக்கு 4 அல்லது 5 நாற்றுகள் வைத்து நட வேண்டும். (4) நாற்றுகளை அதிக ஆழமில்லாமல் மேலாக நட வேண்டும்.

எனவே, மேற்கூறிய முறையில் நாற்றுவிட்டு நடவு செய்து பாருங்கள். நமது ஊர்நல ஊழியரும், வேளாண்மை வளர்ச்சி அலுவலரும் உங்களுக்கு உதவி செய்வார்கள். காலத்தை வீணாக்காமல் உடனே முயற்சி செய்யுங்கள் அப்பா !

முயற்சி திருவினை ஆக்கும்

என்று நமது ஒப்பற்ற திருக்குறள் தெரிவிக்கிறது. வணக்கம்.

தங்கள் அன்பு மகன்,

இனியன்.

# நாடகக் கலை

எஸ். வி. சகஸ்ரநாமம்.

சமுதாயக்கலைகளில், மக்களின் மனத்தைப் பெரிதும் கவரக் கூடிய தன்மை பெற்றவை இசையும், நாடகமும். நாடகம் நிறைவான வலுவைப்பெற்ற ஓர் உன்னதமான கலை.

நாடகக்கலைக்கு வரலாறு உண்டு. உலகளவில் அதனுடைய வரலாறு, சுமார் இரண்டாயிரத்து முன்னூறு ஆண்டு கால அளவைக் கொண்டது. இந்தக் கலை தோன்றிய நாள் முதலே, சமுதாயத்தில் தனக்கென ஒரு தனி மதிப்பைப் பெற்று விட்டது என்று சொல்லலாம். இதனுடைய வளர்ச்சி சமுதாய வளர்ச்சியைப் பிரதிபலித்தது. சமுதாயத்தின் மறுமலர்ச்சிக் காலங்கள், ஆத்ம வீழ்ச்சிகள், இரண்டுமே நாடகக்கலையில் பிரதிபலித்தன.

நாடகத்தின் மூலம் எடுத்துச் சொல்லப்படும் விஷயம், சமுதாய நிலையைக் கோடிட்டுக் காட்டுவதாகும். அதற்கு மேலும், நாம் சிந்திக்க அது ஓர் அடித்தளமாக அமைகிறது.

பாரத நாட்டின் நாடகக்கலை, பெரிதும் புராண இதிகாசங்களை அடிப்படையாகக் கொண்டே தான் வளர்ந்தது. உலகெங்கிலுமே, இக்கலை, இப்படித்தான் வளர்ந்திருக்கிறது.

நமது நாட்டிலும் காளிதாஸன், ஹர்ஷன், பாணபட்டர், விசாகதத்தர், ஆகிய நாடகாசிரியர்களுடைய படைப்புக்களில் சாதாரணப் பொது மனிதனுடைய வாழ்வினைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஐரோப்பாவில், ஏற்பட்ட, தொழில் புரட்சியின் காரணமாக விளைந்த ஓர் புதிய உலகம் இவைகளுக்கு மாற்றாய் அமையத்தக்க புதிய நாடக உலகத்தைத் தோற்றுவித்தது.

சமுதாய ரீதியில் மத்தியதர கடைத்தர வகுப்பைச் சேர்ந்த மக்களும், அவர்களைப் பற்றிய



வாழ்க்கை முறைகளும் நாடகத்தில் பிரதிபலித்தன. நார்வே நாட்டைச் சேர்ந்த ''ஹென்றி இப்ஸன்'' (Henry Ibsen) இப்புதிய உலகத்தை நிர்மாணித்த சிற்பிகளுள் தந்தை ஆவார். இப்ஸன் நாடகங்கள் சிந்தனைப் புரட்சியை, சமுதாய மறுமலர்ச்சியை ஐரோப்பா எங்கிலும் உண்டாக்கக் காரணமாயிருந்தன. பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஏற்பட்ட இப் புதிய விழிப்பு, நவீன நாடகக் கலையும், இலக்கியமும் உருவாக உதவி புரிந்தது.

இன்றைய உலகில் மேலை நாடுகளில் மேடைக்கலைவளர்ச்சி வியக்கத்தக்க அளவிற்கு முன்னேறியுள்ளது. இதற்குக் காரணம் அவர்கள், கலையின் வளர்ச்சியை உணர்ச்சி பூர்வமாகப் பார்க்காமல் சமுதாயப் பண்பாட்டு ரீதியில் பார்ப்பதுதான். நம் தமிழகத்து மேடைக்கலையில் இன்று இருக்கும் தேக்கம் சற்று அதிகமானது என்று நான் சொல்லும் போது, இதற்கு வளர்ச்சி என்றால் என்ன என்பதையும் அறிந்த ஒரு நிலையில்தான் சொல்லுகிறேன். நாம் நமது பண்பாட்டுத்துறையில், வளர்ச்சியைப் பற்றி இது வரையிலும் உணர்ச்சி பூர்வமாகத்தான் பார்த்து வந்திருக்கிறோம். ஆக்க பூர்வமாக அறிவுப்பூர்வமாகப் பார்க்கும்போது, இன்னும் இன்றும் நாம் அதீத உணர்வு நாடகங்களையே (Melo dramas) மேடையேற்றுவதை உணர முடியும்.

காதலுணர்வு, சாகசப் பின்னணி நாடகங்கள், யதார்த்த முயற்சிகளைக் கட்டுப் படுத்துகின்றன. தத்ரூப நிலையில் அதாவது அன்றாட வாழ்க்கை அனுபவங்களை வைத்துப் புனையப்பட்ட நாடகங்களில்தான் இன்றைய பிரச்னைகளை நாம் அணுகமுடியும்.

நாடகம் பார்ப்பது வெறும் பொழுதுபோக்குக்காக என்ற கூற்றை, முழுமையாக அப்படியே நாம் ஒப்புக்கொள்ள முடியாது. எந்தக் கலைப் படைப்பிற்கும் ஒரு பொறுப்பு உண்டு. சமுதாய விழிப் புணர்ச்சியைத் தூண்டும் ஒரு சக்தி இந்த நாடகக் கலைக்கு உண்டு.

மாணவ சமுதாயத்திற்கு ஒரு தெளிவு ஏற்படக் கலைஞர்களும் கலைகளை ஆதரிக்கும் செம்மல் களும் அரசாங்கமும் அதிககவனம் செலுத்த வேண்டும். சோவியத் ருஷ்யாவில் நான் சுற்றுப்பயணம் செய்த பொழுது அங்கே ஐந்து முதல் பத்து வயது வரை, பத்து வயதுக்கு மேலே பதினெட்டு வயது வரை என்றவாறு வயதுக் கும் அறிவின் வளர்ச்சிக்கும் ஏற்ற வாறு நாடக, சினிமா நிகழ்ச்சி கள் பாகுபாடறிந்து காட்டப் படுகின்றன என்பதை அறிய நேர்ந்தது. இளம் உள்ளங் களைப் பெரிதும், பாதிக்கக் கூடிய உணர்ச்சிமிக்க கட்டங் களையுடைய கலைநிகழ்ச்சிகள் இவர்களுக்குத் தரப்படுவதில்லை. பருவ உணர்ச்சியைத் தூண்டி நேரான பாதையினின்றும் வழுவி வக்கரித்த பாதையில் இளம் மனத்தைத் திசை திருப்பும் குழப்பமான கலைப் படைப்புகளைக் காணும் வாய்ப்பு மாணவர்களுக்கு அளிக்கப்படு வதில்லையென்பதையும் அறிந் தேன். வாழ்க்கையில் காதல், சோகம், இன்பம், இவைகளை அறிய வேண்டிய காலத்தில் அறிவது, எவ்வளவோ நல்லது. இந்த ஒரு விஷயம், எளிதா னதன்று. நம் சமூகவியல் நிபுணர்களும் கலைநிபுணர்களும் ஒருங்கிணைந்து ஒரு சமரசப் போக்கோடு, சமுதாயப்பார்வை யோடு முடிவெடுத்துச் செயல் படுத்த வேண்டியதொன்ருகும்.



பள்ளிச் சிறுவர்களின் மனத் தில் பசுமரத்தாணிபோல் நல்ல விஷயங்களைப் பதிக்க வெளி நாடுகளில் (Puppet Show) என்று சொல்லப்படும்பொம்மலாட்டம், நாடகம், சினிமாக்களை வெகு அழகானமுறையில் திட்டமிட்டுத் தயாரித்துக் காட்டி வருகின்ற னர். நம் நாட்டிலும் அதே போன்று இவைகளை உயர்ந்த கலை உணர்வோடு அத்துறை களில் நிபுணர்களாக உள்ளவர் களால் தயாரித்து, அளிக்கப் பட வேண்டும். இவைகள் வெறும் (News Real) செய்திப் படங்களைப் போலல்லாமல் சுவை குன்ருத அதே நேரத்தில் இளம் உள்ளங்களில் நெடி துயர்ந்த நல்ல லட்சியங்களை சமுதாய, கலை உணர்வுடன் கூடிய பொறுப்புணர்ச்சிகளை வளர்க்க உதவும் கருத்துள்ள கலைப் படைப்புக்கள் தேவை. இன்றைய மாணவர்களே வருங் கால ஆட்சியாளர்கள். தேசத் தின் பாதுகாவலர்கள். அவர் களுடைய மனத்தில் விழிப் புணர்ச்சியையும், கடமைப் பெருக்கையும் உண்டாக்கக்கூடிய கலைப் படைப்புக்கள் பெருக வேண்டும்.



டெலிவிஷன் போன்ற நவீன விஞ்ஞான முறைகள் இங்கு பிரபலமானுல் மேலைநாடுகளைப் போல இங்கும் சினிமாத்துறை பாதிக்கப்படலாம். ஆனுல் நாடகத்தை டெலிவிஷன் பாதிக் காது என்பது உண்மை. இன்று டெலிவிஷன் நாகரிகத்தில் திளைத்துக் கொண்டிருக்கும், நாடுகளில் நாடகக் கலையின் வளர்ச்சியைப் பார்த்தால் இந்தப் பேருண்மையைப் புரிந்து கொள்ள முடியும்.

நாடகத்திற்கென ஏற்படுத்தப் படும் தனிமேடை பல நல்ல நடிகர்களை, ஆசிரியர்களை இயக்குநர்களை உருவாக்கும். ரசிகர்களின் ரசிப்புத்தன்மையை மேலும் பண்புள்ளதாக்கி வளப் படுத்தும். நாடகம் வெறும் மேடைக்கலையாக இல்லாமல் இலக்கியத் தரமுள்ளதாகவும் வளரும் வாய்ப்பினைப் பெறும்.

அந்தப் பொன்னுன நாள் உருவாக இன்று முதல் நாம் பாடுபடுவோம். வருங்காலச் சந்ததிகளுக்கு நாம் அரசியல் சமூகப் பொருளாதார ரீதியில் பொறுப்புள்ளவர்களா யிருப்பது போல் பண்பாட்டுத்துறையிலும் நமது பொறுப்பையுணர்ந்து மன வுறுதியுடன் செயல்படுவோமாக.

மூன்றும் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற பிரான்ஸ் நாட்டுக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கால் (Gaul) என்று பெயராம். அப்பொழுது ரோமானியர்களின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்த தாம் கால் நாடு.

கி.பி. ஐந்தாம் நூற்றுண்டில் பிளாங்க்ஸ் என்ற இனத்தவரின் தலைவனை க்ளாவிஸ் என்பான் நல்லாட்சி நிறுவினுனும். அவன் வழியினர் அரசராயினராம். எனவே பிராங்ஸ் ஆண்ட நாடு பிரான்ஸ் ஆயிற்றும்.

* * *

இந்தியாவிலேயே இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதில் முன்னணியில் நிற்கும் மாநிலம் தமிழ்நாடுதான். தமிழ் நாட்டு அளவுக்கு வேறு எந்த மாநிலமும் இரசாயன உரத்தைப் பயன்படுத்துவதில்லை.

இரசாயன உரத்தை மிக அதிக அளவில் பயன்படுத்தும் மாவட்டம் இந்தியாவிலேயே தஞ்சாவூர் மாவட்டம்தான்.

* * *

இந்தியாவில் பொறி இயல் தொழில்களில் தனிப் பெருந் தொழிலாக விளங்குவது மோட்டார் தொழில்தான். 1949-ஆம் ஆண்டில் நம் நாட்டிலிருந்த எல்லாவிதமான மோட்டார் வண்டிகளின் மொத்த எண்ணிக்கை 1,60,000 தான். ஆனுல் 1969-ஆம் ஆண்டில் நாட்டிலுள்ள எல்லாவிதமான மோட்டார் வண்டிகளின்மொத்த எண்ணிக்கை 14,30,000 ஆகும்.

கடந்த பத்து ஆண்டுகளில் மோட்டார்த்தொழில் மகத்தான வளர்ச்சி அடைந்திருக்கிறது. 1959-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட கார்களின் எண்ணிக்கை 11,993. ஆனுல் 1969-ஆம் ஆண்டில் உற்பத்தியான கார்களின் எண்ணிக்கை 35,264.

1959-ஆம் ஆண்டில் வணிக வண்டிகள், ஜீப் முதலியன 26,876 உற்பத்தி செய்யப்பட்டன. 1969-ல் உற்பத்தியானவைகளோ 42,998 ஆகும்.




ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், மூன்று சக்கர வண்டிகள் முதலியன 1959-ல் 8,126 தயாரிக்கப்பட்டன. 1969-ல் அவைகளின் உற்பத்தி எண்ணிக்கை 99,841 ஆகும்.

மொத்தத்தில் 1959-ஆம் ஆண்டில் எல்லா வகையான மோட்டார் வண்டிகளின் உற்பத்தி 46,995 ஆகும். 1969-ஆம் ஆண்டுகளில் அவைகளின் உற்பத்தி 1,78,103 ஆகும்.

* * *

இந்தியாவிலுள்ள கொடிக் கம்பங்களிலே மிக உயரமான கொடிக்கம்பம் தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலகத்திலுள்ள (கோட்டையிலுள்ள) கொடிக் கம்பம்தான்.




சட்டமன்றப் பேரவையிலும், நாடாளு மன்றத்திலும் மிகவும் சுவையான நேரம் என்று கேள்வி நேரம் கருதப்படுகிறது.

இந்தக் கேள்வி கேட்கும் முறை நாடாளு மன்றங்களின் தாயகம் என்று சொல்லப்படும் இங்கிலாந்து நாட்டின் 'பிரபுக்கள் அவை'யில் 1721-ஆம் ஆண்டில் தொடங்கியது.

நம் நாட்டில் கேள்வி கேட்கும் உரிமை 1892-ஆம் ஆண்டில் நம் நாட்டுச் சட்ட மன்றங்களுக்கு அளிக்கப்பட்டது. தமிழ் நாட்டுச் சட்டமன்றத்தில் 1893-ஆம் ஆண்டில்தான் இவ்வுரிமை கையாளப்பட்டது.

* * *

இந்தியாவிலேயே பாசனத்திற்கு அதிக அளவில் விசையேற்றத்தை அதாவது பம்பு செட்டைப் பயன்படுத்தியுள்ள மாநிலம் தமிழ்நாடுதான். அனைத்திந்திய அடிப்படையிலுள்ள பாசனத்திற்கான மின்சாரக் கட்டணத்தைவிடத், தமிழ்நாட்டில் மின்சாரக் கட்டணம் குறைவு.

* * *

சேலத்து இரும்பு, அளவில் மட்டுமல்ல தரத்திலும் சிறந்தது என்பதை இரசாயன ஆராய்ச்சி மூலம் 1893-ஆம் ஆண்டில் திரு. சர் தாமஸ் ஹாலண்ட் என்பவர் நிரூபித்திருக்கிருர்.

* * *

பயிர்க் காப்புத் திட்டம் (பயிர் இன்சூரன்ஸ் திட்டம்) முதன் முதலாக இந்தியாவிலே சோதனைத் திட்டமாகத் தமிழகத்தில் கோவை மாவட்டத்தில் தொடங்கப்படவிருக்கிறது.

* * *

இந்தியாவிலேயே முதன்முதலில் புன்செய் நிலங்களுக்கு வரியை நீக்கியது தமிழ்நாடு அரசு தான்.

# இலக்கியச் சோலை



உலகமென்ற இலக்கியத்து நிலப் பரப்பில்
'உங்கள்தமிழ்ச் சோலைவளம் என்ன?' என்ருர்!
கலமோடும் கடல்தின்று, கறையான் தின்று
கடும்ஆடிப் பெருக்கெல்லாம் தின்ற பின்னர்
விலங்கெருமை பலபுகுந்த குளத்தில் மீதி
விளங்குகின்ற தாமரைபோல் தமிழ்ச்சோலைக் கண்
இலங்குகின்ற இலக்கியத்துப் பயிர்வளத்தை
எடுத்தவரின் விழிமுன்னல் வைப்போம் தோழி!

வாழும்'தொல் காப்பிய'த்தை 'அகம்' 'புற'த்தை
வளமார்ந்த 'கலித்தொகை'யைப் 'பதிற்றுப் பத்'தை
ஆழமுள்ள 'நற்றிணை'யைக் 'குறிஞ்சிப் பாட்'டை
'ஐங்குறுநூ' றதனேடு 'முல்லைப் பா'ட்டை
தாழாத 'திருக்குற'ளைச் 'சிலம்'பை என்றும்
தரந்தோய்ந்த 'குறுந்தொகை'யை 'ஆற்றுப் பா'ட்டை
சூழ்'மதுரைக் காஞ்சி'யினை 'நளவெண்' பாவைத்
தொடஇனிக்கும் 'நாலடி'யைச் சொல்நீ தோழி!

'மேகலை' 'சிந் தாமணி'யைத் 'தேவா ர'த்தை
மேன்மை 'நந்திக் கலம்பக'த்தைக் 'கல்லா ட'த்தை
வாகைகண்ட 'கலிங்கத்துப் பரணி' தன்னை
வள'நெடுநல் வாடை'யினை 'நன்னூ' லோடு
பாகு'கம்ப ராமாய ண'த்தை நல்'யாப்
பருங்கலத்'தைப் 'பெருங்கதை'யைச் 'சோழி யத்'தை
வேக'முத்தொள் ளாயிர'த்தைப் புலவர் நாவின்
'விடுதூ'தைப் 'பழமொழி'யை விழிமுன் காட்டு!

'இன்னுநாற் ப'தை'வில்லி பார த'த்தை
'ஏரெழுப' துடன்'நீல கேசி' நல்ல
கன்னல்சீர் 'ஆசாரக் கோவை' யோடு
'கார்நாற்ப' துடன்'கந்த புராணம்' தூய
பொன்'அம்பி காபதியின் கோவை' யோடு
புகழ்பூத்த 'மூதுரை'யைத் 'தண்டி' தன்னைக்
கொன்றை'திருக் குற்ருலக் குறத்'திப் பாட்டைக்
'குசேலோபாக் கியான'த்தைக் கூருய் தோழி!

'பெரும்பாணுற் றுப்படை'யைப் 'பள்ளுப்பா'ட்டை
பீடுடைய 'பரிபாடல்' நூலோர் போற்றும்
'திருத்தொண்டத் தொகை' 'வளையா பதி'யை நல்ல
'திரிகடுகம்', 'மூவருலா', 'சீருப் புராணம்'
'திருவரங்கக் கலம்பகம்' 'ம னேன்மணீயம்'
'சிலையெழுப' துடன்'இருபா இருபஃ' தோடு
'திருப்பாவை' 'திருவருட்பா' 'திருப்பல் லா'ண்டைத்
'திருப்புக'ழைத் 'திருமந்தி ர'த்தைக் காட்டு!

எண்ணரிய 'சதகங்கள்' 'உலாக்கள்' 'கோவை'
எழில்நூல்கள் 'அந்தாதி'த் 'தூது' நூல்கள்
வண்ணவண்ணத் 'தனிப்பாடல்', 'சித்தர் பாடல்'
வனப்புள்ள 'தலப்பாடல்' இவற்றி னேடு
கண்ணுன 'பாரதி'யைத் 'தாசர்' பாட்டைக்
கனிக்கவிஞர் படைக்கின்ற கவிதைக் காட்டைப்
பெண்மானே! அன்னவர்க்கு விளக்கிக் காட்டு!
பின்னுமவர் கேலிசெய்தால் நடந்து காட்டு!



அமைச்சர் கா. வேழவேந்தன்



5-எ

"எந்தத் திட்டமானாலும், அதைச் சிறப்புற ஆற்றிக் கொடுக்கும் அதிகாரிகள் இங்கே இருக்கிறார்கள். தேவையானதைக் கொடுத்தால், உற்பத்தி செய்து குவிக்கும் உழைப்பாளர்களாக நமது உழவர்கள் இருக்கிறார்கள்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னையில் நடந்த தீவிர வேளாண்மை மாவட்டத் திட்ட மாநிலக் கருத்தரங்கைத் துவக்கி வைத்துப் பேசுகையில் பாராட்டினார்.

தமிழ்நாடு அரசு பல்வேறு துறைகளிலும் குறிப்பிடத்தகுந்த சாதனைகளை ஏற்படுத்தி வருவது கண்டு மற்ற மாநிலத்தவரும், வெளிநாட்டவரும் பாராட்டி வருகின்றனர்.

சிறப்பாக வேளாண்மையில் பல சாதனைகளை ஏற்படுத்தி, உழவர் பெருமக்களின் வாழ்வு வளம் பெறவும், நாடு நலம் பெறவும் தமிழ்நாடு அரசு முழு முயற்சியுடன் ஈடுபட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் சாதனைகளுக்கோர் எடுத்துக்காட்டாக, சென்னை வண்ணாரப்பேட்டையிலுள்ள அரசினர் வேளாண்மைப் பொறியியற் பணிமனையில் உருவாக்கப்பட்டுள்ள விசைத் துளைக்கும் கருவி (பவர் டிரில்) விளங்குகிறது.



இந்தப் பவர் டிரில், வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்படும் "ரஸ்டன் பக்ரஸ்" (Ruston Bucyrus 22 W. R.) டிரில்லுக்கு ஒப்பானதாகும். இக்கருவி ஒரு "டிரக்" வண்டியில் பொருத்தப்பட்டுள்ளது.

## விசைத் துளைக் கருவி

இதுவரை 4 பவர் டிரில்களை உருவாக்கி, பூமிக்கடியில் உள்ள நீரை மேலே கொண்டுவரும் வேலைக்கு அனுப்பியுள்ளது இந்தப் பணிமனையின் மகத்தான சாதனையாகும்.

ஒவ்வொரு பவர் டிரில்லும் ரூபாய் 1.81 லட்சம் செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் 'டிரக்' வண்டி, 83 குதிரை ஓட்ட சக்திகொண்ட நகர்ந்து செல்லும் கருவி (Prime mover) ஆகியவைகளும் அடங்குகின்றன. மொத்தச் செலவு பின்கண்டவாறு உள்ளது.

சேஸிஸ் 0.46 லட்சம், டிரில் 0.96 லட்சம், இதர கருவிகள் 0.39 லட்சம், மொத்தம் 1.81 லட்சம் ஆகிறது.



பூமிக்கடியில் மலைப்பாங்காக உள்ள பகுதிகளான கோயம்புத்தூர், சேலம், வடஆற்காடு, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் குழாய்க் கிணறுகள் அமைக்க இந்தப் பவர் டிரில்லைப் பயன்படுத்தலாம். பூமி மட்டத்திற்குக் கீழே 500 அடி ஆழம் வரை 12 அங்குல குறுக்களவுள்ள துளையிடுவதற்கு இது ஏற்றதாகும். இதைக்கொண்டு ஒரு நாளில் (8 மணி வேலை நேரம்) மண்ணில் 10 அடியும், இளக்கமான மலைப்பகுதியில் 10 அடியும், இறுக்கமான மலைப் பகுதியில் 6 அடியும், மிகவும் இறுக்கமான மலைப் பகுதியில் 2 அடியும் துளையிட இயலும்.

நிலத்தினடியில் உள்ள நீரை வெளியே கொண்டு வந்து வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க உதவும் இக்கருவிக்கு இணையான பவர் டிரில்லை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதென்றால், ரூபாய் 4 லட்சம் செலவு ஆகிறது. ஆனால் நாமே தயாரிக்கும்போது ரூபாய் 1.81 லட்சம் மட்டுமே செலவு ஆகிறது. அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தும் இத்தகைய தயாரிப்புகள் சாதாரணமானவையல்ல மகத்தான சாதனை என்றுதான் சொல்ல வேண்டும் !

இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள 4 விசைத் துளைக்கும் கருவிகளும் வேளாண்மைத்துறை மூலம் குழாய்க் கிணறுகள் அமைக்கப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவைகள் வெளிநாட்டு விசைத் துளைக் கருவிகளைவிட, வெகு திறமையாக வேலை செய்வதாக பல வேளாண் பெருங்குடி மக்கள் பாராட்டி வருகின்றனர்.




மாமல்லபுரத்துக் கலைச் சின்னங்களைச் சுற்றிப் பார்த்த அந்த வெள்ளைக்கார மாது, குன்றன்ன கற்கோயில்களை வெறித்துப் பார்த்தபடி மோனத்தில் ஆழ்ந்து விட்டார்,

போலந்து நாட்டிலிருந்து வந்தவர் அந்த அம்மையார். தொல்பொருள் ஆராய்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இத்தாலி, எகிப்து, பிரான்சு நாட்டுப் புராதனச் சின்னங்களை ஆய்ந்தறிந்தவர். தமிழ்நாட்டுக் கலைக் கோயில்களைக் காண வந்திருந்தார்.

நான் சுற்றுலா வழிகாட்டி என்ற முறையில் அவரை மாமல்லபுரத்திற்கு அழைத்துச் சென்றிருந்தேன்.

ஐந்து ரதப் பகுதியிலிருந்து அரசினர் சிற்றுண்டி விடுதிக்குச் சென்றோம். தேநீர் அருந்தியபடி மீண்டும் சிந்தனை வயப்பட்டார், அம்மையார்.

விநாடிக்கு ஒரு கேள்வி கேட்கும் இயல்புடைய அவர் மெய்ம் மறந்து மௌனமாயிருந்தது எனக்கு வியப்பூட்டிற்று.

'' என்ன சிந்தனை ? '' அவரது சிந்தனையைக் கலைத்தேன்.

'' நான் பல்லவர் காலத்து மாமல்லபுரத்தில் வாழ்ந்திடக் கொடுத்து வைத்திருக்க வில்லையே !'' என்று தமது ஏக்கத்தினை வெளியிட்டார்.

ஆம். வேற்று நாட்டவரெல்லாம் கண்டு பொறுமை கொள்ளும் அளவிற்குக் கலையில், பண்பாட்டில், செல்வச் செழிப்பில், மாமல்லபுரம் மிக உயர்ந்த நிலையில் இருந்தது என்பதற்கு இலக்கியத்திலும், கல்வெட்டுகளிலும் பல சான்றுகள் உள்ளன.

மாமல்லபுரம், அன்று மாமல்லை என்றும் கடல்மல்லை என்றும் அழைக்கப்பட்டது. புகழ்பெற்ற துறைமுகப் பட்டினமாகத் திகழ்ந்தது. எகிப்து, கிரேக்கம், ரோமாபுரி ஆகிய சாம்ராஜ்ஜியங்களிலிருந்து மரக் கலங்கள் நாள் தோறும் மாமல்லைத் துறைமுகத்திற்கு வந்து சென்ற வண்ணமிருந்தன. உயர்ந்த சாதிக் குதிரைகளைக் கலங்கள் ஏற்றி வந்தன. இத்துறைமுகம் மூலம் கடல் வாணிபம் செழித்தோங்கியது.

ஏனைய துறைமுகப் பட்டினங்கள் போல் அல்லாது, நாவாய்கள் எளிதாக அடையாளம் தெரிந்து வரும் வகையில் அமைந்திருந்தது, மாமல்லை! செல்வர்களும், வணிகப் பெருங்குடியினரும் வாழ்ந்ததால் எங்கும் மாட மாளிகைகள் ! இராக்காலங்களில் மாடங்களில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த விளக்குகள் வெகு தொலைவிலிருந்தே நன்கு தெரிந்தன. அவற்றைக் கண்ணுற்றதுமே, நாவாய்த் தலைவர்கள் மாமல்லை வந்து விட்டதை உணர்வர் !



அந்த உயர்ந்த மாடங்களில் வணிகர் வீட்டு மகளிர் வசித்தனர். அவர்கள் பொன்னாலான மிகச் சிறந்த அணிகலன்களையும், மெல்லிய துகில் ஆடைகளையும் அணிந்திருந்தனர். அவர் தம் இடையிலே மணி வடங்கள் ; கால்களில் பொற் சிலம்புகள் ! பொற்கழலைகளையும், நூற்பந்துகளையும் மாடங்களிலிருந்து ஆடுவதே அம் மகளிரின் பொழுதுபோக்கு.

இது பழந்தமிழ் இலக்கியங்கள் தரும் படப்பிடிப்பு ; கல்வெட்டுகள் எடுத்துக் கூறும் உண்மை. வெளிநாட்டு வணிகர்கள் இங்கு வந்தார்கள் என்பதை மாமல்லபுரத்தில் கிடைத்த ரோமானிய நாணயங்களும் உறுதி கூறுகின்றன. இதனை நான் அந்தப் போலந்து மூதாட்டிக்கு எடுத்துக் கூறினேன்.

மாமல்லபுரம் காலஓட்டத்தில் பல மாறுதல்களை அடைந்து இன்று ஒரு சிற்றூராக இருக்கின்றது. இருப்பினும், அதன் பண்டைப் புகழ், கலை, அழியவில்லை. காலத்தால் அழித்திட முடியாத குடைவறைக் கற்கோயில்கள் இங்கு கொலுவிருக்கின்றன. அன்று அரசனுக்காகக் கற்கோயில்களையும் சிற்பங்களையும் நிறுவினர், பெருந்தச்சர்கள்.

இன்று தமிழக அரசின் சிற்பப் பள்ளியிலே பல சிற்பிகள் உருவாகின்றனர், அந்தச் சாகாத கலைக்குப் புத்துயிர் ஊட்டுவதற்காக!

அன்று யவனரும், ரோமானியரும் வாணிபம் செய்தற் பொருட்டு மாமல்லைக்கு வந்தனர்.

இன்று கலைச் சின்னங்களைப் பார்ப்பதற்காகப் பல வெளிநாட்டவர் நாள்தோறும் மாமல்லபுரத்தை முற்றுகையிடுகின்றனர்.



ஈரான் நாட்டு மன்னர் ஷா தனது ராணியாருடன் மாமல்லபுரத்திற்கு வந்து இந்த சிற்பக் கலைகளைக் கண்டு மகிழ்ந்துள்ளார். சிக்கிம் நாட்டு மன்னரும் ராணியும், நேப்பாள நாட்டு அரச குடும்பத்தினரும், பூட்டான் நாட்டு அரச தம்பதியரும், இந்தக் கடல் மல்லையைக் கண்டு ரசித்ததுண்டு.

இலங்கைப் பிரதமர் திருமதி சிரிமாவோ பண்டார நாயகா, பூட்டான் நாட்டு அமைச்சர்கள், மொரீசிய நாட்டு அமைச்சர் இன்னும் பல முக்கிய வெளி நாட்டுப் பிரமுகர்கள் வந்து பார்த்துச் சென்ற பெருமையும் இந்த மாமல்லபுரத்திற்கு உண்டு.

செக்கோஸ்லோவேகிய நாட்டு நாட்டிய-நாடகக் குழுவினர் இந்த மாமல்லபுரத்திற்கு வந்ததோடு சரித்திரப் புகழ்பெற்ற இந்தக் கடலில் குளித்து மகிழவும் செய்தனர்.

நாங்கள் அர்ச்சுனன் தவம் என்ற பாறையில் வடித்த ஓவியங்களைப் பார்வையிட வந்தோம். அங்கே பல ஆந்திர நாட்டுச் சகோதர சகோதரிகள்.....அவர்களைத் தாண்டி ஒரு மேலை நாட்டுக்காரர், பல கோணத்தில் அந்த இறவா ஓவியத்தினைப் படம் பிடித்துக் கொண்டிருந்தார்.

'' உலகத்திலுள்ள சிற்பங்களிலேயே ஒப்பற்ற சிற்பம் இதுவே'' என டாக்டர் பாஷாம் என்ற மேல்நாட்டு அறிஞர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தொண்ணூறு அடி நீளமுள்ள பாறை அதனிடையே உள்ள சிறிய இடைவெளியை, விண்ணிலே ஒரு நதி தோன்றி, விசும்பிலே பாய்ந்தோடி, பூவுலகில் வீழ்ந்து, பின்னர்க் கீழ் உலகிற்குப் பாய்ந்து செல்வதாகச் சிற்பி உருவாக்கியிருக்கிறார்.



அங்கிருந்து அருகிலுள்ள கிருஷ்ணமண்டபம் சென்றோம். அதில் கண்ணன் ஆநிரை காக்கக் குன்றைக் குடையாக்கிக் கையால் தூக்கி நிற்கும் காட்சியையும், ஆயன் ஒருவன் பசுவிடம் பால் கறக்கும் இயற்கை அழகு ததும்பும் காட்சியினையும் பார்வையிட்டுவிட்டு மேலே சென்றோம்.

மலை மீது பல அரிய காட்சிகள். அதில் கலங்கரை விளக்கத்திற்கு

அருகே உள்ள மகிஷாசுரமர்த்தனி குகையும் ஒன்று. உலகப் புகழ் பெற்ற கொற்றவையின் ஒப்பற்ற சித்திரத்தை அங்கே காணலாம். கொற்றவை மகிஷாசுரனை அழித்த கதை இதில் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. தமிழகச் சிற்பிகள் தோற்றுவித்துள்ள சிற்பங்களிலே ஒப்புயர்வற்றதாகக் கருதப்படும் சிற்பம் இது. இதைக் காணவே, பல வெளிநாட்டவர் மாமல்லபுரம் வருகின்றனர்.

குன்றின் மீது நின்றபடியே எல்லையற்று விரிந்து கிடக்கும் அலைகடலின் அழகைப் பருகிவிட்டு நாங்கள் மீண்டும் ஒற்றைக் கல் கோயில்களுக்கு (ஐந்து ரதங்களுக்கு) வந்தோம்.

அங்கு ஒரு ஐரோப்பிய மாது புகைப் படச்சுருளில் அந்தக் கற்கோயில்களைச் சுருட்டிக்கொண்டு இருந்தார். அவருடன் வந்த தோழி கற்கோயில்களைச் சுற்றிப் பார்வையிட்டபடி சென்று கொண்டிருந்தார்.

தூரத்தே உள்ள மரத்தடியிலுள்ள கல் இருக்கையில் நவீன பாணி உடையமைப்புடன் வெளிநாட்டார் இருவர் இளநீரை உறிஞ்சியபடி இருந்தனர். தலையிலே தொப்பி, இளைஞனுக்குத் தாடி; பெண்போல் வளர்ந்திருக்கும் தலை முடி. அருகிலிருந்த பெண்ணுக்கும் அதே தோற்றம்தான்: தாடியில்லாததால் பெண் என்பது புரிந்தது!

எனக்கே உரிய ஆர்வத்துடன் நான் அருகில் சென்று அவர்களை விசாரித்தேன். அந்த இளைஞர் இங்கிலாந்து நாட்டவர். அந்தப் பெண்மணி கனடாக்காரர் எனத் தெரிந்தது. இந்தியக் கலைகளிலிருந்த ஆர்வத்தால் நான்கு ஆண்டுகளாக நாடு முழுவதும் சுற்றி வந்துகொண்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். அந்தப்பெண்மணி பரதநாட்டியமும், ஓவியமும் பயில்வதாகத் தெரிவித்தார். ஏகாந்தமாக அமர்ந்து இந்தக் கலைச் சின்னங்களை நாளெல்லாம்பார்த்து அனுபவிக்க மிகுந்த ஆவல் என்று இருவரும் தெரிவித்தனர்.

நான் சுற்றுலா வழிகாட்டி என்று தெரிந்ததும், ''இதை ஏன் ரதம் என்று அழைக்கிறார்கள்? அன்புகூர்ந்து விளக்க முடியுமா?'' என்று கேட்டாள் அந்த இளமங்கை.

''இவை ரதங்களே அல்ல; குன்று போலிருந்த ஒரே கல்லில்



மொரீஷியஸ் அமைச்சர் இளநீர் அருந்துகிறார்

செதுக்கப்பட்ட கோயில்கள். ஒற்றைக் கல் கோயில் என்பதே பொருத்தமானது. இந்தக் கற்கோயில்களிலுள்ள மற்றொரு சிறப்பு என்னவெனில், இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு முறையில் அமைக்கப்பட்டுள்ளதாகும். முதல் கோயில் (திரௌபதி ரதம் என அழைக்கப்படுவது) குடிசை போல் உருவ அமைப்புக்கொண்டது. அடுத்தது இரு தளங்கள் உள்ள கோயில். மூன்றாவது நீண்ட சதுர வடிவிலுள்ளது. நான்காவதாக உள்ள கோயில் மூன்று தளங்கள் கொண்டது. இதில் கடவுளின் தோற்றங்களும், பல்லவ மன்னனின் சிற்பமும் செதுக்கப்பட்டுள்ளன. மன்னனின் பெயர் முதலியன பல்லவ ரதத்தில் பொறிக்கப்பட்டுள்ளதைப் பாருங்கள். கடைசியில் தனித்து நிற்கும் கோயிலின் பின் பகுதியும், யானையின் பின் பகுதியும் ஒரே அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளன. இதனைக் கஜபிருஷ்டம் (யானையின் பின் பகுதி) என்பர். இந்த ஒற்றுமையை விளக்கத்தானோ என்னவோ பக்கத்திலே உயிர்த் துடிப்பிலுள்ள ஒரு யானையின் உருவத்தையும் சிற்பி செதுக்கியுள்ளான். படுத்திருக்கும் காளை உருவும், சிம்மத்தின் அமைப்பும் அருகில் நின்று படம் எடுக்கும் ஆவலை யாருக்கும் ஏற்படுத்தும்.'' நான் கூறி முடித்ததும் ''நந்தி (நன்றி) வணக்கம்'' என்று தங்களுக்குத் தெரிந்த இரு தமிழ்ச் சொற்களை இன்முகத்துடன் உதிர்த்தனர் அவர்கள் இருவரும்.

அதற்குள் போலந்து அம்மையாரும் வந்துவிடவே நாங்கள் அவர்களிடம் விடைபெற்று நகர்ந்தோம். கிளிஞ்சல்களால் செய்த மாலைகள், அழகுப் பொருள்கள், சங்குகள் முதலியன விற்கும் கடைகளைச் சுற்றிப் பார்த்தபடியே மீண்டும் கடற்கரைக் கோயிலுக்கு வந்தோம். கடல் அலைகள் வருடிச்செல்லும், இந்தப் பேரெழில் பொழியும் கோயிலுக்கு நிகர் ஏது? சுமார் 1,300 ஆண்டுகளாக இது அலைவாயிலிலே அல்லவா நின்று கொண்டிருக்கிறது!

''இவற்றை அமைத்த பல்லவ மன்னர் யார் என்று தெரியுமா?'' அம்மையார் என்னைக் கேட்டார்.

''இந்தக் கடற்கரைக் கோவிலை இராஜசிம்மப் பல்லவன் ஏற்படுத்தினான் என்பதற்கு இங்கேயே கல்வெட்டுகள் உள்

என. ஆனால், மற்றக் கலைச் சின்னங்களை நிறுவியவர் மாமல்லன் என்ற பெயர் கொண்ட முதலாம் நரசிம்மவர்மன் என்று ஒரு கருத்து உள்ளது. வெவ்வேறு மன்னர்கள் காலத்தில் தொடர்ந்து செய்யப்பட்ட பணிகள் இவை என்று கூறுவாரும் உளர். இதை மறுத்து, இராஜசிம்மனாகிய இரண்டாம் நரசிம்மவர்மன்தான் இவை அனைத்தையும் நிறுவினான் என்ற மற்றொரு ஆராய்ச்சியும் உண்டு.''

'' யாராயிருப்பினும் சரி, நீலத்திரைக் கடலோரத்தில் நிலைத்து நிற்கும் இந்தக் கலைக் கோயில்களைக் குடைந்த மன்னனின் புகழும் சிற்பிகளின் புகழும் நீடுழி வாழ்க !'' என்று அந்த அம்மையார் மனமார வாழ்த்தி நின்றார்.

நாங்கள் அங்கிருந்து கடற்கரை ஓரமாக அரசின் சுற்றுலா இல்லத்தினை நோக்கி நடந்தோம். கடற்கரை ஓரத்தில் பரதவப் பெண்ணொருத்தி அலைகளால் ஒதுக்கப்படும் கிளிஞ்சல்களை வலையால் அரித்துக் கொண்டிருந்தாள். அம்மையார் சிந்திய புன்னகைக்கு அன்பளிப்பாகச் சிறிய அழகிய சங்கு ஒன்றை அந்தப் பெண்மணி வழங்கினாள்.



தூரத்தே கட்டு மரங்கள் கடலில் அசைந்தாடி வருவது கண்ணுக்கு இனிய விருந்து படைத்தது !

சுற்றுலா இல்லத்திற்குப் பின்புறக் கடற் பகுதியில் பல வெள்ளைக்கார ஆடவரும் பெண்டிரும் நீந்திக் குளித்துக் கொண்டிருந்தனர். ஒரு வண்ணக் குடையின் அடியில் மடக்கு நாற்காலிகளில் சில வெளிநாட்டார் அமர்ந்திருந்தனர். இரு சிறுவர்கள் அருகில் மணலில் விளையாடிக்கொண்டிருந்தனர்.

'' ஆகா! இந்த இனிமையான சூழ்நிலை என்னை அமெரிக்காவின் மியாமி கடற்கரையையும், இத்தாலியின் எழிற் பகுதிகளையுமே நினைவூட்டுகின்றன ! தமிழகத்தின் ஒரு பகுதியில் இருப்பதையே மறந்துவிட்டேன். எனக்கு இங்கே வாழ வாய்ப்புக் கிடைத்தால் என் வாழ்நாளெல்லாம் இங்கேயே கழிப்பேன் !'' மீண்டும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார், போலந்து அம்மையார்.

சூழ்நிலையின் பிடியிலிருந்து விடுபட்டு நாங்கள் சென்னைக்குப் புறப்பட்டோம். வழியில் புலிக் குகையைப் (அங்குப் புலி கிடையாது—புலியின் தலை போன்ற அமைப்புள்ள கோயில் அது) பார்த்துவிட்டுச் சென்னைக்குத் திரும்பினோம்.

எனது எண்ணச் சுழல்கள் கி.பி. 7-ம் நூற்றாண்டின் பின்னணியிலேயே சுழன்று கொண்டிருந்தன. பல்லவர் காலத்தில் சற்று நேரம் வாழ்ந்துவிட்டது போன்ற பிரமை என்னுள் நிறைந்தது !

எனது எண்ணம் மட்டுமல்ல, மாமல்லபுரத்துக்குச் சுற்றுலா வரும் ஆயிரக்கணக்கான மக்கள், அவர்கள் உள் நாட்டாரோ வேற்று நாட்டாரோ, யாராயிருப்பினும், உலகுக்கு அழியாக் கலையினைத் தந்து மறைந்த பல்லவப் பேரரசின் சிந்தனையிலிருந்து விடுபடுவது அரிது.

மாமல்லபுரத்தைச் சுற்றிப் பார்த்த பின்

**''வண்டை**
**வளம்பதி**
**பாடீரோ**

**மல்லையும்**
**கச்சியும்**
**பாடீரோ**

**பண்டை**
**மயிலையும்**
**பாடீரோ**

**பல்லவர்**
**தோன்றலைப்**
**பாடீரோ''**

என்ற கலிங்கத்துப் பரணியின் பாடல் நமது காதுகளிலே ரீங்காரம் செய்தபடியே இருக்கிறது.

# அம்மா பசிக்குதே!



சாரதா : டாக்டரம்மா! என் பையன் உடம்பு வர வர மெலிஞ்சுக்கிட்டே போகுது.

டாக்டர் நளினி : உடம்புக்கு என்ன ?

சாரதா : அதுதான்மா தெரியலே. பெரிய ஆஸ்பத்திரியிலே ரெத்த பரிசோதனை செய்தாங்க! எக்ஸ்ரே படம் பிடிச்சாங்க, எல்லாத்தையும் பார்த்திட்டு. பையன் 'வீக்கா யிருக்கான். உடம்புக்கு ஒண்ணும் இல்லே. எதுக்கும் எழும்பூர் சிறுவர் மருத்துவ மனைக்குப் போன்னுங்க. அதுனாலேதான் இங்கே எடுத்துக்கிட்டு வந்தேங்க.

டாக்டர் :பையனை இப்படி ஸ்டுலிலே உட்காரவை! (சோதித்துப் பார்க்கிறார்) ஆமாம் இவனுக்கு என்ன கொடுக்கிறே?

சாரதா : பாலு! பவுடர் பாலும்மா! விலை உயர்ந்ததா வாங்கிட்டு வந்துதான் கொடுக்கிருரு, எங்க வீட்டுக்காரரு! இதோ பாருங்க புட்டியிலே கரைச்சி வைச்சிருக்கேன்.

டாக்டர் :(வாங்கிப் பார்த்துவிட்டு) இவ்வளவு தண்ணியாக் கரைச்சி வைச்சிருக்கியே! பையனுக்கு இரண்டு வயதுக்கு மேலே ஆகுது! எப்படிப்போதும் ? ஆமா வேறு என்ன கொடுக்கிறே ?

சாரதா : நாங்க வீட்டிலே சாப்பிடுகிறது எல்லாமே இரண்டு வாய் கொடுக்கிறதுதான்.

டாக்டர்: இந்தா பாரும்மா! கண்டதையும் கொடுத்திட்டு அப்புறம் மருந்து அது இதுன்னு கொடுத்து என்ன பயன்! இது வளரக்கூடிய பருவம். நல்லா புரதம் , வைட்டமின்....

சாரதா : அது என்ன மீனு அம்மா ?

டாக்டர் : மீனு ஒண்ணுமில்லே! சத்துள்ள உணவு.

சாரதா : நாங்க ஏழைங்க! அதுக்கெல்லாம் பணம் ஏதம்மா!

டாக்டர் : நான் சொல்றது நிறையப் பணம் செலவாகிற உணவு இல்லே! சாதாரணமா நம்ப வீடுங்களிலே வாங்குகிற பொருள்கள்தான்! நான் சொல்றதை நினைவிலே வெச்சிக்கோ!

சாரதா : சொல்லுங்கம்மா! மறக்காமே அப்படியே செய்றேன்.

டாக்டர் : பொட்டுக் கடலை இல்லே, அதையும் நிலக்கடலையையும் மாவா அரைச்சு வைச்சுக்கோ! சிறுவர் சிறுமிகளுக்கு நல்லா உடம்பை வளர்க்கக் கூடிய சத்து இதிலே உள்ளது.

சாரதா : அதை அப்படியேவா கொடுக்கிறது?

டாக்டர் பொறு! விவரமாச் சொல்றேன்! அந்த மாவை தண்ணீர், வெல்லம் எல்லாம் சேர்த்து பாயசம் மாதிரி வைச்சுக் கொடுக்கணும். குழந்தைக்கு சாப்பிடவும் சுவையாக இருக்கும்! சத்தும் உள்ளது.

சாரதா : தினமும் அப்படியே கொடுக்கவா ?

டாக்டர் : ஊஹூம்! தினமும் அப்படியே கொடுத்தா குழந்தைகளுக்கு வெறுப்புத் தட்டும். அதனாலே அதையே உப்புமா, தோசை, பொங்கல் இப்படி

பலவகை பலகாரங்களாச் செய்து கொடுக்கலாம்.

அதோட சின்னப்பசங்களுக்கு கீரையை நிறையாக் கொடுக்கலாம். அதிலே இரும்புச் சத்தும் இருக்கு. அதோடே குழந்தைகளுக்கு மலச்சிக்கலும் இருக்காது.

சாரதா : மலச்சிக்கல் வந்தா விளக்கெண்ணெய் கொடுத்தாப் போச்சு டாக்டரம்மா !

டாக்டர் : நோ..நோ!.. விளக்கெண்ணெய் கொடுக்கவேகூடாது விளக்கெண்ணெய் மட்டுமல்ல. எந்த மலமிளக்கிகளையும் பயன்படுத்தக் கூடாது. அதற்குப் பதிலா, அரைக்கீரை, முருங்கைக் கீரை ஆகியவற்றைக் கொடுக்கலாம். கீரைகளை வேகவைக்கும்போது எப்பவும் மூடிவைச்சுத் தான் வேகவிடணும். வெந்த பிறகு அதைக் கடைஞ்சி அதோடு பாலும் சர்க்கரையும், அல்லது மோரும் உப்பும் கலந்து கொடுக்கலாம்.

அப்புறம் காரட் இல்லே காரட்...

சாரதா : ஆமாம்மா! காரட்டுக் கெழங்கு.

டாக்டர் : ஆமாம். அதிலே பிஞ்சிக் கிழங்கா வாங்கி தோலைச் சீவி விட்டு, தேங்காப்பூ மாதிரி துருவிக் கொள்ளணும். அதிலே தண்ணீர் சேர்த்து மூடி வைச்சு வேகவிடணும். வெந்ததும் நல்லாக் கடைஞ்சி, அதோடு சர்க்கரை கலந்து கொடுக்கலாம்.

உருளைக் கிழங்கையும் வேக வைச்சுக் கொடுக்கலாம். ஆனா உருளைக் கிழங்கைத் தோலோடு தான் வேக விடணும். வெந்த பிறகு தோலை உரித்து விட்டு நல்லா மசித்துக்கொடுக்கலாம்.

பையன்: அம்மா ! காப்பி காப்பிம்மா !!

சாரதா : கொஞ்சம் பொறுடா கண்ணு ! போகும்போது நாயர் கடையிலே சாயா வாங்கித் தரேன் !

டாக்டர் : என்னது டீயா ! சேச்சே! வளர்ற குழந்தைகளுக்கு டீ, காப்பி எதுவும் கொடுக்கக்கூடாது. அது குழந்தைகளின் வளர்ச்சியைக் கெடுக்கும். முடிஞ்சா பால் கொடு. அதுவும் தண்ணீர் கலக்காமக் கொடுத்தாத்தான் பையனுக்குப் பசியடங்கும்.



**நம் நாட்டில் மக்கட் தொகைப் பெருக்கம் மிக வேகமாக நடந்து வருகிறது. நிபுணர் கணக்குப்படி நாம் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஆஸ்திரேலிய (நாட்டு ஜனத் தொகையை) நாட்டை உண்டு பண்ணி நம் நாட்டோடு சேர்த்துக்கொண்டிருக்கிறோம். இதைத் தடுத்தாக வேண்டும்.**

சாரதா : பால் பவுடருன்னு!

டாக்டர் : அதுக்கும் நிறைய தண்ணீர் சேர்க்கக் கூடாது. ஒரு தேயிலைக் கரண்டி பால் மாவுக்கு ஒரு அவுன்ஸ் தண்ணீர் சேர்க்கலாம். அந்த மாதிரி ஒரு நாளைக்கு சுமார் 20 அவுன்ஸ் பால் கொடுக்கணும். அப்பத்தான் குழந்தைக்குப் போதும்.

இது தவிர, உனக்கு வசதியிருந்தா மல்டி வைட்டமின் டிராப்ஸ் என்கிற சொட்டு மருந்து வாங்கிக் கொடு. பாட்டில் வாங்கினா 20 நாளைக்குவரும். அதைத் தொடர்ந்து வாங்கிக் கொடுக்கலாம்.

அப்புறம் வாழைப்பழம், சாத்துக்குடி, ஆப்பிள் ஆகியவை கொடுத்தா ரொம்ப நல்லது. வயிற்றோட்டம் இருந்தாத் தவிர, மற்றப்படி பழங்களை எப்பவும் கொடுக்கலாம்.

சாரதா : சளி இருக்கிறப்போ?

டாக்டர் : தாராளமாகக் கொடுக்கலாம். உடம்பிலே சக்தியில்லாததால்தானே சளி பிடிக்குது! ஆகையினாலே பழங்களைக் கொடுக்கிறதிலே எந்தவிதத் தப்புமில்லே !

ஆமா என்ன, பையன் உடம்பு கொஞ்சம் சூடா யிருக்குது ?

சாரதா : எண்ணெய் தேச்சுக் குளிச்சி இரண்டு வாரம் ஆயிடுச்சு அம்மா ! போனதும் தலைக்கு ஊற்றினா சரியாப் போயிடும்.

டாக்டர் : சமையல் செய்வதற்கே எண்ணெய் வாங்கமுடியாதிருக்கும்போது ஏன் எண்ணெய் வாங்கி உடம்புக்குத் தேச்சி வீணடிக்கிறே ! அதனாலே ஒரு பயனும் கிடையாது, தோலைச் சுத்தமாக்குவது என்பதைத் தவிர. உடம்பைச் சுத்தமா வைச்சுக்கிறதுக்கு சீயக்காய்த் தூளையோ, சோப்பையோ போட்டுத் தண்ணீர் ஊற்றினாலே போதுமே !

சாரதா : நேரமாகுதும்மா ! எங்க வீட்டுக்காரருக்கு ஆபீசுக்குச் சாப்பாடு கொடுத்து அனுப்பணும் ! வர்றேன் டாக்டரம்மா !

டாக்டர் : இந்தா இந்தச் சீட்டிலே, மல்டி வைட்டமின் மாத்திரைகள், வைட்டமின்-சி மாத்திரைகள் கொடுக்கச் சொல்லி குறிச்சிருக்கேன். மருந்துக் கவுண்டரில் போய் வாங்கிக்கோ. தொடர்ந்து வந்து இரண்டு வாரத்திற்கு வாங்கிக்கோ. நான் சொன்ன பக்குவப்படி சத்துணவைக் கொடு! பையன் சீக்கிரம் தேறிடுவான்.

சாரதா : வரேன் டாக்டரம்மா.




‘நம்முடைய உணவு முறைகளில் மாற்றம் வேண்டும்.’

இந்தக் கருத்து, பல்வேறு முறைகளில் நமக்கு எடுத்துரைக்கப்படுகிறது.

உணவு உற்பத்தியில் நம்நாடு இன்னும் தன்னிறைவை முழுமையாகப் பெறாததனால்— உணவு தானியங்களை இறக்குமதி செய்ய வேண்டிய இடர்ப்பாடுகளினால் இவ்வாறு சொல்லப்படுகிறது.

அரிசி, கோதுமை தவிர இதர தானியங்களை நாம் பயன்படுத்தி உணவு தயாரிக்க வேண்டும் என்பதாலும் சொல்லப்படுகிறது.

நாம் விரும்பி உண்ணும் உணவுகளில் போதிய ஊட்டச் சத்து இல்லை என்பதாலும் எடுத்துரைக்கப்படுகிறது.

பெரும்பாலான மக்கள் உண்ணும் உணவுகளில் உடலுக்குத் தேவையான போதிய சத்துக்கள் இல்லை என்பது உண்மையாகும்.

எனவே, நம் உணவு முறையில் மாற்றம் ஏற்பட்டால் நமக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது. வழக்கமான நம் உணவு முறைகளை அதிகச் செலவில்லாமலே மாற்றிக்கொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, வாழைப் பழம் முதலியவைகளுடன் நிலக்கடலைமாவு மற்றும் இதர உணவு வகைகளைச் சேர்த்துக் கொண்டால் அதிக நன்மையுண்டாகும்.

இந்த உணவுகளில் மிகுதியான சுவையும் உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்தும் உண்டு. ஓர் ஆணுக்கு ஒரு நாளைக்குத் தேவையான 2,300 கலோரிகளையும் ஒரு பெண்ணுக்கு ஒரு நாளைக்குத் தேவையான 2,000 கலோரிகளையும் இந்த மாற்றுப் பொருள்கள் அளிக்கின்றன.

எனவே, புதிய உணவு முறைகளில் நாம் ஆர்வம் காட்டுவது முறையாகும்.

உணவு முறைதான் புதிதே தவிர உணவு வகைகள் புதியன அல்ல. பன்னெடுங்காலமாக வழக்கில் இருந்து வருவனதான். ஆனால், அவைகளுக்கு முக்கியத்துவத்தை அளிக்காமல் ஒதுக்கி வைத்து விட்டோம். அவைகளின் முக்கியத்துவத்தை

## சமையல் மொழிகள்



தன் மனைவி கிரேக்க மொழியில் புலமை பெறுவதைக் காட்டிலும் அவள் நன்றாகச் சமைப்பதையே ஒருவன் விரும்புவான்.

**டாக்டர் ஜான்சன்.**

சமையல் என்றால் என்ன? கொள்ளுப் பாட்டியின் சிக்கனமும், தற்கால விஞ்ஞானமும் பிரெஞ்சுக் கலை உணர்வும் அராபியர்கள் விருந்தோம்பலும் இருக்கவேண்டும்.

**ஜான் ரஸ்கின்.**

பெண்கள் தாங்களே சமையல் அறைக்குள் சென்று எல்லாவற்றையும் நேரில் கவனித்தால் ஒழிய, எந்த வீட்டிலும் நல்ல உணவு தயாரிக்க முடியாது.

**பிஷர்.**

சமையல் கலை வளர்ச்சி அடைந்த பின்னர் மனித சமூகம் இயற்கையாகத் தேவையானவற்றைக் காட்டிலும் இருமடங்கு அதிகமாகச் சாப்பிடுகிறது.

**பிராங்க்ளின்.**

சமையல் அறைக்குள் சென்று உணவு தயாரிக்காதவள், சமைத்த உணவை வேளாவேளைக்குப் பரிமாறாதவள், பெண் அல்லள்.

**விவேக சிந்தாமணி.**

யும் ஊட்டச் சத்தையும் உணர்ந்து புதிய மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

## கம்பு ரொட்டி

தேவையான பொருள்கள்:

| | | |
|---|---|---|
| கம்பு மாவு | .. | 450 கிராம். |
| உப்பு | .. | $1\frac{1}{2}$ தேக் கரண்டி. |
| தண்ணீர் | .. | $1\frac{1}{2}$ கோப்பை |
| வெண்ணெய், நெய் அல்லது எண்ணெய். | | 30 லிருந்து 50 கிராம் |

செய்யும் முறை:

1. மாவைச் சலித்து உப்பைச் சேர்க்கவும்.

2. சிறிது மாவைத் தனியாக வைத்து, தண்ணீர் ஊற்றி நன்ருகப் பிசைந்து கொள்ளவும்.

3. ரொட்டி மாதிரி தோசைக் கல்லில் தட்டி அவ்வப்போது நெய் அல்லது எண்ணெய்யை ஊற்றி எடுக்கவும்.

இப்படி எடுக்கக் கம்பு ரொட்டி மிகவும் சுவையான தாக இருக்கும். மேற்சொன்ன அளவில் செய்யப்படும் கம்பு ரொட்டியை நான்கு பேர் சாப் பிடலாம்.

## சோளமாவு ரொட்டி

தேவையான பொருள்கள் :

| | | |
|---|---|---|
| சோளமாவு | .. | 450 கிராம் |
| உப்பு | .. | $1\frac{1}{2}$ தேக் கரண்டி. |
| தண்ணீர் | .. | $1\frac{1}{2}$ கோப்பை |
| நெய் | .. | 30 கிராம் |

செய்யும் முறை.

கம்பு ரொட்டி மாதிரியே இதையும் தயாரிக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்ட அளவுப் படிச் செய்தால் ஆறு ரொட்டி கள் தயாரிக்கலாம்.

## உளுத்தம்பருப்பு ரொட்டி.

தேவையான பொருள்கள் :

| | | |
|---|---|---|
| உளுத்தம்பருப்பு | .. | 225 கிராம் |
| கோதுமை | .. | 225 கிராம் |
| மல்லிப் பொடி. | .. | 5 கிராம் |
| சுக்குப் பொடி. | .. | 1 தேக் கரண்டி. |
| மஞ்சள் பொடி. | .. | 1 தேக் கரண்டி. |
| மிளகாய்ப்பொடி | .. | 1 தேக் கரண்டி. |
| உப்பு | .. | தேவையான அளவு. |
| எண்ணெய் | .. | 10 கிராம் |
| நல்ல நெய் | .. | 10 கிராம் |

செய்யும் முறை.

1. பருப்பை முதல் நாள் இரவு ஊறவைத்து மறுநாள் நன்ருக மாவுபோல் அரைத்துக் கொள்ளவும்.

2. எண்ணெய்யைச் சூடாக்கி, பருப்பு, மஞ்சள் பொடி, மல் லிப்பொடி, சுக்குப் பொடி, மிளகாய்ப் பொடி முதலியவற் றுடன் உப்பும் போடவும்.

3. சிறிது நேரம் வதக்கவும்.

4. மெதுவான சூட்டில் பருப்பு வேகும் வரை சமைக்க வும்.

5. நன்ருகக் கலந்து கீழே இறக்கி ஆறவைக்கவும்.

6. கோதுமை மாவுடன் கலந்து கெட்டியாக ஆகும்வரை வைக்கவும்.

7. அரைமணி நேரத்திற்குப் பிறகு சிறு சிறு உருண்டையாக ஆக்கவும்.

8. சப்பாத்தி மாதிரி, கல்லில் போட்டு வேகவிடவும்.

9. நெய்யைத் தடவிக் கல்லில் வதக்கவும்.

இந்த அளவில் செய்வதை நான்கு பேர் சாப்பிடலாம். அருமையாக இருக்கும்.

— அஞ்சன

## உங்களுக்குத் தெரியுமா ?

### பள்ளியா பப்பாளியா ?

தஞ்சை மாவட்டத்தில் பல பள்ளிகளிலும், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலும் பப்பாளி மரங்களும், முருங்கை மரங்களும் உள்ளன.

இதற்குக் காரணம், இந்த மரங்களைப் பரப்புவதில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அந்தோணி காட்டும் ஆர்வமே! எந்த விழாவானுலும், பப்பாளியும், முருங்கையும் நடுவதும் அதிலொரு நிகழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிருர்.

பப்பாளிக்கும், முருங்கைக்கும் அதிக இடம் தேவையில்லை. வீட்டுக் கொல்லையிலோ அலுவலகத்தின் அருகினிலோ எங்கு வேண்டுமென்ருலும், நடலாம். பப்பாளிப் பழம், முருங்கைக் கீரை, முருங்கைக்காய் ஆகியவை சுவை மிகுந்த சத்து நிறைந்த உணவுப் பொருட்கள் என்பதே இதற்குக் காரணம்.

### யார் இந்த ஐ.ஆர் ?

ஐ.ஆர். 8; ஐ.ஆர். 27 என்று பெயர் கொடுக்கிருர்களே அந்தப் பெயர்கள் எவ்வாறு வந்தன தெரியுமா ?

பிலிப்பைன்ஸ் நாட்டில் அனைத்துலக அரிசி ஆராய்ச்சி நிறுவனம் (Inter-National Rice Research Institute) உள்ளது. அங்கு கண்டுபிடிக்கப்பட்ட நெல் வகைகளுக்கு அதன் ஆங்கிலப் பெயரின் முதல் இரு வார்த்தைகளின் முதல் எழுத்துக்களைச் சேர்த்துக் கொள்கிருர்கள்.




# நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை

தூத்துக்குடி முதல் டிம்பக்டூ வரை பூமிப் பந்திலே தமிழ் மக்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ, அவர்கள் இதயங்களில் எல்லாம் தங்கச் சிம்மாசனம் போட்டு அமர்ந்து செங்கோலோச்சிய அண்ணன்—நாடு மணக்க வந்த கற்பூரச் சொற்கோ—அந்தப் பேரறிஞர் பெருந்தகை துயிலும் கடற்கரை—மெரினா— சிங்காரச் சென்னையின் அழகுத் தொட்டில்—கடற்கரைப் பாதையின் எதிர்மருங்கில் ஓடி வந்து நிற்கிறது '' ஜீப் '' ' எழிலகத்தின் ' முன்னால் !

' எழிலகம் '! தமிழ் கொஞ்சி விளையாடுகிறது ! நம் ஊனோடும் உயிரோடும் கலந்து விட்ட தமிழ், இன்று நான்மாடக் கூடங்களிலே —நல்லோர்கள் நாவினிலே— நல்லாட்சி நடைபெறும் டணிமனைகளிலே—பட்டி தொட்டிகளிலெல்லாம் அரசோச்சுகின்றது அந்தப் பிரம்மாண்டமான கட்டடத்தின்—எழில் கொஞ்சும் 'எழிலகத்'தின் படிக்கட்டுகளிலே ஏறி வலது பக்கம் திரும்புகிறோம். ' கைத்தறி இயக்குநர் அலுவலகம் ' என்ற பெயர்ப் பலகை நம்மை 'வாருங்கள்' என்று அழைப்பது போல் ஒரு பிரமையைத் தோற்றுவிக்கிறது!

இயக்குநர் இல்லை. கூட்டு இயக்குநர் இருக்கிறார்! யார் என்று தெரிந்து கொண்டதும் 'வாருங்கள்' என்று கரம் கூப்பி வரவேற்புக் கூறுகிறார். வந்த காரியத்தை விளக்குகிறோம்.

அவர் ஆரம்பித்து விடுகிறார்............'' கைத்தறித் தொழில் தமிழ் நாட்டின் பழமையான தொழில். வேளாண்மைக்கு அடுத்தபடியாக முக்கியமான தொழில் '' என்று கூறிவிட்டு ''கைத்தறித் தொழில் பற்றி சில முக்கியமான தகவல்களைச் சொல்கிறேன். கொஞ்சம் புள்ளி விவரங்களாக இருக்கும். இருந்தாலும் முக்கியமான தகவல்கள்......'' என்கிறார்.

'' சொல்லுங்கள்....அவையும் முக்கியம் தானே....''

அவர் சில ரிகார்டுகளைத் தேடுகிறார். அறையின் சாளர வழியாக வெளியே கண்களை ஓட்டுகிறோம். அங்கே, வெளியே, கண்ணுக்கெட்டிய தூரத்திலே அறிஞரின் சமாதி....சில ஆண்டுகளுக்கு முன்னால், இந்த நாட்டு மக்களின் துயர் களைய, ஏழை நெசவாளர்களின் கண்களிலே வழிந்தோடிய கண்ணீரைத் துடைக்க, ஆயிரமாயிரம் காளையர்கள் தங்கள் தடந்தோள்களிலே கைத்தறித் துணிகளைப் போட்டுக் கொண்டு வீதி வீதியாக விற்றார்களே—அந்த அருமைத் தம்பிகளின் அண்ணன்— தமிழகத்தின் விடிவெள்ளி— அதோ படுத்துக் கொண்டிருக்கிறார் ! நம் கண்களில் நீர் கலங்குகிறது. அவருக்குத் தெரியாமல் கலங்கும் கண்களைத் துடைத்துக்கொண்டு பார்வையைத் திருப்புகிறோம்......

'' நம் நாட்டில் மொத்தம் 25 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இதில் நம் செந்தமிழ் நாட்டில் மட்டும் 5½ இலட்சம் தறிகள் உள்ளன. இவற்றை நம்பி 20 இலட்சம் தமிழ் மக்கள் வாழ்வு நடத்துகின்றனர். ஆண்டொன்றுக்குச் சுமார் 48 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணி உற்பத்தி செய்யப்படுகிறது......'' சற்று நிறுத்திவிட்டுப் பின்பு தொடர்கிறார்!

'' கைத்தறித் தொழில் பிரமாண்டமான தொழில் தான். ஆனால், ஆலைத் தொழிலுடன் போட்டி போட முடியவில்லை. புதுப்புது டிசைன்கள் ஆலைகளில் தயாரிக்கப்பட்டு, மார்க்கெட்டுகளில் குவியவே, கைத்தறித் துணிகளால் ஈடு கொடுக்க முடியவில்லை. கைத்தறித் தொழிலில் ஒரு தேக்கம். இந்தத் தொழிலை

நம்பியிருக்கும் இலட்சோப இலட்சம் குடும்பங்கள்—ஜீவ மரணப் போராட்டமே நடத்த வேண்டி வந்தது. எது எப்படியானாலும் இந்தத் தொழிலை நசியவிடக் கூடாது. இந்தஅவல நிலையைப் போக்கியே தீருவதென அரசு கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்தது.

''ஒன்றை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் மறந்து விடக் கூடாது. தாய்க்குலத்தை நாம் கையெடுத்துக் கும்பிட வேண்டும். தாய்மார்கள் கைத்தறித் துணிகளை ஆதரிக்காமல் இருந்திருந்தால்—புது மோகம் கொண்டு ஆலைத் துணிகள் பக்கம் திரும்பியிருந்தால்—இத்தொழில் தமிழகத்தில் அப்பொழுதே நசித்துப் போயிருக்கும். அந்த அவல நிலை ஏற்படாமல், அன்று தாய்க்குலம் தான் கைகொடுத்தது; இன்றும் கை கொடுக்கிறது. அத்துடன், இத்தொழில் வளர மக்கள் தலைவர்கள் காட்டிய ஆர்வத்தையும் உழைப்பையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது.''

''கைத்தறித் திட்டத்தைக்கூட்டுறவுத் துறைமூலம்தான் செயல்படுத்த வேண்டும் என்று அரசு முடிவெடுத்தது. இன்று தமிழகத்தில் 1,000 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 2·11 இலட்சம் தறிகள் செயல்பட்டுவருகின்றன. மொத்தம் உள்ள தறிகளில் 38 சத விகிதம் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்கி வருகின்றன. தனிப்பட்ட நெசவாளர்களுக்குப் பங்குத் தொகைகள் கடனுக அளிக்கப்படுகின்றன. நல்ல நவீன இரகங்களை நெய்யும் பொருட்டு, நெசவாளர்களுக்குத் தேவையான நவீன உற்பத்திக் கருவிகள் வாங்க முக்கால் பங்கு மானியமும் கால் பங்கு கடனும் அளிக்கப்படுகின்றன. நூதன முறையில் நெய்வதற்காகப் புது முறைப் பயிற்சியும் அளிக்கப் படுகிறது.''

''அது மட்டும் போதுமா? துணி வாங்குபவர்களுக்கு ஓர் ஊக்கம், ஒரு தூண்டுதல் வேண்டாமா? அதற்காகக் கைத்தறித் துணி விற்பனைத் தொகையில் தள்ளுபடி தரப் படுகிறது. மூலப் பொருள்கள் வாங்கக் குறைந்த வட்டியில் கடன் உதவியும், விற்பனையைப் பெருக்க விளம்பர மானியமும் அளிக்கப்படுகின்றன. நெசவாளர் குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன. இதுவரையில் 2,683 வீடுகள் கொண்ட 32 நெசவாளர் குடியிருப்புகள் தமிழகத்தில் உள்ளன. இதற்கான செலவு ரூபாய் 128 இலட்சத்தை அரசு மானியமாகவும் கடனுகவும் கொடுத்துள்ளது.....



''அத்துடன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களிடையே சிக்கனம், சேமிப்புப் பண்புகளை உண்டாக்க, ஒரு புது முறைத் திட்டம், நம் தமிழகத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உறுப்பினர்கள் தங்கள் கூலியிலிருந்து ரூபாய்க்கு 6 காசு வீதம் சிக்கன சேமிப்பு நிதிக்குச் செலுத்துவார்கள், அதற்கு ஈடாகச் சங்கம் 2 காசும், அரசு 4 காசும், மானியமாக அளிக்கும். இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் 8,500 நெசவாளர்கள், ரூ. 30 இலட்சம் சேமித்துள்ளார்கள்.''

''நல்ல தரமான நூல் குறைந்த விலையில் கிடைக்க வேண்டுமல்லவா? அதற்காக வேண்டி, கூட்டுறவுத் துறையில் 12 நூற்பாலைகளைத் தமிழக அரசு நிறுவியுள்ளது. சென்னை, தர்மபுரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக, மற்ற எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு ஒன்று என்று இக் கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன.''

''கூட்டுறவுத் துறையில் சேராத மற்ற நெசவாளர்களின் நலனைப் பாதுகாக்க ''கைத்தறி நிதிக் கார்ப்பரேஷன்'' ஒன்று 1964-லிருந்து இயங்கி வருகிறது. சென்ற ஆண்டில் மட்டும் 140 இலட்சம் ரூபாய் அளவுக்கு இந்நிறுவனம் கடனுக வழங்கியுள்ளது.

''கைத்தறித் துணிகளுக்கு ஒரு கவர்ச்சி ஏற்பட்டதற்கே காரணம், காலத்திற்கேற்ப, வளர்ந்து வரும் நாகரிக உணர்வுகளுக்கேற்ப, டிசைன்கள் வந்ததால் தான். இம்மாதிரி புது இரகங்களை தயார் செய்வதற்கு வழி காட்டுவதற்காக கைத்தறி சேவா நிலையம் ஒன்றும் அரசினுல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்றைக்கிருப்பது நாளைக்குப் பிடிக்குமா என்று சொல்ல முடியாத உலகம் இது. புதுப் புது ஆசைகள், புதுப்புது விருப்பு வெறுப்புகள் உள்ள இந் நிலையில், ஆலைத்துணிகளுடன் ஈடு கொடுத்துக் கொண்டு, மார்க்கெட் சரிந்து விடாமல் சமாளித்துக் கொண்டு இன்று கைத்தறித் துணியும் நடைபோட முடிகிறது என்றுல் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? பழம் பெருமை வாய்ந்த—சிறந்த கை நுணுக்கம் உள்ள தொழில் என்பது ஒரு புறமிருக்கட்டும்; கைத்தறித் துணிகள் தயாரிப்பதில், புதுப் புது டிசைன்களை உருவாக்குவதில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தைத் தோற்றுவித்தது தான் முக்கிய காரணம்.

''கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண டிசைன்களை இன்று ஏராளமாகப் பார்க்கிறோம்.



இப்படிப்பட்ட புதுப் புது இரகங்களை நெய்வதில் பயிற்சி அளிப்பதற்காக வேண்டி ஒரு பயிற்சித் திட்டம் கடந்த பிப்ரவரி 15-ம் தேதியிலிருந்து தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மற்ற எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு ஒன்று என்று ஒரு பயிற்சி நிலையம் துவக்கப்பட்டுள்ளது.

'' செங்கை மாவட்டத்தில் காஞ்சிபுரத்திற்கு இரண்டு மைலில் உள்ள அய்யம்பேட்டை என்ற ஊரில் உள்ளது இந்தப் பயிற்சி நிலையம். காஞ்சிபுரம் நகர்தான் கைத்தறித் தொழிலின் இதயம்........ இந்த அய்யம்பேட்டை இருக்கிறதே.. அந்த ஊர் பூராவுமே நெசவாளர் குடும்பங்கள்தான்.. ஒருத்தர் பாக்கி விடாமல் ஊர் மக்கள் அத்தனை பேரும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் தான் ! என்ன சொன்னாலும் உங்களுக்கு ரசிக்காது. நேரில் சென்று பார்த்தால்தான் தெரியும் !''

'' கட்டாயம் போகிறோம் !''

'' ரொம்ப மகிழ்ச்சி....அய்யம்பேட்டையில் உள்ள பயிற்சி நிலையத்தையும் போய்ப் பாருங்கள். இப் பயிற்சித் திட்டத்தின் கீழ் 2,160 நெசவாளர்கள் பயிற்சி பெறுவார்கள். பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் 100 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சிக் கால அளவு 45 நாட்களாகும். இப் பயிற்சித் திட்டத்தில் புடவை இரகங்கள் சேர்க்கப்படவில்லை. படுக்கை விரிப்புகள், சமுக்காளங்கள், துண்டுகள், கைத் துண்டுகள், சட்டைத் துணிகள், முதலிய இரகங்களில் புதுப் புது டிசைன்களை மக்களின் விருப்பத்திற்கேற்ப, கண்ணையும், கருத்தையும் கவர்கின்ற வகையில் நெய்வதற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியாளர்களுக்கு வேண்டிய நூதனக் கருவிகள் மானியமாகவும், கடனாகவும் வழங்கப்படுகின்றன. இது ஒரு புதிய திட்டம். 15-2-70-லிருந்து செயல்படுத்தப்படுகிறது.''

''எல்லாம் சரி....கைத்தறியில் பட்டு இரகங்களைத் தயார் செய்வதற்கான மூலப் பொருள்கள்—பட்டு நூல், சரிகை போன்றவை தமிழகத்தில் கிடைப்பதில்லையாமே ? வெளி மாநிலங்களிலிருந்து வாங்குகிறீர்களாமே....?''

'' நீங்க சொல்வது ரொம்பச் சரி.. பொதுவாகக் கைத்தறித் தொழிலில் எல்லாத் துறைகளுக்கும் வேண்டிய இரசாயனப் பொருள்களும், சாய மருந்து





8-எ

களும் மற்ற மாநிலங்களிலிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும் வாங்கப்படுகின்றன. இதனால் விலையில் அடிக்கடி மாற்றமும் தட்டுப்பாடும் ஏற்படுகின்றன. இதையெல்லாம் தவிர்க்கவேண்டி, இவற்றையெல்லாம் தமிழ் நாட்டிலேயே உற்பத்தி செய்யும்வகையில் இரண்டு ஆலைகளை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. இதில் இன்னொரு விசித்திரம் ! பட்டு இரகங்களுக்கு வேண்டிய சரிகை பூராவையும் மராட்டிய மாநிலத்தில் உள்ள சூரத்திலிருந்துதான் வாங்க வேண்டியுள்ளது. இது ஒரு பெரிய சிக்கல். இதற்காகக், குறைந்த விலையில் சரிகைகள் இங்கேயே கிடைப்பதற்காக, 25 இலட்சம் ரூபாய் செலவில் காஞ்சிபுரத்தில் சரிகை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றினை நிறுவ அரசு ஏற்பாடு செய்து வருகிறது. மேலும் முக்கியமான மூலப் பொருளான பட்டு நூல் கிடைப்பதில் ஏற்படும் சிக்கல்களைச் சமாளிக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

'' ஆலைத் துணி, விசைத் தறித் துணி ஆகியவற்றுடன் கைத்தறித் துணி ஈடு கொடுக்க வேண்டியுள்ளது. இதற்காகக், கைத்தறித் துணி சில்லறை விற்பனைக்கு ரூபாய்க்கு 5 பைசாவும் மொத்த விற்பனைக்கு ரூபாய்க்கு 3 பைசாவும் தள்ளுபடி ஆண்டு முழுவதும் கொடுப்பதற்காக அரசு மானியம் அளித்து வருகிறது. தீபாவளி, பொங்கல், கைத்தறி வார விழா ஆகிய சிறப்புக் காலங்களில் ரூபாய்க்கு 10 பைசா வீதம் தள்ளுபடி வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் 1968-69-ல் 85 இலட்சம் ரூபாயும் 1969-70-ல் 90 இலட்சம் ரூபாயும் மானியமாக வழங்கப்பட்டன...''



'' இன்னும் ஒன்றினைச் சொல்லிட வேண்டும். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பலப்படுத்த அவற்றில் நேரடியாக அரசே பங்குகள் எடுத்துக்கொள்ளும் திட்டம் ஒன்று தமிழக அரசால் 1967-68-லிருந்து அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த மூன்றாண்டுகளில் 18 இலட்சம் ரூபாய் அரசினால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பங்குகளாக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

'' கைத்தறித் துணி விற்பனையில் தேக்கம் ஏற்படும் காலங்களில் அரசு முன்வந்து தமிழ் நாடு சங்கத்திற்குக் கடன் அளிக்கிறது. இந்த வகையில் தற்காலக் கடனாக இல்லாமல் நீண்ட காலக் கடனாக 75 இலட்சம் ரூபாயை அரசு 1968-ல் தமிழ் நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அளித்துள்ளது. கைத்தறித் தொழிலின் வளர்ச்சியில் அரசு தனிப்பட்ட அக்கறையுடன் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. எல்லாரும் தெரிந்துகொள்ளட்டுமே என்பதற்காகத்தான் சொன்னேன்.''

'' மிக்க நன்றி.. வணக்கம் '' என்று கரங்கூப்பி விடைபெற்றுக்கொண்டு புறப்படுகிறோம்....




நிருபர்: உங்கள் இளமையின் ரகசியமென்ன ?

நடிகை : நான் பொய்ப்பல் மாட்டியிருக்கிறேன். பொய் முடி அணிந்திருக்கிறேன்.

கல்லூரியில் யாரைச் சேர்க்கணும் ? உங்க பையனையா ?

இல்லை சார் ! என்னைத்தான் !





# அச்சமில்லை! அச்சமில்லை!

டாக்டர் பி. ஆர். பாலகிருஷ்ணன்

டாக்டர் விவேகானந்தன்;—அடேடே! என்னங்க இங்கே வந்து உட்கார்ந்திருக்கீங்க?

சுந்தரம்:—ஆமாம் விவேக்! உனக்காகத்தான் காத்திருக்கிறேன். பெரிய டாக்டருடன் நீ நோயாளிகளைப் பார்க்கப் போயிருப்பதாகச் சொன்னார்கள். இப்போது நீ உதவி சர்ஜனாகத்தானே இருக்கிறாய்?

விவேக்:—இல்லை. நான் இப்போது லீவு எடுத்துக் கொண்டு எம். எஸ். (M. S.) படித்துக் கொண்டிருக்கிறேன்.

சுந்தரம்:—அப்படியா ரொம்ப மகிழ்ச்சி. உன்னிடம் என் சந்தேகங்களைத்தீர்த்துக்கொள்வது எளிதாகிவிடும் என்று நினைக்கிறேன். என் மனத்தில் ஒருமிகப் பெரிய வேதனை அரித்துக் கொண்டிருக்கிறது. விவேக்......ஆமாம் மிகப் பெரிய வேதனை!

விவேக்:—என்ன இப்படிக் கண் கலங்குகிறீர்கள்? வாருங்கள், என் விடுதி அறைக்குப் போய் அமைதியாக உட்கார்ந்து பேசலாம்.

(விடுதியறையை அடைகின்றனர்)

விவேக்:—இந்தாருங்கள்! நீங்கள் முதலில் இந்தக் குளிர்ந்த பானத்தைச் சாப்பிடுங்கள். அப்புறம் நாம் பேசலாம்.

சுந்தரம்:—எதற்கப்பா இதெல்லாம்? ஏன் இப்படிச் சிரமப் பட்டுக் கொள்கிறாய்? நீ உட்கார். என் சந்தேகங்களைத் தெளிவாக்கிக் கொள்ள மட்டுமல்ல, ஒரு உயிரின் வேதனையைக் குறைக்கவும், ஏதாவது நல்ல வழி கிடைக்குமா என்பதற்காகவுமே நான் வந்திருக்கிறேன். எல்லாம் என் பிள்ளை ரமணனைப் பற்றித்தான்!

விவேக்:—ரமணனுக்கு ஏதாவது உடம்பு சரியில்லையா? அவன் பள்ளியிறுதித் தேர்வில் நல்ல மார்க் வாங்கித் தேர்ச்சியடைந்திருக்கிறான். கல்லூரியில் சேருவதற்குள், உடம்பு சற்றுத் திடமாகவேண்டுமே என்று குடும்ப டாக்டர் அரவிந்தனிடம் அழைத்துச் சென்றேன்.

விவேக்:—அவர் என்ன சொன்னார்?

சுந்தரம்—அவர்ஏதாவது டானிக் எழுதித் தருவார் என்று நினைத்துத்தான் போனேம். ஆனால் அவர் சொன்னதோ எங்களிருவருக்குமே பேரிடியாக இருந்தது.

விவேக்:—அப்படி என்ன சொன்னார்?

சுந்தரம்:—ரமணனின் இருதயத்தில்ஏதோ 'மர்மர்'கேட்பதாகவும், அது பிறவியிலேயே அமைந்த இருதயக் கோளாருக இருக்கலாம் எனவும் கூறி ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போகும்படியும் கூறினார். இங்கு தான் அவனுக்கு என்ன வியாதியெனஆராய்ந்து தேர்ந்து சிகிச்சையை நிர்ணயிப்பார்கள் என்றுகூறினார். எனக்கென்னவோ அவர் தைரியம் கூறியும் சமாதானமடைய முடியவில்லை. யோசித்துப்பார் விவேக்!

வி:—டாக்டர் அரவிந்தன் கூறியபடி ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தீர்களா?

சு:—ஆம்! அழைத்துச் சென்றேன். அங்கு டாக்டர்கள் நீண்ட நேரம் பார்த்து விட்டு ஏ.எஸ்.டி. என்று குறிப்பிட்டார்கள். ஏ.எஸ்.டி. என்றால் என்ன விவேக்?

வி:—ஏ.எஸ்.டி: என்று சொன்னார்கள்? Atrial Septal Defect.— அது பிறவியிலேயே அமைந்து விடுகிற இருதயக் கோளாறுகளில் ஒன்றுதான். தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டிய இருதய மேல் அறைகளின் நடுச்சுவர் பூரணமாக ஒருதடுப்பாக நிற்காமல், அரை குறையாகநின்று விடுகிறது. இப்படி அமையும் துவாரத்தின் வழியாக இரத்தம் இடது பக்கத்திலிருந்து, வலது பக்கத்திற்கு வந்து பாய்ந்து கலந்தவாறு உள்ளது. இந்த வியாதி கொண்ட அநேகரை நான் பரிசோதித்திருக்கிறேன்..... அப்புறம்! வேறு என்ன சொன்னார்கள்?

சு:—அவர்கள் அடுத்த வாரம் மார்பு சிகிச்சைப் பிரிவுக்கு (Thorasic) என்னைப் போகும்படிக் கூறினார்கள். பையனுக்கு ஏதாவது ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று சொல்லி விட்டால் என்னால் அந்தச் செய்தியைத் தாங்கிக் கொள்ளவே முடியாது.

வி:—நீங்கள் முதலில் கவலைப் படுவதையும், பயப்படுவதையும் விட்டு விடுங்கள். பின்பு



நான் சொல்வதைப் போல் செய்யுங்கள். அடுத்த வாரம் அவர்கள் குறிப்பிட்ட தினத்திலேயே 'தொராசிக்' பிரிவுக்குச் சென்று காட்டுங்கள்.

சு:—அங்கு போனல் அவர்கள் என்ன செய்வார்கள்

வி:— பூரணமாகப் பையனைச் சோதித்து விட்டுப்பின் தேவையானல் உள்ளே சேர்த்து 'ரத்தப் பரிசோதனை', 'சிறுநீர் பரிசோதனை' முதலான அடிப்படைப் பரீட்சைகளை எல்லாம் முடித்து விட்டு, ஃப்ளூராஸ்-கோப்பி (Fluroscopy) வீனஸ் பிரஷர் (Venus Pressure) சர்குலேஷன் டைம் (Circulation time) எலக்ட்ரோ கார்டியோ கிராபி (Electro Cardiography) கார்டியாக் கத்தீட்ரைசேஷன் (Cardiac Catheterisation), ஆஞ்சியோ கிராபி (Angiography) முதலானவற்றுள் தேவையானவற்றைச் செய்து இன்ன வியாதிதான் எனச் சந்தேகமறத் தேர்ந்து, பின் இதற்கு ஆபரேஷன் தேவையா, ஆபரேஷன் செய்வதனல் எவ்வளவு தூரம் நன்மை ஏற்படும், செய்யாவிட்டால் பின்னல் என்


# தச்சு, கருமார் வேலைப் பயிற்சி

## பயில்வோர் தேவை

இடம் :—கிராம விரிவாக்கப் பயிற்சி நிலையத் தொழிற்கூடங்கள்: தே. கல்லுப்பட்டி, பவானிசாகர், பட்டுக்கோட்டை, சத்ய விஜயநகரம், கிருஷ்ணகிரி.

பயிற்சிக் காலம் :—ஓர் ஆண்டு.

தேவைகள் :—(அ) தமிழ் பேச, படிக்க, எழுதத் தெரிய வேண்டும்.

(ஆ) தச்சு அல்லது கருமான் வேலையில் குறைந்த அளவு மூன்று ஆண்டுகள் அனுபவம் இருக்கவேண்டும்.

உதவித் தொகை :—மாதம் ரூ. 45 (ரூபாய் நாற்பத்தைந்து)

விண்ணப்பித்தல் :—விண்ணப்பதாரரின் பெயர், தகப்பனர் பெயர், முகவரி, பிறந்த தேதி, படிப்புத் தகுதி, தச்சு அல்லது கருமார் வேலையில் உள்ள அனுபவம் குறித்து ''கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், குறளகம், சென்னை-1'' என்ற முகவரிக்கு செப்டம்பர் 20-ஆம் நாளுக்குள் அனுப்ப வேண்டும்.

பயிற்சி முடித்ததும் பயிற்சி பெற்றோர் தங்களுடைய கிராமத்தில் தொழிற்பட்டறை அமைத்துக்கொள்ள வேண்டும். இதற்கு வேண்டிய உதவிகள் செய்யப்படும். பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு உதவித் தொகை ரூ. 45-ம் சீருடையும் வழங்கப்படும்.

ஜே. எச். எஸ். பொன்னையா,
கிராம வளர்ச்சி இயக்குநருக்காக.



னென்ன கெடுதல்கள் நேரக் கூடும் என்பதையெல்லாம் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவார்கள்.

சு :—ஆபரேஷனா ? அதைச் செய்யாமல் வேறு விதமாகச் சிகிச்சை செய்யக்கூடாதா ?

வி :—ஒரு மகன் என்ற முறையில், ஆபரேஷன் என்றதும் தாங்கள் எப்படிக் கவலையுடன் இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்களோ, அதை விட அதிகப் பொறுப்போடும் கவலையுணர்வோடும் ஓர் உயிருக்கு எத்தனை அதிக நன்மை அளிக்க முடியுமோ அத்தனை நன்மைகளையும் அளிக்க வேண்டுமே என்று தம்மையே வருத்திக்கொண்டு டாக்டர்கள் தங்கள் கடமையை ஆற்றுகிறார்கள்.

சு :—இருதயத்தில் ஆபரேஷன் என்றாலே எனக்கு நடுக்கமாக இருக்கிறதே..........

வி:—இதய ஆபரேஷன் என்றால் அஞ்சுவதற்கு ஒன்றுமேயில்லை. கடந்த முப்பதுவருட காலத்தில் இருதய சிகிச்சை வளர்ந்ததுபோல் வேறு எந்தத்துறையுமே வளர்ந்ததில்லை எனச் சொல்லலாம். இருதயத்தில் இன்ன கோளாறுகள் என்று அறிவதற்கான முறைகளும் கருவிகளும் மயக்கமடையச் செய்வதற்கான துறைகளில் உண்டான முன்னேற்றமும் அறுவைச் சிகிச்சைக்குப் பின்பு தொடர்ந்து அளிக்கப்படும் விசேடக் கவனிப்பும் இந்த இருதய ஆபரேஷனை ஓர் அபாயமற்ற முறையாக மாற்றிவிட்டன.

அதனால் முப்பது வருடங்களுக்கு முன்பு தவழ முயலும் சிறு குழந்தை போலிருந்த இந்த இருதய அறுவைச் சிகிச்சை முறை வியத்தகும் வண்ணம் வளர்ந்திருக்கிறது.

சு :—ஆனால் மேல் நாடுகளில் இருப்பது போல் இதற்குரிய திறமைமிக்க சர்ஜன்களும், மற்ற ஆபரேஷனுக்கான கருவிகளும், வசதிகளும் உள்ளனவா, இங்கு ?

வி :—என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? இந்தஇருதய ஆபரேஷன் துறையில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட டாக்டர் சதாசிவம் இருக்கிறாரே ! அத்தகையவரும், அம்மருத்துவருக்கு உறுதுணையாக உழைத்து வரும் மருத்துவக் குழுவினரும், சென்னை மாநிலத்திலேயே இன்று முதலாக இருந்து வரும் சென்னை அரசினர் பொது மருத்துவமனைக்கு ( Government General Hospital ) ஒரு தனிச் சிறப்பளிக்கின்றனர், இது குறித்துத் தமிழகம் பெருமைப்படுகிறது.

வி :—இருதய நடுச்சுவர் சரிவர இல்லை என்றார்களே, இரத்தம் நிறைந்து இருதயம் துடிக்கும் போதே அந்த துவாரத்தை எப்படிச் சரி செய்து மூடுவார்கள் ?

வி :—உலகம் முழுவதும் பிரபலமாகி வரும் இருதய சிகிச்சையை ( Open Heart surgeory ) நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். உடல் முழுவதிலுமிருந்தும் இருதயம் நோக்கித் திரும்பி வரும் அசுத்த இரத்தத்தை இருதயம், நுரையீரல் ஆகியவற்றுக்குச் செல்லவிடாமல், செயற்கையாகத் திசை திருப்பி பம்ப் ஆக்ஸிஜனேட்டர் (pump oxygenator) என்ற ஒரு கருவிக்குள் செலுத்



துவார்கள். இந்தக் கருவியை இருதய சுவாயந்திரம் (Heart Lung Machine) என்றும் கூறுவதுண்டு.

அங்கு இரத்தத்தைச் சுத்தப் படுத்திப் பின் அதைச் சுத்த இரத்தத்தை ஏற்றுச் செல்லும் இரத்த நாளங்களில் மீண்டும் சேர விடுகிறார்கள். அப்போது நோயாளியின் இருதயமும், நுரையீரலும் தாற்காலிகமாக ஓய்வு பெறுகின்றன. இருதயம் ஓய்ந்த அந்நிலையில்-இருதயத்தில் அறுவை சிகிச்சை செய்வது எளிதாகி விடுகிறது. எனவே இருதய நடுச்சுவரில் காணப்படும் துவாரங்களையோ மற்றும் பிறப்பிலேயே ஏற்பட்ட, அல்லது பின்னால் வியாதியால் தோன்றிய, வேறு விதமான குறைபாடுகளையோ அறுவைச் சிகிச்சை மூலம் சீரிய முறையில் சரி செய்வது சாத்தியமாகிறது.

ஆரம்ப நாட்களில் எல்லாம் இயங்கும் இருதயத்திலேயே அவசரம், அவசரமாக அறுவை சிகிச்சை செய்ய முயன்று, செய்து, நிறையத் தோல்விகளைக் கண்டனர். ஆனால் தற்போது இக்குறைபாடுகள் பெரிதும் நீக்கப்பட்டுவிட்டன. உடல் திசுக்களையும், இருதயத்தையும் செயற்கை முறையில் குளிர்வித்து (Hypothermia) தேவையான நேரங்களில் இம்முறையைச் சேர்த்து, மேலும் சில அனுகூலங்களைக் கண்டனர்.

சு :— அறுவை சிகிச்சை முடிந்த சில மணி நேரங்களிலோ, அல்லது தொடர்ந்து வரும் சில நாட்களிலோ ஆபத்து நேரலாம் என்கிறார்களே....?

வி :—அதற்கென்றே விசேஷ வைத்திய வசதிகள் (Intensive care Unit) அளிக்கப்படுகின்றன. இரவு பகல் எந்த நேரமும் டாக்டர்களும், நர்சுகளும் நோயாளியின் அருகிருந்து இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம் முதலியவற்றைத் தொடர்ந்து கவனித்து வருகிறார்கள். இருதயத் துடிப்பில் ஏற்படும் மாறுதலை உடனுக்குடன் டாக்டர்களுக்கு அறிவிக்க இ.சி.ஜி. மானிட்டரிங் (E. C. G. Monitoring) தொடர்ந்து வேலை செய்கிறது. இருதயத் துடிப்பு கட்டுப்பாடின்றி ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டி விட்டாலோ, அல்லது நின்று விட்டாலோ, அல்லது முறையின்றிப் படபடத்தாலோ, அதை இயற்கையான நிலைக்குக் கொண்டு வர கார்டியோ வர்ட்டர் (Cardio-Vertor) அருகிலேயே இருக்கும். இது தவிர ஆபத்து நேரங்களில் அதைத் தடுக்க, எண்ணற்ற உயர்ந்த மருந்துக்கள் உள்ளன. நீங்கள் கவலைப் பட வேண்டாம். ரமணனுக்கு ஒரு நீண்ட பயனுள்ள வாழ்வு காத்திருக்கிறது என்பதில் சற்றும் ஐயமில்லை.

சு :—வருகிறேன் விவேக்! எத்தனையோ வேதனையோடு வந்தேன். இப்போது ஒரு திருப்தியோடு செல்கிறேன். நீ கொடுத்துள்ள நம்பிக்கை ரமணனுக்குப் புத்துயிர் அளிக்கட்டும்! *

## வருந்துகிறோம்

முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள். 25-8-70 அன்று இயற்கை எய்தினார்கள், அன்னாரின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது 'தமிழரசு'.

# வண்ணப் படங்களில்

* திருச்சியில் நிலமில்லாத ஏழைகட்கு 8-8-70 அன்று முதலமைச்சர் நிலப்பட்டாக்களை வழங்கினார்.

* சமூக நலக் குறைந்த காலப் பயிற்சித் திட்ட விழா சிறுவர் அரங்கத்தில் 1-8-70 அன்று நடைபெற்றபொழுது சர்தாரிணி உஜ்ஜல் சிங், பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்.

* அரசு ஊழியர்களுக்கான குறைந்த வாடகை வீடுகளை சிவகங்கையில் 10-8-70 அன்று முதலமைச்சர் திறந்துவைத்தார். அமைச்சர்கள் திரு. என். வி. நடராசன், திரு. எஸ். மாதவன், திரு. கே. வி. சுப்பையா முதலியோரும் கலந்துகொண்டனர்.

* சமூக நலக் குறைந்த காலப் பயிற்சியாளர்களுக்கு வேளாண்மைத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து பரிசுகளை வழங்கினார்.

* கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் 24-7-70 அன்று ராஜாஜி மன்றத்தில் சிறுவர் கலைக் களஞ்சியத்தின் 2-ஆம் தொகுதியை வெளியிட்டார்.

* மன்னார்குடியில் 7-8-70 அன்று நிலப் பட்டாக்களை நிலமில்லாதவர்களுக்கு முதலமைச்சர் வழங்கினார்.

* மைய அரசின் சாலைப் பாதுகாப்புக் குழுவினர் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு சாதிக்பாட்சா அவர்களை 7-8-70 அன்று சந்தித்தனர்.

* டி. ஐ. சைக்கிள் தொழிற்கூடத்தில் 'கேர்' திட்டத்தின்படி சத்துணவுப் பொட்டலங்களை அமைச்சர் திரு. வேழவேந்தன் வழங்கினார்.








ம் ஓங்குக






10001வது பட்டா வழங்கும் விழா
மன்னார்குடி.
7-8-70




































# கொத்தளத்தில் ஜோரா கொண்டாடிய

அனைத்திந்தியாவுக்கும் வழிகாட்டும் வகையில் கடந்த ஆண்டு போல இந்த ஆண்டும் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகமுள்ள கோட்டையின் கொத்தளத்தில் விடுதலை நாள் விழா, கொண்டாடப்பட்டது.

அனைத்துக் கட்சிகளும் பங்கேற்ற இவ்விடுதலை நாள் விழா நிகழ்ச்சி எல்லார்க்கும் மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாக அமைந்திருந்தது.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ்வாண்டும் மீண்டும் தலைமை அமைச்சர் அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு மாநிலத் தலைநகருக்கும் தலைமையமைச்சர் வந்து விடுதலை நாளைக் கொண்டாடிக் கொடியேற்ற வேண்டும் என்று எழுதியமைக்கு டெல்லி செங்கோட்டையில் கொடியேற்றுவது மரபாகிவிட்டது. அதை மாற்ற இயலாது என்று தலைமையமைச்சர் எழுதியிருப்பதாகவும் முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள்.

'' மீண்டும் தலைமையமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். அதை மறுபரிசீலனை செய்யுங்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கப்படும் இந்நாளில் மாநிலங்களில் வந்து விடுதலை நாள் விழாக் கொண்டாடுவது கடினமல்ல.

'' ஆகவே, விடுதலை நாளில் பங்குகொள்ள இங்கே வருமாறு பிரதமரைத் தமிழக மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். அது மரபு என்று மறுமுறையும் சொல்லாமல் கொண்டாட வர வேண்டும்; அனைவரும் சேர்ந்து மரபை மாற்றமுடியும்.

''ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாநிலத் தலைநகருக்கும் தலைமையமைச்சர் வந்து விடுதலை நாளைக் கொண்டாடினால் இந்திய ஒற்றுமை வலுவாக இருக்கும். எல்லா மாநிலங்களும் ஒரே நிலையில் கவனிக்கப்படுகிறது என்ற எண்ணம் உண்டாகும்.', என்றும் முதலமைச்சர் அவர்கள் தம் தலைமை உரையில் அழைப்புவிடுத்தார்கள். இவ்விழாவில் கலந்து கொண்ட ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களின் உரைகளில் சில பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

''மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்ட அளவிலாவது மக்களின் அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்க்க முயன்றிடவேண்டும். இரண்டு அல்லது மூன்றுண்டுக் கெடு வைத்து அதற்குள் தீர்க்க முற்படவேண்டும்''.

—ஏ. ஆர். மாரிமுத்து,
பி. சோ. கட்சி

''நாம் ஒன்றுபட்டு உழைத்து இந்த ஆண்டை சுபிட்ச ஆண்டாக ஆக்கவேண்டும். 24-வது சுதந்திர ஆண்டு நல்ல ஆண்டு அல்ல என்று சொன்னதைப் பொய்ப்பிக்க வேண்டும். சிறு சிறுபிரச்னைகளை மறந்துநாட்டுப் பிரச்னையில் நாட்டம் செலுத்தி ஒன்றுபட்டுஉழைக்கவேண்டும்."

—பூவராகன், காங்கிரஸ்

''சிறப்புடைய மாநிலமாகத் தமிழகத்தை ஆக்கிய நல்லவர்களுக்கு நன்றி! சமூக அமைதி—மத அமைதி இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் நிலவுகிறது. இத்தகைய அமைதியை நிலைநாட்டும் கலைஞரின் அரசுக்குக் கோடிக்கணக்கான சிறுபான்மை மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்."

—பீர்முகமது
முஸ்லிம் லீக்

நீங்கள் சந்தாதாரா? இல்லையேல் இன்றே சந்தா அனுப்புங்கள் !

உலக அறிவை ஒருங்கே பெற உதவும் உலகைக் காட்டும் பலகணி

# "யுனெஸ்கோ கூரியர்" (தமிழ்)

* யுனெஸ்கோவின் உயரிய குறிக்கோள்களையும் அரிய சாதனைகளையும் விளக்கும் ஒப்பற்ற மாத இதழ்.

* கல்வி, விஞ்ஞான, கலாச்சாரத் துறைகளில் அகில உலகமும் அடைந்து வரும் வளர்ச்சியை எடுத்துக் காட்டும் கருத்துக் களஞ்சியமான கட்டுரைகளும் சுவையூட்டும் செய்திகளும் கொண்ட வண்ணமிகு இதழ்.

* எளிய, இனிய, தெள்ளுதமிழ் நடை-பக்கத்துக்குப் பக்கம் அரிய படங்கள் - கவர்ச்சியூட்டும் அழகிய அமைப்பு - கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டவல்ல அழகுமிழும் வண்ண இதழ்.

* பலதுறை அறிவும் அனைவருக்கும் கிடைக்கப் பன்னிரண்டு உலக மொழிகளில் வெளிவரும் அறிவு விருந்து.

* அகில உலகப் பிரச்சினைகளை நடுநிலைமையில் அணுஅணுவாக அறிந்து கொள்ள உதவும் ஒரே பன்னாட்டுத் தமிழ் இதழ் இதுவேயாகும்.

* எம்மொழியினரையும் எந்நாட்டவரையும் ஒருங்கே கவர்ந்து ஒன்றிணைக்கும் வனப்பு மிகு வண்ண இதழான இதன்,

ஆண்டுச் சந்தா ரூ. 10-50 மட்டுமே

கல்வி நிலையங்களுக்குச் சலுகைச் சந்தா ரூ. 9-50

தமிழ்ப் பதிப்பு வேண்டுவோர் எழுதுக:

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்,
458, பூந்தமல்லி நெடுஞ்சாலை.
சென்னை - 10 (தமிழ்நாடு)

"வீடு, நிலம், மூன்றுவேளைச்சாப்பாடு இல்லாமல் கோடிக் கணக்கில் நாட்டில் இருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைத் தீர்க்காமல் இருந்தால் ஜனநாயகத்திற்கு ஆபத்துவரும்.

அடிப்படைப் பிரச்னைகளை ஐந்தாண்டுகளுக்குள் தீர்ப்பது என்று திட்டமிட்டு முயற்சி எடுக்க வேண்டும். அப்படிக் காலக்கெடு நிர்ணயித்தால்தான் ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் பாதுகாக்க முடியும்."

—கே. ஆர். நல்லசிவம்,
சம்யுக்த சோசலிஸ்ட் கட்சி.

"இந்த நாடு நாம் நினைத்த அளவு இன்னும் முன்னேறவில்லை. வறுமையைக் களையக் கெடு நிர்ணயித்துப் பணியாற்ற வேண்டும். தமிழக அரசும் அத்தகைய பணியில் ஈடுபடுகிறது ஆகவே எதிர்க்கட்சிகள் கிளர்ச்சிகள் நடத்துவதைத் தற்காலிகமாக ஒத்திவைத்து வறுமையைப் போக்கும் தமிழக அரசின் நடவடிக்கைகளில் ஒத்துழைக்க வேண்டும்".

—எஸ். எஸ். ராமசாமிப் படையாச்சி,
உழைப்பாளர் கட்சி.

"தமிழக அரசு ஏழைமக்களின் துயர் துடைக்க வேகமாகச் செயல்படுகிறது. இந்த நிலை பலர் கண்களுக்குத் தெரியவில்லை.

ஆனால் நாம் அவர்களுக்குச் சொல்லுவோம். இந்தத் தமிழகத்தில்தான் இந்தியாவைக் கடைத்தேற்றும் வழி பிறக்கப் போகிறது. இந்த நாட்டிற்கான தலைமை இங்கேதான் உருவாகப்போகிறது.

இந்திய வரலாற்றில் கட்டபொம்மன், வ. உ. சி., புலித்தேவன் போன்றவர்கள், முதல் இடம் பெற முயற்சி எடுக்க வேண்டும்."

—மூக்கையா தேவர்
பார்வர்டு பிளாக்

"வகுப்புக்கலவரம்இந்தியாவில் நடந்தது பற்றி வெளிநாட்டில் கூட வருத்தத்தோடு கேட்டார்கள். ஆனால், அப்போதெல்லாம் தமிழகத்தில் அது போன்று இல்லை என்பதை எண்ணி நான் மகிழ்ச்சியடைந்தேன். நாம் வேறு எதைச் சாதிக்காவிட்டாலும் ஜாதி மத மனப்பான்மையை ஒழிப்போம் என்று விரதம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

வகுப்பு வெறியை வகுப்புத் துவேஷத்தை இறக்குமதி செய்ய நினைக்க எந்தக் கூட்டத்திற்கும் வள்ளுவன் பிறந்த தமிழகத்தில் இடமில்லை.

வகுப்புக் கலவரங்கள் வேங்கடத்திற்கு வடக்கே—விந்தியத்திற்கு அப்பால் இருக்கட்டும். அதை இங்கே இறக்குமதி செய்ய யாருக்கும் உரிமை இல்லை. அப்படி யாராவது செய்தால் அதை மூன்றரைக் கோடித் தமிழர்களின், 7 கோடிக் கரங்களும் எதிர்க்கும்."

சிலம்புச் செல்வர்
—ம. பொ. சிவஞானம்.

"விடுதலைப் போராட்டத்தில் தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தவே நாம் கூடியுள்ளோம். நாடு முன்னேற வேண்டும். இதில் சர்ச்சை இல்லை. ஜனநாயகம் நிலைக்க வேண்டும். இதை மறுப்பார் இல்லை. யார் பாடுபடுவது என்பதுதான் பிரச்னை.

அரசியல் சட்டத்திற்கு விசுவாசமாக நடப்பேன் என்று பிரமாணம் செய்துவிட்டு அதை உடைப்போம் என்று சொல்கிறவர்களும் நாட்டில் இருக்கிறார்கள். நாட்டில் ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும்."

—கே. விநாயகம்
காங்கிரஸ் கட்சிக் கொறடா.

"பிறருடைய சுதந்திரத்திற்கு ஊறு செய்யாமல் நமது சுதந்திரத்தைப் பாதுகாக்கவேண்டும். பிற எவருக்கும் தீங்கு இல்லாமல் அறவழியில்—அற நெறியில் நின்று சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

வன்முறைக்கு அஞ்சாமல் அதை வெல்ல முயலும் இந்த அரசுக்கு நாம் முழுத் துணையாயிருக்க வேண்டும். சட்டம், அமைதி நிலவ முழு ஆதரவு தரவேண்டும்".

—சா. கணேசன்
சுதந்திரக் கட்சி.

"அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து இம்மாதிரி விடுதலை நாளை வேறு எந்த மாநிலமாவது கொண்டாடுகிறத என்பது சந்தேகம்தான். டெல்லியில் கூட இப்படி நடக்கிறதா என்பது ஐயப்பாடுதான். பல விதங்களில் எடுத்துக்காட்டாக இருக்கும் தமிழகம் இதிலும் எடுத்துக்காட்டாக இருக்கிறது.

விடுதலை என்பது நாம் வளர்வதற்குத் துணைநிற்கும் சூழ்நிலை தான். விடுதலையே வாழ்வு தந்துவிடாது. பல்வேறு முனைப்புகளில் ஈடுபட்டு வெற்றி பெறவேண்டும்.

உழைப்பவர் ஒருவர்; உண்பவர் எட்டுப் பேர் என்ற நிலை இருக்கக் கூடாது.

நாட்டிலுள்ள வறுமையைப் போக்க மாநில அரசுகள் அதிக அதிகாரங்களைப் பெற்றாக வேண்டும்! இந்திய உரிமையைப் போராடிப் பெற்றார்கள்; மாநில உரிமையை வாதாடிப் பெற வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்."

—கல்வி அமைச்சர்
நாவலர் நெடுஞ்செழியன்

# கதர் - கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் ~ வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில்
கிடைக்கும்.

வெளியீடு:

## கதர் கிராமத் தொழில் துறை

உ, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.



# பெற்ற சுதந்திரம் பேணிக்காப்போம்!

நாடு விடுதலை பெற்ற நாளை—விடுதலைக்கான புரட்சி வித்தூன்றப் பெற்ற நாளை—உலகில் பல நாடுகள் உவகை பூத்திடக் கொண்டாடுகின்றன. உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற பாரீஸ் பட்டணத்திற்கு மாநாட்டுக்கு முதல் நாளே—ஜுலை 14 ஆம் நாள் நான் சென்றிருந்தேன். அங்கு புரட்சித் திருநாளை மக்கள் கொண்டாடிய பாங்கினை விவரிக்க இயலாது. வண்ண வண்ண உடை உடுத்தி அந்நாளைத் திருநாளாய்க் கொண்டாடுகின்றனர். ஏற்கனவே இரவில் பாரீஸ் தூங்குவதில்லை. அதிலும் அந்தத் திருநாள் அன்று அனைவரின் விழியிலும் ஒளி கொட்டியது. விண்ணிலும் மத்தாப்புக்களின் ஒளி கொட்டியது. புரட்சி நாட்களையோ, விடுதலை விழாக்களையோ, சுதந்திர தினங்களையோ அவர்கள் பூரிப்போடு கொண்டாடுகிற அளவுக்கு வளமும் வசதியும் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் உற்சாகம் கொண்டுள்ளார்கள் என்பதையும் நாம் மறுத்திடவும் இயலாது—மறந்திடலும் ஆகாது.

''விடுதலை பெறுவது என்பது ஆதிக்கத்தை அகற்றிக் கணக்குத் தீர்த்த நாள்—விடுதலை நாளை ஆண்டுதோறும் கொண்டாடுவது என்பது விடுதலைக்குப் பிறகு நாம் புரிந்த சாதனைகளைக் கணக்குப் பார்க்கும் நாள்'' என மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள் கூறியதை நினைவில் நிறுத்திச் செயல்படுவது இந்த நன்னாளின் நோக்கமென நாம் கொண்டாடிட வேண்டும்.

உத்தமர் காந்தி உழைத்ததும் உயிர் விட்டதும் எதற்காக? தியாக சீலர் நேரு பாடுபட்டது எதற்காக? பல இன்னல்கள் ஏற்றது எதற்காக? எங்கோ மறைந்தார் எங்கள் நேதாஜி என இன்னும் இந்திய மக்கள் கண்ணீர் பெருக்குவது எதற்காக? செக்கிழுத்தார் சிதம்பரனார்—குருதி கொட்டி மடிந்தான் குமரன்—இப்படி விடுதலை வீரர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகுமே ; நினைக்க நினைக்க எழுச்சி பிறக்குமே ; அவர்கள் எல்லாம் சுதந்திரச் சங்கநாதம் செய்தது எதற்காக ?

அடிமை இருள் நீங்குவதற்காக மட்டுமா ? இருள் நீங்கி இந்திய மக்களின் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்ற வேண்டும் என்பதற்காகவும்தான் !

புரட்சிக் கனலால் புதையுண்ட நாடுகளின் புதிய வடிவங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன; களிப்பூட்டும் வகையில்.

போரின் கோர தாண்டவத்தால் அழிந்துவிட்ட நாடுகளில் ஏற்றமும் எழிலும் எவ்வளவு விரைவில் பூத்துக் குலுங்குகின்றன என்று வியக்கிறோம், விரலை மூக்கின்மீது வைத்தவாறு !

போரின் கடுமையான வாடை வீசவில்லை இங்கு—பூகம்பங்கள் தோன்றி அழிவு நர்த்தனம் ஆடுவதில்லை இங்கு—எரிமலைகளின் கொடுமை இல்லை—ஆயினும் அடிமையொழிந்து ஆண்டுகள் பலவாயினும் அகிலத்தில் தலைதூக்கிச் செழுமை மிகுந்த புன்னகையைக் காட்ட முடியாமல் ஏக்கப் பெருமூச்சு விடுகிறோமே எதனால் ?

சிந்திக்க வேண்டாமா ?

சிந்தித்துச் செயல்பட வேண்டாமா ?

எளியோர் சிலர் இங்குத் தமிழ் நிலம் ஆள வந்தோம்—ஆண்டுகள் மூன்றும், மாதங்கள் ஐந்தும் ஆகின்றன. சாதாரண—நடுத்தர—விவசாயத் தொழிலாள மக்களின் பிரதிநிதிகள்—என்ற நினைவோடு அந்த மக்களின் வாழ்வை மையமாக வைத்துத் திட்டங்கள் தீட்டுகிறோம். மாநிலங்களுக்குள்ள உரிமைகளின் அளவுக்கு மக்கட் பணியாற்றுகிறோம். நலமிகு திட்டங்கள் வகுக்கிறோம். இன்னும் அதிக உரிமைகள் கிடைப்பின் அதன் அளவுக்கேற்பத் திட்டங்கள் தோன்றும்—வசதி வாய்ப்புகள் பெருகி வறுமை நிலை வீழ்ந்திட வழி காண முயல்வோம்.

சென்ற ஆண்டு தமிழகம் வரலாறு கண்டிராத ஒரு வறட்சியைக் கண்டது. பாதகங்களைகளையும் சாதகங்களாக ஆக்கிக் கொள்வோம் எனச் சூளுரைத்து அந்தக் கால அளவில் எட்டு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளித்து ஏரி, குளம், வாவி, வாய்க்கால் அனைத்தையும் வகைப்படுத்தினோம்.



# வறுமை நிலை வீழ்ந்திட வழிவகை காண்போம்!

1968-69 ஆம் ஆண்டில் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் 17 லட்சம் ஏக்கர் நிலம் பயிரிடப்பட்டது. நடப்பு ஆண்டு 24 லட்சம் ஏக்கர் நிலத்தில் தீவிர சாகுபடிக்கு முயற்சிகள் முகிழ்க்கின்றன.

வறட்சி நிவாரணத் திட்டங்கள் வாயிலாக நாற்பதாயிரத்து அறுநூறு பணிகள் கிராமப்புறங்களில் நிறைவேற்றப்பட்டதன் காரணமாக வேளாண்மைத் துறையில் புதிய வேகம் எழுந்தது.

பசுமைப்புரட்சித் திட்டத்திற்காக எடுத்துள்ள சீரிய முயற்சிகளுக்காக ஏற்கனவே கிணறுகள் தோண்டுவதற்கும் குழாய் இணைப்புகள் ஏற்படுத்துவதற்கும் கடனுதவி அளித்து வருவது மட்டுமல்லாமல், அத்தகு வேலைகளைத் தீவிரப்படுத்துவதற்காக வேளாண்மை மறு நிதிக் கழகத்தின் மூலம் நிலவள வங்கிகள் கடன் தொகைகளை அளிக்க இந்த ஆண்டு ஏற்பாடுகள் தொடங்கி விட்டன. இராமநாதபுர மாவட்டத்தில் மட்டும் பசுமைப் புரட்சித் தீவிர சிறப்புத் திட்டத்தில் 2,750 கிணறுகளையும், 2,750 குழாய்களையும் அமைக்கவும் இணைக்கவும் இரண்டு நாட்களுக்கு முன் நான் சென்று ஆரம்ப விழாவை நடத்தினேன். நீர்ப்பாசன வசதிகளைக் குறைந்த செலவில் பெறுவதற்குச் சிறிய விவசாயிகள் கூட்டுறவுப் பாசனக் கழகங்களை ஏற்படுத்தவும் அரசு அக்கறை காட்டி வருகிறது.

மக்கள் அனைவருக்கும் உடனடியாகப் பிரச்சினைகள் பலவற்றைத் தீர்க்கும் வகையில் செயல்படுத்தப்படும் மனுநீதித் திட்டம் கடந்த ஆண்டு தொடங்கி இந்த ஆண்டு மார்ச் மாத முடிவுக்குள் ஏழு மாதங்களில் 2 லட்சத்து 51 ஆயிரம் மனுக்களை அதிகாரிகள் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று—பெற்று அவைகளில் 2 லட்சத்து ஓராயிரம் மனுக்களுக்குத் தீர்வு கண்டிருக்கிறார்கள்.

மாநிலம் முழுதும் செயல்படும் மனுநீதித் திட்டத்தையொட்டிச், சிறப்பு அதிகாரிகளின் ஓயாத உழைப்பின் காரணமாக இந்த மூன்றாண்டுக் காலத்தில் மட்டும், நிலமில்லாத விவசாயப் பெருங்குடி மக்களுக்கு $2\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் நிலத்தைப் பட்டா செய்து வழங்கியிருக்கிறோம். ஒரு லட்சத்துப் பதினைந்தாயிரம் பேருக்கு மேல் வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணி நாள்தோறும் எண்ணிக்கையில் வளர்ந்து கொண்டே போகிறது.

சட்டத்தின் மூலம் பெறுகிறவைகளே நிலைக்கும்—பெற வேண்டியவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயங்களுக்காகச் சட்டத்தைத் திருத்தவும் அரசு தயாராக இருக்க வேண்டும். அந்தக் காரியத்தைக் கண்ணும் கருத்துமாக அரசு கவனித்து வரும்போது அவசரப்படுதல் நல்லதல்ல. அவசரக்கோலம் அள்ளித் தெளித்ததாக ஆகிவிடும். பஜனை மடத்தில் பார்த்திருக்கிறோம். சுண்டல் வழங்கும்போது பிள்ளைகள் அமைதியாக நின்று கைநீட்டினால்தான் அனைவருக்கும் ஒழுங்காகக் கிடைக்கிறது. அதைவிடுத்துச் சுண்டல் வழங்குபவரைச் சுற்றிக் கொண்டு ஆளுக்கொரு கையைச் சுண்டலிருக்கும் தட்டில் விட்டு அள்ளத் தொடங்கினால், ஆர்ப்பாட்டம் மிகும்! கூச்சல் கிளம்பும்! சுண்டல் தட்டு கீழே விழும்! வழங்கிய ஆள், தனக்கென்ன என்று சலித்துக்கொண்டு போய் விடுவார். சுண்டல் மண்ணில் கலக்கும்; யாருக்கும் பயனிருக்காது; அமளிதான் மிஞ்சும். அதனால்தான் நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்க அரசு ஒழுங்கு முறையைப் பின்பற்றி, அதில் எந்தத் தவறும் நடந்துவிடாமல் அதிகாரிகளை எச்சரித்து லட்சக்கணக்கானவர்க்குப் பட்டாக்களை வழங்கியுள்ளது. 1972 ஆம் ஆண்டுக்குள் மேலும் இரண்டு லட்சம் பட்டாக்கள் வழங்கப்படும்.

நிலம் பெறுவதில் இதுவரையில் ஆறாவது வரிசையில் இருந்த அரிஜன மக்கள், இரண்டாவது வரிசையில் இடம்பெற வகை செய்யப்பட்டுள்ளது.

மின் ஒளி இல்லாத கிராமமே தமிழகத்தில் இருத்தலாகாது என்ற அளவில் திட்டம் வகுத்து அதனை 1972-க்குள் செயல்படுத்துவோம் என்று நான் முதல்வர் பொறுப்பை ஏற்றதும் விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து அந்த வேலை விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

# செய்தவை பல; செய்ய இருப்பவை மிகப்பல!



குடி நீர் வசதிக்கும் அவ்வாறே ஒரு தீவிரத் திட்டம்!

இந்த ஆண்டில் சிறப்பு மிகு செய்தியாக நீண்ட பல ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த சேலம் இரும்பாலைக்கான அனுமதியை மத்திய அரசினர் அளித்து, தமிழகத்தை மகிழ்வித்துத் தமிழர்களின் நன்றியுணர்வைப் பரிசாகப் பெற்றுள்ளனர். அந்தத் திட்டத்தின் மூலம் ஐயாயிரம் பேருக்கு ஆரம்பத்தில் வேலை வாய்ப்பு ஏற்படும்.

1966-க்கு முன்பே தொடங்கி 1968 வரையில் மூடப்பட்ட 27 பஞ்சாலைகளில் நான்கு ஆலைகளை அரசு ஏற்று நடத்துகிறது. அதனைத் தொடர்ந்து 13 ஆலைகள் திறக்கப்பட்டன. இதன் விளைவாக வேலையற்று இருந்த பஞ்சாலைத் தொழிலாளர்கள் பலர் அல்லல் நீங்கிப் பெருமூச்சு விட்டனர்.

பின் தங்கிய மக்கள் நலனுக்காக—ஒரு குழு !

காவல் துறை பற்றி ஆராய்ந்து பரிந்துரைக்க ஒரு குழு !

ஊதியக் குழு மற்றொன்று !

இதற்கிடையே பின் தங்கிய மக்கள் நலனுக்கு 66-67-ல் ஒதுக்கப்பட்ட 184 லட்சம் ரூபாய் 69-70ல் 314 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

காவல் துறையினருக்கு இடைக்காலத்தே பல சலுகைகள்.

அரசுப் பணியாளர்களுக்கு, ஊதியக் குழுவின் பரிந்துரைக்கு முன்பே; ஐந்நூறு வரை ஊதியம் பெறும் அனைவருக்கும் சிறப்பு ஈட்டுப்படியாக அரசு பத்து ரூபாய் வழங்கி வருகிறது.

அரசுப் பணியாளர்களின் ஓய்வு ஊதியம் இருபதிலிருந்து முப்பதாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் முறையீடுகள், மின்வாரியப் பணியாளர்களின் முறையீடுகள் கவனிக்கப்பட்டு, அவர்கள் மன நிறைவு கொள்ளும் வகையில் தீர்க்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சமுகப் பொருளாதாரக் கொள்கைகளில் சிறப்பான அம்சம்; உச்ச வரம்பை 30 ஸ்டாண்டர்டு ஏக்கரில் இருந்து 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைத்ததாகும்.

ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள விதிவிலக்குகளில் எவை எவைகளை நீக்கி விடலாம் என ஆராய்ந்திடக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இத்தனை காரியங்களும் இதற்கு மேலும் செய்துள்ளோம் எனினும், நாட்டில் வளர்ந்து வரும் வேலையில்லாத் தொல்லையைப் போக்க விரைவான நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டுமன்றோ ?

அதற்கான சாத்தியக்கூறுகளை, நமது மாநிலத்திற்குள்ள அதிகார வரம்புக்குள் சிந்தித்து விரைவில் கருத்துக்கள் வழங்குமாறு முதன்மையான அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். படித்துவிட்டு வேலையில்லாதிருப்போர்—படிக்கும்போதே வேலை கிடைக்குமா என ஏங்கித் தவிப்போர் துயர் துடைக்க, இந்தப் பெரிய நாடு மகத்தான திட்டமொன்றை வகுக்க வேண்டும். எனினும், அதுவரை காத்திராமல் நமது மாநில அளவில் நம்மால் ஆனதைச் செய்திட முயல்வது நலமன்றோ ?

அன்று அந்நிய ஆதிக்கத்திற்குக் கணக்குத் தீர்த்தோம். இன்று கணக்குப்பார்க்கிறோம். தொடர்ந்து தமிழகத்தில் அமைதி நிலை பெறும் வழிவகைகளில் அனைவரும் அக்கறை கொள்வார்களாயின், அரசின் திட்டங்களும் மிகு பயன் விளைத்திடும் வண்ணம் நிறைவேற்ற இயலும்.

பெற்றோம் சுதந்திரம்—
பெருமையடைகிறோம் இன்று!
அதனைப் பேணிக் காத்திட்டால் தானே
நாளை, நமது பேரப்பிள்ளைகள்
நமது பெருமை பேசுவர் !

அதனை எண்ணிச் செயல் படுவோம்! இந்த ஆகஸ்டு 15ல் அந்தச் சூளுரையை மனத்தில் பதிப்போம். வணக்கம்.

(சுதந்திரத் திருநாளில், தமிழக முதல்வர் வானொலியில் ஆற்றிய உரை)

# இரட்டிப்பு லாபம்!



## இன்ப வாழ்வுக்காக
## நீங்கள் தரப்போவதோ மிக மிகச் சொற்பம்

நீங்கள் வாங்கும் பரிசுச் சீட்டு; உங்கள் வாழ்க்கையில் வாய்க்க இருக்கும் வளத்துக்கு ஏணிப்படி! உங்கள் லட்சியக் கனவில் மலர்ந்துள்ள சொகுசு இல்லம்!

தமிழ் நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டத்தில் பரிசு பெறுவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. நீங்கள் லட்சாதிபதியாகும் பேற்றினை நழுவ விடாதீர்கள்!

அதிக உணவு, உடை, நல்ல வீடுகள், இலவசக் கல்வி, தேவையான மருத்துவ வசதிகள் எல்லாம் சரிவரக் கிடைப்பதற்காக தேசிய திட்டங்களில் உங்கள் முதலீடு செலவழிக்கப்படுகிறது.

தேசம் வளமாக உங்கள் பணம் பயன்படட்டும்.

**அடுத்த குலுக்கலுக்கான பரிசுகளின் மொத்தத் தொகை : ரூ. 17,50,000**

**ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு : ரூ. 1,00,000**

**குலுக்கல் தேதி: 25-9-1970**

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
இதுவரை உருவாக்கிய புதிய லட்சாதிபதிகள் = 181 பேர்

**பரிசுச் சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது. ஒரு சீட்டின் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!**

**இன்றே வாங்குங்கள்**
**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு
செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

செலவு ஒரு ரூபாய்



வரவோ லட்ச ரூபாய்

# வாழையடி வாழை

முத்தமிழ் நாட்டின் முக்கனிகளில் ஒன்றான வாழை மனித இனத்தின் வாழ்வுக்குப் பல வகையிலும் பயன்படுவதுடன், வாழ்த்துரை வழங்கவும் பயன்படுகிறது. "வாழையடி வாழையாக" வாழுங்கள் என்று பலர் வாழ்த்துவதை அன்றாடம் கேள்விப்படுகின்றோம்.

"நான் 100 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வருவதன் ரகசியம், சிறுவயது முதல், நாள் தோறும் தொடர்ந்து ஒரு வாழைப் பழமாவது சாப்பிட்டு வருவதேயாகும்"—அண்மையில் அமெரிக்காவில் ஒரு பெரியவர் இவ்வாறு சொல்லியதைத் தமிழகத்துப் பத்திரிகைகள் எல்லாம் வெளியிட்டன.

பாமரரும், பணக்காரரும், படித்தவரும், படிக்காதவரும், எளியோரும், வலியோரும், கிராமத்திலுள்ளவரும், நகரத்திலுள்ளவரும், சிறு குழந்தைகளும், வயது முதிர்ந்தவர்களும், வாழைப்பழத்தை விரும்பி உண்கிறார்கள்.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட வாழைப்பழத்தில் 1·3 சதம் புரதச்சத்தும், 0·2 சதம் கொழுப்புச் சத்தும், 0·7 சதம் தாதுப் பொருள்களும், 36·4 சதம் சர்க்கரை மாவுப் பொருட்களும், 0·01சதம் சுண்ணாம்புச் சத்தும், 0·05 சதம் பாஸ்பரஸ் சத்தும், 0·40 சதம் இரும்புச் சத்தும், 153 கலோரி வெப்ப அளவும், 150 மில்லி கிராம் வைட்டமின் 'பி' யும், 2·4 பி.பி.எம். வைட்டமின் 'ஏ'யும், 120 பி.பி.எம். வைட்டமின் 'சி' யும் அடங்கியுள்ளன.

சத்துணவு ஆராய்ச்சியின் படி வயது வந்த ஒவ்வொருவரும், நாளொன்றுக்குக் குறைந்தது 3 அவுன்சு அளவு பழங்களையாவது சாப்பிட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. ஏழை எளியவரும் குறைந்தது 3 அவுன்சு அளவு பழம் சாப்பிட வேண்டுமானால், குறைந்த விலையில் கிடைப்பது வாழைப் பழமே.

தற்பொழுது ரஷ்யா, ஜப்பான் ஆகிய வெளிநாடுகளிலும் நம் நாட்டின் வாழைப்பழத்திற்கு நல்ல மதிப்பு ஏற்பட்டுள்ளது. அதுவும் குறிப்பாக 'மோரிஸ்' வாழைப்பழத்திற்கு மிகுந்த கிராக்கி ஏற்பட்டுள்ளது. 1967-68-ல் சுமார் 2,813 டன் வாழைப்பழங்களை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்துள்ளோம். சென்ற ஆண்டில் மராட்டிய மாநிலம் வெளிநாடுகளுக்கு வாழைப்பழங்களை அனுப்பி மிகுபயன் அடைந்ததாக அறிகிறோம்.

எனவே உணவு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சிகளுக்குத் துணை புரியவும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை ஈட்டவும் மேலும் அதிகப் பரப்பளவில், ஒருமித்த செய்நேர்த்திமுறைகளை மேற்கொண்டு வாழையைச் சாகுபடி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

தமிழ் நாட்டில் தற்பொழுது 88,000 ஏக்கர்களில் வாழை பயிரிடப்படுகிறது.

நல்ல வளமும், நீர்ப்பாசனமும், வடிகால் வசதியும் கொண்ட ஆழமான மண்ணில் வாழை நன்றாக வளரும். இருப்பினும் களர் நிலமும், உவர் நிலமும் இல்லாத, ஆழமும் காற்றோட்டமும், வடிகால் வசதியுமுள்ள எல்லா நிலங்களிலும் வாழையைப் பயிரிட முடியும்.



வாழை நடுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே நிலத்தை இரண்டு அல்லது நான்கு தடவை நன்றாகப் புழுதி காண உழவேண்டும். பின்பு உயரமாக வளரும் வாழைகளுக்கு வாழைக்கு வாழை 8 அல்லது 9 அடியும், குள்ளமாக வளரும் வாழைகளுக்கு 5 அல்லது 6 அடியும் இடைவெளி விட்டு $1\frac{1}{2} \times 1\frac{1}{2} \times 1\frac{1}{2}$ அளவுள்ள குழிகளைத் தோண்டவும். இக் குழிகள் ஒவ்வொன்றிலும் 12 கிலோ மக்கிய தொழு உரத்தைப் போட்டு நிரப்பவும்.

பொதுவாக வாழையை எல்லா மாதங்களிலும் நடலாம். ஆனால் வறட்சிக் காலத்தையும் அதிகமான ஈரம் கொண்ட மழைக் காலத்தையும் தவிர்க்க வேண்டும். இருப்பினும் மாசிப் பட்டத்தில் கன்றுகளை நடுவது சாலச் சிறந்தது. தஞ்சை மாவட்டத்தில் பல பருவ வாழைச்சாகுபடிக்கு ஆகஸ்டு மாதத்தில் நடுவது நல்லது. ஏனெனில் அக்டோபர்-நவம்பர் மாதங்களிலும் உண்டாகும் புயல் காற்றினால் ஏற்படும் சேதங்களைத் தவிர்ப்பது அவசியம். ஏப்ரல்-மே மாதங்களில் மலைப் பிரதேசங்களில் மலை வாழைக் கன்றுகளை நடலாம்.

சமவெளிப் பிரதேசங்களில் நன்செய் நிலங்களிலும் தோட்டக்காலிலும் பூவன், ரொபஸ்டா, மோரீஸ், ரஸ்தாளி, மொந்தன் ஆகிய வாழை வகைகளைப் பயிர் செய்யலாம்.

மலைப்பிரதேசங்களில் மலை வாழை வகைகளான சிறுமலை, விருப்பாட்சி முதலிய வகைகளைச் சாகுபடி செய்யலாம்.

இருந்தபோதிலும், சமவெளிப் பிரதேசங்களில் மோரீஸ் என்ற குள்ள வாழை ஜாதியிலிருந்து ''ரொபஸ்டா'' என்றதொரு புதியவகை தேர்ந்தெடுக்கப்பட்டு அதிக அளவில் சாகுபடி செய்வதற்குச் சிபாரிசு செய்யப்படுகின்றது. ஏனெனில் 'ரொபஸ்டா' வாழைத்தார் மோரீஸ் வாழையைவிட ஏற்றுமதிக்கு ஏற்ற சிறப்பான அம்சங்களைப் பெற்றுள்ளது. அதுவுமின்றி வெளிநாட்டினர் இவ்வாழைப் பழங்களையே பெரும்பாலும் விரும்புகிறார்கள்.

ரொபஸ்டா வாழைத்தார்கள் அடக்கமாக ஒழுங்காக—பழங்கள் குள்ளவாழை போல் விரிந்து காணப்படாமல், குவிந்து மேல்நோக்கி இருப்பதால் இவைகளைச் சேதம் ஏற்படாமல் வணிகச் சந்தைக்கு அனுப்பமுடிகின்றது. ரொபஸ்டா வாழைப்பழங்கள் மோரீஸ் பழத்தைப் போலல்லாமல் புகையினால் சேதமடைவதில்லை. ரொபஸ்டா வாழையில் இரண்டாம் வாழை சாகுபடி செய்து இலாபம் பெறலாம். ஆனால் குள்ளவாழையில் இச்சிறப்பு இல்லை. தவிர ரொபஸ்டா வாழையின் கனிகள் ஆறு அங்குலத்திற்கு மேற்பட்டு இருப்பதால், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உகந்ததாக இருக்கின்றன. இந்தக் காரணங்களால் ரொபஸ்டா வாழை உள்நாட்டு வியாபாரத்திலும் வெளிநாட்டு வியாபாரத்திலும் நிறைந்த லாபத்தை உருவாக்கித் தருகிறது.

நல்ல பலனளித்து வரும் நோயில்லாத வாழைத் தோட்டங்களிலிருந்து மூன்று அல்லது நான்கு மாத வயதுடைய ஒரே சீரான பட்டாக்கத்தி அல்லது வால் போன்ற குறுகிய இலை பரப்புடையதும், பெருத்த கிழங்குகள் உள்ளதுமான வாழைக் கன்றுகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

வாழைக் கன்றுகளை நடுவதற்கு முன்பாக மாட்டெரு 12 கிலோ போட வேண்டும். அத்துடன் குழிக்கு இரண்டு அவுன்சு பி.எச்.சி. 10 சதவீதம் மருந்தைக் கலப்பதால் கிழங்குகளைத் துளைக்கும் வண்டுகளிலிருந்து காப்பாற்றலாம். வாழைகளை வாடல் நோயிலிருந்து காப்பாற்ற, கிழங்குப் பாகத்தை செரசான் 0·10 சத



வீதம் கரைசலில் ஐந்து நிமிடம் நனைத்து எடுத்த பிறகு கன்றுகளை நட வேண்டும்.

கன்றுகளைக் கிழங்குகளிலிருந்து சுமார் 9 அங்குலம் அல்லது 12 அங்குலத் தண்டுடன் விட்டு வெட்டி அதனிலுள்ள வேர்களை எல்லாம் சீவி எடுத்துச் சுத்தப் படுத்தி, குழியின், நடுவில் வைத்துச் சுற்றிலும் மண் அணைத்து நட வேண்டும். கன்றுகளை நட்டவுடன் நீர் பாய்ச்ச வேண்டும்.

கன்றுகளை நட்ட ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்குப் பிறகு கன்றுகளைச் சுற்றியுள்ள இடத்தை மண்வெட்டியால் கொத்திக் களைகளை அகற்றவேண்டும். இச்சமயத்தில் கெட்டுப் போன கன்றுகள் காணப்பட்டால், அவைகளை அகற்றி அங்கு நல்ல கன்றுகளை முன்கூறியபடி நட வேண்டும்.

இரண்டு மாதத்திற்கு ஒரு முறை பட்டத்தைக் கொத்திக் களைகளை எடுக்க வேண்டும். அவ்வப்போது வாழைக்கு மண் அணைக்க வேண்டும். வாழை மரங்கள் தார் தள்ளிய பிறகு நிலத்தைக் கொத்தக் கூடாது.



தட்பவெட்ப நிலைக்கேற்றாற் போல், தண்ணீர் வசதியைப் பொறுத்து, மண்ணில் ஈரம் இருக்கும்படி வாரம் ஒரு முறையாவது தண்ணீர் கட்ட வேண்டும்.

மழை காலங்களில் வாழைத் தோட்டங்களில் நீர் தேங்கி நிற்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு வாழையைச் சுற்றிலும் பட்டத்துக்குப் பட்டம் கிடங்குகள் வெட்ட வேண்டும்.

வாழைக் கன்றுகளை நட்ட 3-வது அல்லது 4-வது மாதத்திலும், 5-வது மாதத்திலும் ஆக இருமுறை வாழைச் சாகுபடிக்குத் தக்கவாறு உரமிட வேண்டும். மோரிஸ், ரொபஸ்டா ஆகிய வகைகளுக்கு ஒரு மாதத்திற்கு 285 கிராம் அமோனியம் சல்பேட்டையும், 285 கிராம் சூப்பர் பாஸ்பேட்டையும், 340 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாசையும், 285 கிராம் கடலைப் பிண்ணாக்கையும், 12 கிலோ மக்கிய தொழு உரத்தையும் நட்ட மூன்றாவது அல்லது நான்காவது மாதத்தில் இட வேண்டும். நஞ்சை நில வாழைகளுக்கும் தோட்டக்கால் வாழைகளுக்கும் மேற்கண்ட அளவு உரத்தை, நட்ட மூன்றாவது மாதத்தில் இடவேண்டும்.

நட்ட 5-வது மாதத்தில் மோரிஸ், ரொபஸ்டா ஆகிய வகைகளுக்கு ஒரு மரத்திற்கு 142 கிராம் அமோனியம் சல்பேட்டையும், 340 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாசையும், 142 கிராம் கடலைப் பிண்ணாக்கையும் இட வேண்டும். நஞ்சை நில வாழைகளுக்கும் தோட்டக்கால் வாழைகளுக்கும் நட்ட 5-வது மாதத்தில் 285 கிராம் அமோனியம் சல்பேட், 340 கிராம் சூப்பர் பாஸ்பேட், 285 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ், 285கிராம் கடலைப் பிண்ணாக்கு ஆகியவைகளை இட வேண்டும்.



கன்றுகள் நட்டு, பத்து அல்லது பன்னிரெண்டு மாதங்களில் வாழைத் தார்கள் அறுவடைக்குத் தயாராகும். காய்கள் முக்கால் பாகம் நல்ல பெருக்கத்துடன் முதிர்ச்சியடைந்த பின் வாழைத்தார்களை அறுவடை செய்யவும். வாழைத் தார்களை அறுவடை செய்யும் பொழுது வாழை மரத்தை அடியோடு தரை மட்டம் வெட்டாமல் 4 அல்லது 5 அடி உயரம் விட்டு வாழை மரத்தின் மத்தியில் வெட்ட வேண்டும். அப்படிச் செய்வதால் இரண்டாம் பருவ வாழைக்காக விடப்பட்ட வாழைக் கன்று நல்ல வீரியத்துடன் செழித்து வளரும். வெட்டப்பட்ட மேல் பாகத்தைத் துண்டுகளாக்கி அவைகளை நிலத்தின் மேல் பரப்புவதால் மண் ஈரம் காக்கப்படும்.

இவ்வாறு பயனுள்ள விதத்தில் பயிரிடப்படும் வாழை, 'வாழையடி வாழையாக' நமது நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தி வருகிறது என்பதில் சந்தேகமில்லை.



ஒவ்வொருவருடைய தேவைக்கேற்ற
அரசியலைப்பற்றி சொல்லவில்லை.
சேமிப்பைப் பற்றியும், பணத்தை முதலீடு
செய்வதைப் பற்றியும் சொல்லுகிறோம்.
7 ஆண்டு தேசிய சேமிப்பு சர்டிபிகேட்டுகள்
புதிதாக மூன்று வரிசைகளில் வெளியிடப்
பட்டுள்ளது. இதில் ஏதாவதொன்றில்
உங்கள் பணத்தை முதலீடு செய்யலாம்.
எல்லா வரிசைகளிலும் நல்ல லாபமும்,
வருமான வரிச் சலுகையும், செல்வ வரி
நன்மைகளும் கிடைக்கின்றன.
வரி இல்லாத
4-வது வெளியீடு
வரிக்குட்பட்ட
7½% வட்டி ஆண்டு
தோறும் கிடைக்கிறது.
வட்டி வாங்கும்போது வரி
பிடித்துக் கொள்ளப்பட
மாட்டாது.
3-வது வெளியீடு
வரி இல்லாத
5% வட்டி ஆண்டு
தோறும் கிடைக்கிறது
பாங்குகளில் டெபாசிட் செய்
யப்பட்ட தொகைகளுக்கு
கிடைக்கும் வட்டியையும்
சேர்த்து, இதிலிருந்து
கிடைக்கும் வட்டிக்கு
ஆண்டுக்கு ரூ. 3,000/-
வரைக்கான வட்டிக்கு
வரிச்சலுகை கிடைக்கிறது.
விவரங்களுக்கு தபால்
நிலையங்களிலோ, அல்லது
உங்கள் ஜில்லா தேசிய
சேமிப்பு அமைப்பாளரையோ
விசாரியுங்கள்.
தேசிய சேமிப்பு நிறுவனம்

# கல்வி சிறந்த தமிழ்நாடு

குஞ்சி யழகும்
கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும்
அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும்
நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு!

என்பது தமிழர்களின் தனிப்பெருந்தத்துவமாகும். தொழில் வளமும் தொல்பெரும் விவசாயத் துறை வளமும் சிறந்தோங்கி வளரும் நம் தமிழகத்தில் கல்வியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறது நம் தமிழக அரசு. இரண்டாவது, மூன்றாவது திட்டக்காலங்களில் தொடக்கக் கல்வியும் இடைநிலைப் பள்ளிக் கல்வியும் சிறப்புற்று ஓங்க வழி செய்யப்பட்டது. பள்ளிகள் பெருகிடப் படிப்போர் தொகை பன்மடங்காகியது. அவர்களுக்கு உயர்கல்வி தர வேண்டிய பொறுப்பு அரசினுக்கு ஏற்பட்டது. புதிய கல்லூரிகள் தொடங்கவேண்டியதன் தேவை உணரப் பட்டுக் கல்லூரிகள் பல தொடங்கப் பட்டன. தனியார் தொடங்கிய கல்லூரிகளுக்கும் நிதி உதவி அளித்து ஊக்கம் ஊட்டி வந்தது. உயர் கல்வித்துறையின் முக்கியத்துவம் வளர்ந்ததால் ஒன்றாக இணைந்திருந்த பொதுக் கல்வித் துறையிலிருந்து கல்லூரிக் கல்வியைக் கவனிப்பதற்கான தனி இயக்குநர் அலுவலகம் 1965-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

1964-65-ல் தமிழகத்தில் 78 கல்லூரிகளில் 65,200 மாணவர்கள் பயின்றனர். 1969-70-ல் கல்லூரிகளின் எண்ணிக்கை 140. இதில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் ஏறத்தாழ 1,40,000 ஆகக் கூடியது. லட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் உயர்நிலைப் பள்ளித் தேர்வில் ஆண்டு தோறும் வெற்றி பெற்று வருவதால் பல்கலைக்கழகப் புதுமுக வகுப்புக்களில் நுழையும் மாணவர் தொகை நாளும் பெருகி வருகிறது. வளரும் இத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டுப் புதுமுக வகுப்பில் அனைத்துக் கல்லூரிகளிலும் அதிக இடங்கள் உண்டாக்கப்பட்டன. 1969-70-ஆம் கல்வியாண்டில் புதுமுக வகுப்பில் மட்டும் 71,000 மாணவர்கள் படிக்க வசதி செய்யப் பட்டிருந்த போதிலும் 64,000 மாணவர்கள் சேர்ந்து பயின்றனர். கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்த நம் மக்கள் தாம் கல்லாதவராயினும் தம் குழந்தைகள் கல்வியில் மேம்பட்டு விளங்க வேண்டுமென்ற அவாவினைக் கொண்டுள்ளார்கள். எனவே புதுமுக வகுப்பில் படித்துத் தேறிய மாணவர்கள்—பட்டப் படிப்பும் பெற விரும்பியவர் தொகை நாளும் பெருகிற்று இந்தத் தேவையை நிறைவேற்றப் புதிய கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டன. புதுமுக வகுப்பு மட்டும் இருந்த கல்லூரிகளில் பட்டப்படிப்புக்கும் வகை செய்யப்பட்டது.

### பெண் கல்வி.

''ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று எண்ணியிருந்தவர் மாய்ந்துவிட்டார்''—என்று அன்று பாரதி கண்ட கனவினை நிறைவேற்றப் பெண் கல்விக்கு நம் தமிழகம் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இவ்வடிப்படையில் 1964-65-ல் 22 பெண்கள் கல்லூரிகள் என்றிருந்த தொகை 1969-70-ல், 37 ஆக உயர்ந்துள்ளது. 1965-ல், 15,700 பேர் படித்த நிலை மாறி இன்று 31,400 ஆக உயர்ந்துள்ளது. பெண்களுக்கெனத் தனியாக உள்ள கல்லூரிகளில் பெண்களே





ஆசிரியர்களாக அமர்த்தப்படுகின்றனர். ஆண்களுக்குரிய கல்லூரிகளில் இருபாலாரும் பணியாற்றி வருகின்றனர்.

### பயிற்சிக் கல்லூரி.

கல்லூரிகளிலிருந்து படித்து வெளிவருபவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட அவர்களுக்குப் பயிற்சி அவசியம் என்பதை இவ்வரசு கடைப்பிடித்து வருகிறது. ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க நம் தமிழகத்தில் இன்று 23 பயிற்சிக் கல்லூரிகள் உள்ளன. 1968-69-ல் ஏறத்தாழ 2,600 பேர் ஆசிரியர் பயிற்சி பெற்றனர். நம் பள்ளிகளுக்குத் தேவையான பயிற்சி பெற்ற ஆசிரியர்களைத் தரும் அளவிற்கு ஏற்ற நிலையில் பயிற்சிக்கல்லூரிகள் பணி புரிகின்றன. இதன் பயனாக இத்துறையில் ஆசிரியப் பஞ்சம் நீக்கப்பட்டு நிறைவு நிலை எய்தியுள்ளோம் என்பது பெருமைப்படத்தக்க வளர்ச்சியாகும்.

### மாலைக் கல்லூரிகள்.

கல்லூரி, உயர்நிலைப் பள்ளிப் படிப்பைப் பெற்று வேலைக்குச் செல்பவர்கள் கரையிலாத கல்வியை மேலும் கற்க வேண்டுமென்ற ஆசையால் உந்தப்படுகின்றனர். இவர்களின் ஆசையை நிறைவேற்ற வேண்டியது நம் அரசின் கடமையன்றோ? இதற்கெனத் தொடங்கப்பட்டதுதான் தமிழகக் கல்வி வரலாற்றிலேயே புதிய திட்டமான மாலைக் கல்வித் திட்டமாகும். முதன் முதலில் சென்னையில் ஆண்களுக்காக ஒன்றும் பெண்களுக்காக ஒன்றும் என இரு கல்லூரிகளிலும், கோவையில் ஒரு கல்லூரியிலும் மாலை வகுப்புகள் தொடங்கப்பட்டன. தனியார் நடத்தும் கல்லூரிகளிலும் சென்னை, திருச்சி, மதுரை ஆகிய மூன்று இடங்களில் மாலை வகுப்புகள் தொடங்கப்பட்டன. அலுவலகங்களில் வேலை செய்பவரும் ஒருதுறைப் பட்டம் பெற்று வேற்றுத்துறைப்பட்டம் பெற விரும்பியோரும் இம் மாலைக் கல்வித் திட்டத்தால் ஈர்க்கப்பட்டதால் மாலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை பெருகி மாணவர்கள் பலர் பயன் பெற்றனர். கடந்த ஆண்டு 13 கல்லூரிகள் மாலை வகுப்புகளை நடத்திவந்த நிலை இன்று மேலும் பெருகி உள்ளது. சட்டக் கல்லூரி மாலை நேர வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்குக் கட்டணத்தை ரூ. 75-ல் இருந்து ரூ. 50-ஆகக் குறைத்திருக்கிறது.

### இலவசக் கல்வியும் இதர சலுகைகளும்.

ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால் அந்நாடு முதலில் அறியாமையிலிருந்து விடுபட வேண்டுமென்று தாகூர் கூறினார். அறியாமையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள அனைவரும் விரும்பினாலும் அவர்களுக்கு உயர்கல்வி பெறக் குடும்பச் சூழ்நிலை இடமளிப்பதில்லை. பணமின்மையால் கல்லூரிக் கல்வி பெற முடியவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு மகிழ்ச்சி தர நம் கழக அரசு இலவசக் கல்வித் திட்டத்தை 1969-ம் ஆண்டு முதல், புகுமுக வகுப்பிற்குக் கொண்டு வந்தது. இந்தியப் பேரரசால் தரப்படும் கல்வி உதவித் தொகைகள் மாணவர்களுக்குத் தொடர்ந்து அளிக்கப்படுகின்றன. உயர் தகுதி பெற்றவர்களுக்குத் தேசீயக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுடைய மக்களில் தகுதி உள்ளவர்களுக்குத் தேசீயக் கல்வி உதவித்தொகை, தேசீயப் படிப்பு உதவிக் கடன்



தொகை வழங்கப்படுகின்றன. 1969-70-ல் இத்திட்டங்களால் 2,060 பேர் பயனடைந்தனர். இந்த வகையில் நிதி உதவி பெறுவோர் தற்போது ஏறத்தாழ 7,500 மாணவர்கள் ஆவார்கள். முடவர், குருடர், செவிடர் ஆகிய உடல் ஊனமுற்றோர் படிப்பதற்கு இந்தியப் பேரரசினர் படிப்புதவி அளித்து வருகின்றனர். ஏறத்தாழ, 25



பேர் தான் அந்த உதவி பெறுகின்றனர். அதிகம்பேர் உதவி பெற முடியாததால் அவர்களுக்கு உதவத் தமிழக அரசு தனித் திட்டம் ஒன்று உருவாக்கிற்று. அதன்படி 16 வயது முதல் 30 வயது வரையுள்ள உறுப்பு நலன் இழந்தோருக்கு உதவ முடிவு செய்தது. அதன் மூலம் 1969-70-ல் 112 பேர் தமிழக அரசின் உதவியால் பயன்பெற வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

ஆங்கிலப் பாடத்தைக் கல்லூரிகளில் கற்பிப்பதற்குத் தகுந்த ஆசிரியர்கள் கிடைப்பது அரிதாக இருப்பதால் ஆங்கிலத்தில் எம்.ஏ. படிப்புப் படிப்போருக்குப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டமொன்று உருவாக்கப்பட்டது. அதன்படி 1969-70-ம் ஆண்டில் 40 மாணவர்கள் ரூபாய் 100 உதவித் தொகை பெற்றுக் கல்லூரிகளில் படித்து வருகின்றனர்.

### கல்வித் தரம்.

கல்வித் தரம் குறைந்துவிட்டதாகச் சிலர் வீணாகக் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். பல மாநிலங்களுடன் ஒப்பிட்டுநோக்கும் பொழுது நமது கல்வியின் தரம் நன்கு வளர்ந்தே உள்ளது. 1968 முதல் பாடங்களைத் தமிழ்மொழி வாயிலாகக் கற்பிப்பதற்குரிய, தகுதியினை வளர்க்கும் பொருட்டு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி மதுரைப் பல்கலைக் கழகம் பயிற்சி அளித்து வருகிறது. அறிவியல் பாடங்களைத் தமிழ்மொழி மூலம் கற்பிப்பதற்கு 376 பேராசிரியர்கள் பயிற்சி பெற்றனர். மேலும் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இதனால் ஆங்கிலத்தைப் புறக்கணித்துவிட்டோம் என்று எண்ண வேண்டாம். ஏனெனில் ஆங்கில மொழியினைக் கற்பிக்கும் திறனில் தேர்ச்சி பெறுவதற்கும் பிரிட்டிஷ் மன்றத்தின் உதவியுடன் ஆசிரியர் கல்லூரியில் நடைபெற்ற பயிற்சி முறையில் கல்லூரி ஆங்கில ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். மாணவர்கள் தாய் மொழி மூலம் பாடங்களைப் படித்த போதும் ஆங்கிலத்திலுள்ள மூலநூல்களைக் கற்றறிய ஆங்கில மொழித்திறன் அவசியம் தேவைப்படுகிறது. மேலும் உயர் நிலைப்பள்ளியிலிருந்து கல்லூரிக்கு வருபவர்கள் பெரும் பாலும் தமிழிலேயே அதிகத்திறன் காட்டுவதால் ஆங்கில மொழிப்புலமை நன்றாக அமையும் பொருட்டு இணைப்புப் பயிற்சி (Bridge Intensive Course)) அளிக்கப்படுகிறது. அச்சமயத்தில் மாணவ மாணவியர்—பேராசிரியர்கள் ஆங்கிலத்தில் உரையாடியும் ஆங்கிலப்பேச்சைக் கேட்டும் பயம் பெறுகின்றனர்.

### தாய் மொழிக் கல்வி :

**''புரியாத மொழி புகழும் ஒருத்தி இரவில் இட்ட இன்ப ஓவியம்''** என்பார் பாரதிதாசன். அதற்கிணங்கத் தாய்மொழி மூலம் பெறுகின்ற அறிவே என்றும் நீடிக்கும் என்பதால் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்கியது இவ்வரசு. புகுமுக வகுப்பில் 1968-69-ல், 92 கல்லூரிகளில் 13,800 மாணவர்கள் தமிழ் மூலம் அறிவியல் கல்வி பெற்றனர். 1969-70-ல் தமிழ்



பயிற்று மொழியைக் கொண்ட கல்லூரிகள் 111 ஆக உயர்ந்தன. கடந்த ஆண்டு தமிழ் மொழி மூலம் புதுமுக வகுப்பில் பயின்றோர் 19,500 பேராவர். 1967-68-ம் கல்வியாண்டு முதல் பட்டப்படிப்பிலும் தமிழ் பயிற்று மொழியாகியது. 1968-69-ல் 57 கல்லூரிகளில் பட்டப்படிப்பிற்குத் தமிழ் மொழி பயிற்று மொழியாக விளங்கியது. கடந்த ஆண்டு 94 கல்லூரிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. 1968-69-ல், 2,500 பேர் பட்டப்படிப்பைத் தமிழில் மேற்கொண்டனர். கடந்த ஆண்டு 3,700 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ்க் கல்வி கற்றனர். புதுமுக வகுப்பில் தமிழ் மூலம் அறிவியற் பாடங்களைப் படித்த மாணவர்கள் தொடர்ந்து பட்டப்படிப்பிலும் தமிழில் அறிவியல் பாடங்களைப் படிப்பதற்கு 1969-70 முதல் வழிசெய்யப்பட்டது. பி.எஸ்ஸி. பட்டப் படிப்பிற்கு உரிய கணிதம், பொருளியல், இரசாயனம், தாவர நூல், விலங்கு நூல் ஆகிய ஐந்து பெரும் பிரிவுகளையும் தமிழில் படிக்க வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் நான்கு அரசினர் கல்லூரிகளிலும் வெளியில் மூன்று அரசினர் கல்லூரிகளிலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் பி.எஸ்.ஸி. பட்டப் படிப்பிற்குரிய பாடங்களைப் படிக்க வாய்ப்புள்ளது. தற்போது 1,900 மாணவர்கள் தமிழ் மொழி மூலம் அறிவியல் பட்டப் படிப்புப் படித்து வருகின்றனர்.

### நூல் வெளியீடு

கல்லூரிகளில் பயிற்று மொழியைத் தமிழ்மொழி ஆக்கியதும் அங்கு படிப்பதற்கேற்ற தமிழ் நூல்கள் தேவைப்பட்டன. அறிவியல் பாடங்களுக்கு உரிய கலைச் சொற்களைத் தயாரிப்பதற்காக 1968-69-ல் ஒரு குழு அமைக்கப்பட்டது. அனைத்துப் பல்கலைக் கழகக் குழுவினர் அக்கலைச் சொற் பட்டியலைப் பார்வையிட்டு ஒப்புக்கொண்ட பின்னர் தமிழ் நூல் வெளியீட்டுக் கழகத்தினர் 55 அறிவியல் நூல்களைத் தக்க ஆசிரியர்கள் மூலம் தயாரித்து வெளியிட்டுள்ளனர். இவ்வாறு பட்டப்படிப்பினைத் தமிழ் மொழி மூலம் தடையின்றிக் கற்க வழி செய்யப்பட்டுள்ளது.

### நடைமுறைக் கல்வி ஆண்டிற்கான திட்டம்

கல்லூரியில் புதுமுக வகுப்பில் சம்பளமில்லை என்ற நிலை



1969-70-ல் நடைமுறைக்கு வந்ததால் மாணவர்கள் கல்லூரிகளில் சேரப் பெரிதும் விரும்புகின்றனர். எனவே அடுத்த ஆண்டில் நான்கு புதிய அரசுக் கல்லூரிகளைத் தொடங்குதல், புதுமுக வகுப்புகளில் அதிகம்பேர் சேர வழி செய்தல், புதுமுக வகுப்புகள் மட்டும் உள்ள கல்லூரிகளைப் பட்டப் படிப்பிற்குரிய கல்லூரிகளாக உயர்த்துதல், உயர் பட்டப்படிப்பிற்குத் தேவையான பாடப்பகுதிகளைச் சில கல்லூரிகளில் தொடங்குதல் போன்றவைகளை நிறைவேற்றத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அறிவியல் பாடத்திற்காக மேலும் 25 நூல்கள் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அறிவியல் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தமிழ் மொழி மூலம் கற்பிப்பதற்குரிய பயிற்சியளிக்கும் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட இருக்கிறது. இவ்வாறு 1970-71-ம் கல்வியாண்டுத் தேவைகளை நிறைவேற்ற வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### நமது கடமை

“நாடும் மொழியும் நமதிரு கண்கள்” என்ற சீரிய கொள்கைக்கிணங்க நம்முடைய மொழியையும் நாட்டையும் காக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனுடைய கடமையாகும். தாய் மொழி மூலம் கல்வி கற்க வேண்டியதனுடைய அவசியத்தைப் பிற மொழி கற்றுணர்ந்த பெரியார்களான காந்தியடிகள், இராஜாராம் மோகன்ராய், பேரறிஞர் அண்ணா ஆகியோர் பெரிதும் வலியுறுத்தியுள்ளனர். அரசியல் காரணங்களால் அலைக்கழிக்கப்படாமல் கண்ணெனும் தமிழ் மூலம் கல்வி கற்று, மொழியையும் தமிழ்ப்பண்பாட்டையும் காக்க வேண்டியது நம் கடமையன்றோ ?

---

**தொட்டனைத் தூறும் மணற்கேணி: மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு**

—குறள்

---

# கைத்தறியே அணிவோம்



## கவிஞர் ஆனந்தம்

பொய்யாகும் வாழ்வென்று புகல்வார் தம்மைப்
பொய்யராக்கி, ஏமாற்று புரிவோ ராக்கி
மெய்யாகும் இவ்வுலக வாழ்வே என்று
மெய்ப்பிக்க, உடலுக்கு மெய்யென் னும்பேர்!
கொய்யாத கனியான தமிழின் சான்றோர்
சூடி அந்நாள் சூட்டினரே! அக்கா லத்தே
செய்யாத அறிவார்ந்த பணியும் உண்டோ?
சிந்தித்து விடைகாணாத் தோல்வி யுண்டோ!

கையாலே பருத்தியிலே பஞ்செ டுத்துக்
கையாலே நூல் நூற்றுத் தறிய மைத்துக்
கையாலே நெய்கின்ற தொழிலை முன்னர்
கண்டுபிடித் துயர்வான முறையில் அந்நாள்
கையாளும் பெருமை சேர் தமிழர் கூட்டம்—
கடல் கடந்து வாணிபத்திற் காகச் சென்று
பையாலே பொருள் நிறைத்து மீண்டார்; அந்தப்
பழம் புகழை எண்ணிடிலோ ஏக்கந் தோன்றும்!

அயல் நாட்டார் தமிழகத்தின் மென்மை மிக்க
அழகுமிழும் பட்டாடை, பருத்தி யாடை
மயல் பொங்கத் தம்மேனி தழுவு தற்கு
மறக்கலத்தை எதிர்பார்த்துக் காத்தி ருந்தார்!
கயல் விழியார் எல்லோரும் விழையும் வண்ணம்
கை வண்ணம் காட்டிவந்தார் நமது நெய்வோர்!
முயல்வதிலே பிழையில்லை; ஆனால் இந்நாள்
முடங்கிவிட்ட கொடியநிலை காண்போ மந்தோ!

தறியருகே அமர்ந்திருகால் தாளம் போடத்
தவறாமல் இருகையால் ஊடும் பாவும்
குறியுடனே இணைத்திறுக்கி ஆடை யாக்கிக்
குறிப்பிட்ட அளவாகத் துணித்த தாலே—
அறிவுடையார் துணியென்றே அழைக்க மேலும்
அமைவாக வெட்டிடலால் வேட்டி என்றும்
நறியமணச் சேலைதனைக் கூறை யென்றும்
நாடு முற்றும் போற்றுதலை நாமும் கண்டோம்.

ஆலையுடன் போட்டியிடத் தறியால் ஆமோ?
அற்றைநாள் தொழிலெனினும் விஞ்ஞா னத்துச்
சோலையதன் நறுமணத்தை நுகரோ மென்று
சொல்வதிலே நியாயமில்லை! எனினும் இன்று
வேலையின்றித் தறிபட்ட பாடு பட்டு,
விடியாத இருளாக வாழ்வி ழந்து
காலையென்று வருமென்று காத்தி ருக்கும்
கதியற்ற நெசவாளர் நிலைமை என்ன?

தள்ளுபடி அதிகமாகத் தந்தும், தாமே
தக்கஉதா ரணமாகத் திகழ்ந்தும் இன்று
அள்ளுசுவைத் தமிழரசை அமைத்த மேலோர்
அன்பாலே நெசவாளர் முன்னேற் றத்தைக்
கொள்ளுவதே குறிக்கோளாய்த் திட்டம் தீட்டிக்
குறைகளைவார்! நம்மவரின் கொள்கை யாகக்
கள்ளமிலாக் கைத்தறியின் ஆடை என்றே
கையாள்வோம் நெசவாளர் ஏழ்மை கொல்
வோம்.


1963
ஏப்ரல்
1
ஒரு குழந்தை இருக்கும் போது
Happy Birthday
1964
16
௨-வது குழந்தை பிறந்த பின்
நம்ம கலைவாணிக்கு நாளைக்குப் பிறந்தநாள் கேக் வாங்கணும்
கேக்கா? கடலை மிட்டாய் கேக் தான் வாங்கித் தர முடியும்
1966
25
மூன்றாவது பிறந்த பின்
அம்மா! என்னையும் தூக்கிக்க
ஒரு பிள்ளையை உங்க அம்மா வீட்டிலே விட்டுட்டு வான்னு சொன்னனே! கேட்டியா?


4-வது பிறந்த பின்
1967
14
அடுத்தக் குழந்தை இப்போது வேண்டாம். இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம்.
சனியன்களே! ஏன் ஷெட்டை பாழடிக்கிறீங்க! எங்காவது தொலைஞ்சு போறது தானே!
5-வது குழந்தை பிறந்த பின்
1969
8
அந்த வயித்தெரிச்சலை ஏன் கேக்கிறீங்க!...
சாருக்கு எத்தனை குழந்தைகள்?
6-வது குழந்தை பிறந்த பின்
1970
2
உங்களுக்கும் ஏதாவது எடுத்துக் குங்க.
எனக்கு இனி மேல் காவிதான் எடுக்கணும்
அப்பா எனக்கும்
எனக்கு
அப்பா எனக்கு சொக்காய்-பாவாடை எடப்பா

# எதிர்காலத்தை நோக்கி இன்ப ஊஞ்சலில்



## செல்வனும் செல்வியும்

வளமான வாழ்வு. எதிர்காலம் பற்றிய அச்சமில்லை. புன்னகையுடன் வருங் காலத்தை வரவேற்கக் காத்திருக்கும் இக்குழந்தைகளுக்கு மட்டும் இந்த இனபச் சூழ்நிலை எப்படி வந்தது ? பிறக்கும் போதே அதிர்ஷடத்தை அணைத்துக் கொண்டா பிறந்தனர் ? இலலை.

வருமுன் காக்கும் வகையறிந்த இவர் தம் பெற்றோர், திட்டமிட்டுப் பொருளைச் சேர்த்தனர், திட்டமிட்டே குடும்பத்தைக் காத்தனர். வருவாய். குறைவாக இருப்பினும், குடும்பம் விரிவாகவிலலை. திடடமிடட குடும்பமே தெவிட்டாத இன்பம் என்பதை உணர்ந்து போற்றினர் ; பின்பற்றினர்.

உங்கள் இன்பமும் உங்கள் குழந்தை களின் வருங்கால இன்பமும் உங்கள் கரத்திலேயே உள்ளது. திட்டமிட்டுக் குடும்பத்தை அமையுங்கள். மட்டில்லா இன்பம் பெறுவீர்கள்.

தமிழகத்தில பதது லடசம் பேர் குடும்ப நலத் திட்டத்தால் பயனடைந துள்ளனர். வளமிக்க நிறைவாழ்வும் எழில் குன்ரு இன்னுடலும் பெற்று மகிழ்கின்றனர். பெற்ரோரும் குழந்தைகளும் இனிமைமிக்க எதிர் காலத்தை இப்போதே அமைத்துக் கொண்டனர்,

உங்கள் வாழ்வையும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாழ்படுத்திட வேண்டாம் ; பாதுகாத்திடுங்கள் ! உங்கள் மருத்துவரைச் சந்தியுங்கள் ; நண்பர்களிடம் கேளுங்கள் !

குடும்ப நலத் திட்டப் பணியகத்திற்குச் செல்லுங்கள். பயிற்சி பெற்ற பணியாளர்கள் கனிவு காட்டுவர்; கருத்துரை தருவர்; கருவிகளும், கிடைக்கும்; பயன் பெறுக !

***திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்***

**வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9**

MOULIS

# தொடர்ந்து பரிசு பெறும் தொழிற்கூடம்

ஆகஸ்டு 11-ம் நாள். பம்பாய், சயான் பகுதியிலுள்ள மையத் தொழிலாளர் நிலையம் பரபரப்போடிருந்தது. மத்திய அரசு தொழிலாளர் நல அமைச்சர் திரு. சஞ்சீவையா அவர்கள், பல தொழிற்கூடங்களுக்கு, 1969-ம் ஆண்டில் விபத்தின்றி இயங்கியதற்காகப் பல சிறப்புப் பரிசுகள் வழங்கிக் கொண்டிருந்தார்.

மத்திய அமைச்சரிடம் பரிசு பெற்றவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள், சென்னை, குரோம்பேட்டையிலுள்ளபோக்குவரத்து மத்தியத் தொழிற்கூடத்தைச் சேர்ந்த இருவர். அவர்கள் தொழிற்கூட நிர்வாக அதிகாரிகளோ, பொறியியல் வல்லுநர்களோ அல்ல. தொழிற்கூடம் விபத்துக்கள் எதுவுமின்றி நல்ல முறையிலே இயங்குவதற்குக் காரணமான தொழிலாளர்களின் பிரதிநிதிகள்.

ஒருவர் தொழிற்கூடத்தில் தச்சு வேலை பார்க்கும், திரு சாரங்கபாணி. மற்றவர், இருக்கைகளை இணைக்கும் பிரிவைச் சேர்ந்த திரு. தர்மன்.

பரிசுகள் பெறுவதற்கான பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதில் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தியுள்ள



இந்தப் போக்குவரத்து மத்திய தொழிற்கூடம், விபத்தின்றி இயங்கியதற்காகப் பரிசுபெறுவது இது முதல் தடவை அல்ல. மாநில அரசிடமிருந்து நான்கு தடவைகளும், மத்திய அரசிடமிருந்து ஆறு தடவைகளும் இப்பரிசினைத் தட்டிச் சென்றுள்ளது இந்தத் தொழிற் கூடம்.

மத்திய அரசிடம் இந்த ஆண்டு வாங்கியது நான்கு பரிசுகள். ஒரு சுழற் கேடயமும், மூன்று கோப்பைகளும் ஒவ்வொன்றும் ரூ. 2,500 ஆக நான்கு பரிசுகளுக்கும் ரூ. 10,000 ரொக்கமும், அந்தப் பரிசுகளாகும். அடிக்கடி விபத்து நேராமை, ஒரு விபத்திற்கும் அடுத்த விபத்துக்குமிடையே நீண்ட இடைவெளி, அதிக சதவிதம் விபத்துக்களைக் குறைத்தது. எல்லாவற்றையும் சேர்த்து ஆகிய நான்கு வகைகளிலும் முன்னணியில் நின்றதில் இந்தப் பரிசுகளைப் பெற்றது, இந்தத்தொழிற்கூடம்.

தமிழ்நாடு அரசின் தொழிற்கூடமான இதில், முக்கியமாக நடைபெறும் பணி, பேருந்துகளுக்கான மேற்பகுதியினை (பாடி) அமைப்பது. லேலாண்ட், பென்ஸ் ஆகிய அடித்தளங்களைப் (சேசிஸ்) பயன் படுத்தித் தமிழ் நாடு அரசுப் போக்குவரத்திற்காக மாதந்தோறும் சுமார் 40 பேருந்துகளைஉருவாக்குகிறது, இந்தத் தொழிற்கூடம்.

1948-ல் தொடங்கப்படும் போது மாதம் இரு பேருந்துகளையே உருவாக்கி வந்த இந்தத் தொழிற்கூடம் தற்போதுமிகவும் விரிவடைந்து, மேற்பாகம் அமைப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் பேருந்துகளின் இயந்திரங்களைப்பழுதுபார்ப்பதுபோன்ற பணிகளையும் செய்கிறது. இங்கு மாதந்தோறும் சுமார் 50இயந்திரங்கள் பழுதுபார்க்கப்படுகின்கின்றன.

வெளியூர்களுக்குச் செல்லும் விரைவு வண்டிகள், மாடிபஸ்கள், சென்னை நகருக்கான பேருந்துகள், இருவண்டிகள் (டிரெயிலர்), நின்று பயணம் செல்லும் வண்டிகள் இங்கு தயார் ஆகின்றன.

அதோடு, போக்குவரத்துத் துறைக்கான பேருந்துகளைமட்டுமின்றி, காவல்துறைக்கான வண்டிகள், மருத்துவத் துறைக்கான





ஆம்புலன்ஸ் வண்டிகள், தீயணைக்கும் படைக்கான வண்டிகள், சிறு சேமிப்பு, வனவளத்துறை போன்ற அரசின் பல்வேறு துறைகளுக்கும் வண்டிகளை அமைத்துத் தருகிறது.

மத்தியப் பிரதேசத்திற்கு 14 வண்டிகளையும், அந்தமான் தீவிற்கு ஒரு வண்டியையும் அமைத்துக் கொடுத்த பெருமையும் இந்தத் தொழிற் கூடத்திற்கு உண்டு.

சென்னை, குரோம் பேட்டையில் 28 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள இந்தத் தொழிற் கூடம், ஆசியாவிலேயே இது போன்ற மிகப்பெரிய தொழிற் கூடங்களில் ஒன்றாகும். இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள அரசின் போக்கு வரத்துத் தொழிற்சாலைகளில் இதுவே பெரிது.

கையிழந்தவர், கண்பார்வையில்லாதவர் சிலரையும் வேலையில் சேர்த்துள்ள இந்த நிறுவனம், ஊனமுள்ளோரை அதிக அளவில் சேர்த்துள்ளதற்காகவும் பரிசு பெற்றுள்ளது.

பேருந்தின் மேற்பாகம் அமைப்பதற்குத் தேவையான இரும்புத் தகடுகள், இருக்கைக்கான ரப்பர்கள், தோல்கள், பிளாஸ்டிக்குகள், குழாய்கள் ஆகியவற்றை மட்டுமே வெளியே வாங்குகின்றனர். அதுவும் சென்னை, மற்றும் சுற்றுப் புறத்திலுள்ள நிறுவனங்களிலிருந்தே வாங்கப்படுகின்றன. மற்றப்படி பேருந்துகளின் தேவைக்கேற்ப இந்தப் பொருள்களை வெட்டி இணைப்பது, இருக்கைகளைத் தைப்பது, மின்சாரப் பகுதிகளை இணைப்பது போன்ற எல்லாப் டணிகளையும் தொழிற்கூடமே செய்கிறது.

உதாரணமாக, வெளியில் 11 ரூபாய் செலவில் வாங்க வேண்டிய அலுமினியக் கைப்பிடிகளை இங்கு சுமார் 5 ரூபாய் செலவில் செய்துவிடுகின்றனர். வெளியிலிருந்து மேற்பாகம் அமைப்பதைவிட இங்கேயே கட்டுவதால் சுமார் 20 சதவீத லாபம் கிடைக்கிறது என்று தெரிவித்தார் தொழிற் கூடப் பணி மேலாளர்.

ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் இந்தத் தொழிற்கூடத்திலுள்ள கட்டடங்களின் மதிப்பு சுமார் மூன்று இலட்சம் ரூபாய். யந்திரங்களின்



மதிப்பு சுமார் பத்தரை லட்சம். பொருட்களின் (ஸ்டோர்ஸ்) மதிப்பு சுமார் நாற்பது லட்சம்.

ஆறு ஆண்டுகள் வரை ஓடக் கூடிய இந்தப் பெரிய பேருந்து களின் விலை (சேசிஸ் சேர்ந்து) எவ்வளவு இருக்கும் தெரியுமா? சுமார் ஒரு இலட்சம் வரை. (ஆத்திரத்தில் பேருந்துகளுக்குத் தீவைத்துக் கொளுத்துவோர் கவனிக்க!)

இந்தத் தொழிற்கூடத்தில் தொழிலாளர் நலத்திலும் சிறப் பான கவனம் செலுத்தப் படு கிறது. உணவுக்கூடம், பொழுது போக்குக்கூடம் ஆகியவை இங்கு உண்டு. அதோடு பேருந்துகளை விரைவில் அமைக் கும் தொழிலாளர்களுக்கு ஊக்க போனசும் வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டில் மத்திய அரசு அளித்த ரொக்கப் பரிசுத் தொகை முழுவதும் தொழிலா ளர்களுக்கே பிரித்து வழங்கப் பட்டது.

ஆக்கப் பணியில் ஈடுபட்டு வளர்ந்தோங்கி வரும் இத் தொழிற்கூடம், அரசு நிறுவனங் களில் முன் மாதிரியாக விளங்கி வரும் என்பதில் ஐயமில்லை.



கண் பார்வை இழந்தவர் பணியாற்றுகிறார்.

---

# ரூ. 3,000

சென்ற ஜூலைத் திங்கள் 5-ம் நாள், இராமநாதபுரம் மாவட் டத்திலுள்ள திருப்பத்தூரில் ஒரு சாதனை நிகழ்ந்தது. ரூ. 3,000 செலவில் கட்டப்பட்டுள்ள மலிவு விலை வீடுகளை அன்று, தமிழக கூட் டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் தமிழக தொழில் அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்தியா சிமெண்ட் நிறுவனத் தால் கட்டப்பட்ட இந்த வீடுகள் வசதியானவை—உறுதியானவை. இந்த வீட்டில் ஒரு புழக்க அறை, ஒரு சமையல் அறை, முன் வராந்தா, குளியல் அறை யாவும் உள்ளன.

வீட்டின் சுவர்கள் 5 சத வீதம் சிமெண்டு கொண்ட மண் காங்கிரீட்டால் செய்யப்பட்ட பிளாக்குகளால் கட்டப் பட்டவை. வாசற்கால், சன்னல் கால், கூரை முதலியவை வார்த் தெடுத்த உறுப்புகளால் செய்யப் பட்டிருந்தன. மரத்துக்குப் பதில், வார்த்தெடுத்த காங்கி ரீட் உபயோகிப்பதால் அதிக வலுவும், நெடுநாள் உழைக்க கூடியதுமான பாகங்கள், குறைந்த விலையில் கிடைக்கின் றன. மரத்தினாலான வாசற்கால் களை விட இவை மலிவானவை. மேலும், இவை கறையான் களாலும், தீ விபத்துக்களாலும் பாதிக்கப்படமாட்டா.

நல்ல முறையில் தயாரித் தால் வேலைத் தளத்தில் வெகு விரைவில் இவைகளை ஒன்று சேர்க்க முடியும். நிர்மா ணிக்க ஆகும் நேரம் குறை வதால், மேற்பார்வை, காவல், கண்காணிப்பு, சேமித்து வைத் தல் முதலிய இனங்களில் செல வும் குறைகின்றது.

வழக்கமாகவுள்ள முறையில் கட்டும் வீடுகளுக்கு சதுரஅடிக்கு இருபதுரூபாய்வரை யில் செலவாகும். ஆனால் இந்த வகை வீடுகள் கட்ட சதுர அடிக்கு ஆகும் செலவு சுமார் ரூ.10 தான்.

இந்த வகை வீடு கள், கிராம மக்க ளின் தேவைகளை மனத்தில் கொண்டு நிர் மாணிக் கப் பட் டுள்ளன.



கர்ப்பம் ஏற்பட்டுவிடுமே என்று அச்சமின்றி இல்லற வாழ்க்கையை இன்பமாக அனுபவியுங்கள்.

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மிகவும் பத்திரமான முறை ஆண்களுக்கு இப்பொழுது உண்டு. அதுதான் நிரோத்

ஆடவர்களின் உபயோகத்திற்கு உகந்த உயர்தரமான குடும்பக் கட்டுப்பாடு சாதனம்.

# நிரோத்

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு

மூன்றின் விலை 15 பைசா
அரசாங்க ஆதரவு விலையில்
கிடைக்கிறது.



davp 69/106

பழைய சட்ட மன்ற உறுப்பினர் விடுதியைச் சரியாக பதினொரு மணி முப்பது மணித்துளிகள் அளவில் நானும் என் நண்பரும் சென்றடைந்தோம். சட்டத்தை இயற்றும் மக்கள் பிரதிநிதிகள் தங்கும் பழம்பெரும் இல்லத்தில்தான் சட்டத் துறை ஆட்சி மன்ற ஆணைக் குழு அமைந்துள்ளது. அனுமதி பெற்றவண்ணம் குழுச் செயலுறுப்பினர் சண்முகசுப்பிரமணியனாரைப் பேட்டி கண்டோம்.

'' நீதி மன்றங்களில் தமிழ் ' செயல் பட இதுகாறும் எடுத்த நடவடிக்கை பற்றிக் கூறலாமா'' என்று கேட்டோம்.

''அத்தகைய இடர் ஏற்படாத வகையில் சாட்சியம் அளிக்கப்படும்மொழியிலேயே அதைப்பதிவு செய்யலாமென்றும், நீதிபதிக்குத் தமிழில் போதிய பயிற்சி இல்லாமலிருந்தால் குறிப்பிட்ட காலத்திற்கு ஆங்கிலத்திலேயே சாட்சியத்தைப் பதிவு செய்யலாமென்றும், உற்ற பொருளைத் தக்க முறையில் உணர்த்துவதற்குத் தேவையென நீதிபதி கருதினால் அந்தந்தச் சொற்களை ஆங்கிலத்திலேயே எழுதலாமென்றும் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முறை இப்பொழுது வெற்றியுடன் நடைபெறுகிறது, என்று பெருமிதத்துடன் சொன்னார்.

கும் முக்கிய பணியில் ஈடுபட்டுள்ளது என்றும் இந்திய அரசமைப்புச் சட்டத்தை இப்பொழுது தமிழாக்கம் செய்து வருகிறது என்றும் சொன்னார். 'இது போன்ற பணிகள் அண்டை மாநிலங்களில் உள்ளனவா?' என்று கேட்டதற்கு '' ஆம் '' என்றார். ''மத்திய அரசும் இதற்கென ஓர் ஆணைக் குழுவை நியமித்துள்ளது. மற்றொரு நூல் ஒன்றும் வெளியிட இருக்கிறோம்'' என்று சொன்னார். அதாவது ''Law Reports'' '' தூய தமிழில் என்ன சொல்லலாம்? என்று எங்களைப் பார்த்துக் கேட்டார். குறிப்பாக உடன் இருந்த தமிழ் எம்.ஏ. நண்பரைப் பார்த்துக் கேட்டார். அவரே



# நீதிமன்றங்களில் தமிழ்

''தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமெனில் நீதிமன்ற மொழியாகத் தமிழ் விளங்க வேண்டும். நீதி மன்றங்களில் சாட்சியங்கள் பதிவதும் தீர்ப்புக்கள் எழுதுவதும் ஆங்கிலத்திலேயே அண்மைக்காலம் வரை இருந்தது. சில மாதங்கட்கு முன் மாவட்ட நிலையில் உள்ள சாட்சியங்களைத் தமிழிலேயே பதிய வேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளது'' என்று பதிலளித்தார்.

''தமிழ் தெரியாத சாட்சிக்கோ.... பயிற்சியில்லாத நீதிபதிக்கோ இது இடர்விளைவிக்காதா?''

''தீர்ப்புக்களைத் தமிழில் எழுத வேண்டுமென்பது அரசின் மற்றொரு குறிக்கோள். இதற்கென்று நல்ல தீர்ப்புக்களை எழுதுவோர்க்கு ரூ. 5,000 பரிசளிப்பும் அரசு அளிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது''

ஆட்சி மன்றக் குழு ஏதாவது நூல் வெளியிட்டுள்ளதா என்ற கேள்விக்கு விரைவில் ' மாதிரித் தீர்ப்புக்கள் நூல் ' ஒன்று வெளியிட இருக்கிறோமென்றார்.

நீதி மன்ற மொழியாகத் தமிழ் ஆவதற்கு முக்கியமான தேவை சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பது. இவ்வாணைக் குழு சட்டங்களை மொழி பெயர்க்

யோசித்து '' தீர்ப்புக் கோவை' யென்றார். உடன் இருந்த தமிழாசிரியரும் எழுத்தாளருமான என் நண்பர் அருமையான மொழி ஆக்கம் ('' தீர்ப்புக் கோவை '') என்று பாராட்டினார். '' எல்லாம் முயற்சியும்—ஆர்வமும் தான்'' என்றார் சட்டத் துறை சண்முக சுப்பிரமணியனார். தமிழக உயர்நீதி மன்றத்து முக்கியமான தீர்ப்புக்களும், உச்ச நீதிமன்றத்தின் முக்கியமான தீர்ப்புக்களும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, வெளியிடப்படுமென்றும்; இம்முயற்சியால் தமிழ் நல்ல முறையில் உருவாகி மக்களிடையே


குறளகம்
சென்னை.1
கதர்-கைத்தொழில் அங்காடி
தொலைபேசி எண்கள்: 26762 21552 21553
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்
உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்

பரவும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது என்றும் தெரிவித்தார்.

“சட்டக்கல்வி தமிழில் வருவது அவசியமா ? தமிழ் நீதிமன்றங்களில் வருவதால் வழக்கறிஞர்கள் வருமானம் குறையாதா?” சட்டக்கல்வி தமிழில் அவசியமே. விஞ்ஞான நூல்களுக்கும் சட்ட நூல்களுக்கும் அடிப்படை வேறுபாடு உண்டு. விஞ்ஞான நுட்பச் சொற்கள் பலப் பலப் புதிய பொருள்களைக் குறிக்கின்றன.

“சட்டத்திலே ஆங்கிலத்தில் நுட்பச் சொற்கள் இருந்தாலும், அச்சொற்கள் புதிய கருத்துக்களையே குறிக்கின்றன. அக்கருத்துக்களைத்தெளிவாக தமிழிலே கூற இயலும். சட்டக் கல்லூரி மாணவர் பலரை நான் கண்டு பேசும்பொழுது ஓர் உண்மை வெளியானது. தாய் மொழியில் சட்டக் கருத்துக்கள் அவர்களுக்குப் போதிக்கப்பட்டால் அவற்றை எளிதில் புரிந்து கொள்வதோடு, மீண்டும் எடுத்துச் சொல்வதிலும் அவர்கள் எளிதில் திறமை பெறுவார்கள் என்பது தான். அந்நிய மொழியில் அருங் கருத்துக்களைக் கற்க முயலுகையில் கருத்துக்களை விடக் கடினமாக மொழி இடையில் இருக்கிறது. அம்மொழியைக் கற்கும் முயற்சியிலே மொழியில் அடங்கியுள்ள கருத்து பின்னணிக்குச் சென்று விடுகிறது. எனவே அந்த மொழியில் அடங்கியுள்ள பொருள் நன்கு விளங்காத நிலையில் நின்று விடுகிறது. தாய் மொழியில் அருங் கருத்துக்களைக் கற்கும் பொழுது இந்த இடர்ப்பாடு எழுவதில்லை. அருங்கருத்தும் அதைக் கூறும் மொழியும் இணைந்து புரிகின்றன மாணவர்களுக்கு. எனவே சட்ட அறிவு பெற நேர்மையான நீதி முறையை நாம் அடைந்திடத் தமிழில் சட்டக் கல்வி தேவை”

“இங்கிலாந்து நாட்டிலே ஆங்கிலேயரின் தாய் மொழியாம் ஆங்கிலத்தில் தான் சட்டங்கள் எழுதப்பட்டன. நீதி மன்றமும் நடைபெறுகிறது. நம் நாடு போன்றே அங்கு வழக்கறிஞர் அதிகவருமானம் பெறுகின்றனர். பொது மக்கள் நேரடியாக வழக்கிடுவது முடிவதில்லை. தமிழில் சட்டம் இருந்து விட்டால் மட்டும் சட்ட ஞானம், சட்ட நுண்ணறிவு, வழக்கிடும்—வாதாடும் நெறியும் முறையும் எல்லோர்க்கும் தெரிந்து விடும் என்ற எண்ணம் முற்றிலும் முரண்பாடானது. சட்டம் படித்தவர்களுக்கே இது தெரியும். வழக்கறிஞர் வருவாய் குறைய வழியில்லை” என்று தெளிவாக விளக்கினார்.

‘நீதிமன்றங்களில் தமிழ்’ பற்றி இறுதியாகத் தாங்கள் கூறும் கருத்து என்ன என்று கேட்ட பொழுது “நீதி வழங்கப்பட்டால் மட்டும் போதாது. வழங்கப்படுவது நீதிதான் என்பதை எல்லாரும் உணர்ந்து கொள்ளும் வகையில் அது வழங்கப்பட வேண்டும்” என்பது, இந்த உயர்ந்த கொள்கையைச் செயல்படுத்தும் வகையிலே நீதிமன்ற மொழியாகத் தாய் மொழியான “தமிழ்” இருக்கவேண்டுமென்ற உறுதியான கொள்கையைத் தமிழக அரசு பின்பற்றுகிறது. இக்கொள்கையை நிறைவேற்றுவதே இந்த ஆணைக்குழுவின் தலையாய பணியாகும் எனக் கூறி முடித்தார்.

“நன்றி’ என்ற நல்ல சொல்லோடு பேட்டி முடிந்து செயலாளர் சண்முக சுப்பிரமணியனாரிடமிருந்து நாங்கள் விடை பெற்றோம்.



## தமிழ்நாட்டிற்கே முதலிடம்

இந்தியாவெங்கும் 1968-69-ம் ஆண்டில் நடத்தப்பெற்ற 850 தேசிய செயல் விளக்கத் தளைகளில், தமிழ் நாட்டில் நடத்தப் பெற்ற தேசிய செயல் விளக்கத் தளையே அதிக மகசூல் அளித்துள்ளதாக, மத்திய அரசின் உணவு வேளாண்மைத் துறை அறிவித்துள்ளது.

அதிக மகசூல் அளித்துள்ள அத்தேசிய செயல் விளக்கத் தளை கோவை மாவட்டம், குருடம்பாளையம் கிராமத்தில் திரு. வி. சி. ரெங்கசாமி என்ற உழவர் பெருமகனது வயலில் அமைக்கப்பட்டதாகும். அதில் ஐ. ஆர். 8 நெல்—“ஹை ஸ்டார்ச்” மக்காச் சோளம்—ஐ. ஆர். 8 நெல் என்று தொடர்ந்து 3 பயிர் செய்யப்பட்டது. அம் மூன்று பயிரும் முறையே ஹெக்டருக்கு (2.47 ஏக்கர்) 10,164 கிலோ, 2,840 கிலோ, 10,374 கிலோ மகசூல் அளித்துள்ளன.

மூன்று பயிரின் மூலமாக ஹெக்டருக்கு 23,378 கிலோ விளைவித்து, தமிழ் நாட்டிற்குப் பெருமை தேடித்தந்த திரு. வி. சி. ரெங்கசாமி அவர்களையும், அந்தத் தேசிய செயல் விளக்கத் தளையை நடத்திய வேளாண்மைத்துறை அலுவலர்களையும் பாராட்டுகின்றோம்.




# எல்லோரும் விரும்புவது. மேன்மையானது, முதன்மையானது

அசோக் லேலண்ட் காமெட்...பயணிகள் போக்குவரத்திற்கு. இந்தியா முழுவதும் அரசினர் போக்குவரத்து நிர்வாகங்கள், மற்ற போக்குவரத்து நிர்வாக உரிமையாளர்கள் விரும்பித் தேர்ந்தெடுப்பது.

**சிறப்பான காரணங்கள்**

அடிக்கடி நிறுத்திச் செல்வதாயிருந்தாலும் நெடுந்தூரம் செல்வதாயிருந்தாலும். ஏற்படும் பளுவைச் சுலபமாக சமாளிக்கிறது.

அதன் பூரண ஏர்ப்ரேக்குகள் பத்திரமாகவும் உடனடியாகவும் நிறுத்த வகை செய்யும். பராமரிப்புச் செலவு மிக குறைவு...மாற்று உறுப்புகளின் தேவை சொற்பம்...பழுதுகள் ஏற்படுவதில்லை. எண்ணைச் செலவில் மிகச் சிக்கனம்.

இப்போது அறிவீர்கள்...அது சக்திமிக்க, பத்திரமான வண்டி என்பதையும் அதிக பளு ஏற்றிச்செல்ல சளைக்காதது என்பதையும்.

## இதையே வாங்குங்கள். ஓர் அணியையே உருவாக்குங்கள். இதற்காக வருந்தமாட்டீர்கள்

வன்மை...நம்பகம்...சிக்கனம்

உள்ள

# அசோக் லேலாண்ட் காமெட்

AL-5003 Rev

தயாரிப்போர்: அசோக் லேலண்ட் லிமிடட், எண்ணூர், சென்னை 57

# ஊராட்சித் தேர்தல்

## ஒரு கண்ணோட்டம்

கடந்த 1965ம்-ஆண்டு ஜனவரி-பிப்ரவரித் திங்களில் தமிழ் நாட்டில் ஏறத்தாழ 13,000 ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் நடைபெற்றன. அப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம் 2-2-1970 உடன் முடிவுற்றது. ஊராட்சித் தேர்தலுக்கெனத் தனி வாக்காளர் பட்டியலைத் தயாரித்து வெளியிடுவதற்கும், ஊராட்சி மன்றத் தலைவர்களை நேரடியாக இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கத்தக்கவாறு 1958ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் திருத்தம் செய்தற்கும் சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சிறிது காலம் தேவைப்பட்டதால், அவ்வுறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு திங்கள் அளவிற்கு நீட்டிக்கப்பட்டது. பதவிக் காலத்தை நீட்டித்ததற்கு வேறொரு முக்கியக் காரணமும் உண்டு. தமிழ் நாட்டின் மற்றப் பகுதிகளில் உள்ளது போலல்லாது கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்திலும் ஊராட்சி அமைப்புமுறை மாறுபட்டிருந்தது. அங்குள்ள ஊராட்சிமன்றங்களைப்பிரித்துப் பல சிறு அமைப்புகளாகத் திருத்தி வரிசைப்படுத்த வேண்டியிருந்தது. இவற்றையெல்லாம் மனத்திற்கொண்டு முந்தைய உறுப்பினர்களின் பதவிக்காலம் 2—8—1970 நண்பகல் வரை நீட்டிக்கப்பட்டது. ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி ஏறத்தாழ 12,600 ஊராட்சிகளுக்கும் 600 பேரூராட்சிகளுக்கும் 1970 ஜூலைத் திங்கள் இறுதியில் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டன. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் 2-8-1970 அன்று தங்கள் பொறுப்புகளை ஏற்றனர்.

அண்மையில் நடந்து முடிந்துள்ளஊராட்சித் தேர்தல்கள் பல்லாற்றுலும் தனித்தன்மை வாய்ந்தவை. ஊராட்சி மன்ற நிர்வாக வரலாற்றிலேயே, சற்றேறத் தாழ 13,000 ஊராட்சிகளுக்கு, ஐந்தாண்டுக் காலப் பதவி முடிந்தவுடன், குறுகிய ஆறு மாத கால நீட்டிப்பைத் தவிர வேறு நீட்டிப்பிற்கிடமின்றி, தேர்தல்கள் நடைபெற்றது இதுவே முதல் முறையாகும். தமிழ்நாட்டில் வரலாற்றிலேயே, ஊராட்சித் தேர்தலுக்கெனத் தனியே வாக்காளர் பட்டியல் தயாரித்து வெளியிட்டதும் இதுவே முதன்முறையாகும். சட்ட மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலைத் தயாரித்ததற்கிடையே, இப்பட்டியல்தயாரிப்பதன் வேகம் சிறிது குறைந்தபோதிலும் மிகக் குறுகியகால எல்லையில் தயாரிக்கப்பட்டு உரிய வேளையில் வெளியிடப்பட்டது. சட்ட மன்ற வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்ததற்குரிய விரிவான நடைமுறையை ஒட்டியே ஊராட்சி வாக்காளர் பட்டியல்களும் தயாரிக்கப்பட்டன. அன்றியும் பேரூராட்சி, ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் முதன்முறையாக வாக்காளர்கள் அனைவராலும்ரகசிய வாக்கெடுப்பின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ்நாடு சிற்றூராட்சிச் சட்டம், 1950ஆம் ஆண்டிலேயே நேரடித் தலைவர் தேர்தலை அறிமுகப்படுத்தியிருந்தது. எனினும்,அப்போது தேர்தல்கள் எல்லாம் கையுயர்த்துவதன் மூலமாகவே நடைபெற்றுவந்தன.

தமிழ் நாடு அரசு

# வேலைவாய்ப்பு, தொழிற் பயிற்சித் துறை

## பொது அறிக்கை

1961-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தொழிற் பயிற்சிச் சட்டத்தின் 8(3)-வது பிரிவின்படி, தொழில் நிறுவனங்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையளவிற்கு இளைஞர்களைச் சேர்த்துத் தொழிற் பயிற்சி அளிக்க வேண்டும் என அரசினரால் விடப்பட்ட வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டுள்ளது. 28–1–70-ல் (ஜே1/1722/70) அரசின் தொழிற்பயிற்சி ஆலோசகரால் இறுதி வேண்டுகோள் விடப்பட்டது. அதன் பின்னரும், முன்னேற்றம் காணப்படவில்லை. பயிற்சிக்கு வாய்ப்பளிக்க வேண்டிய காலகட்டமான 1970 பிப்ரவரித் திங்கள் வரையிலும் எவ்வித மாற்றமும் இல்லை.

மேற்கண்ட சட்டத்தின் 30-வது பிரிவுப்படி, அரசின் கட்டளையைத் திட்டமிட்டுப் புறக்கணித்து வரும் தொழில் நிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நினைவுறுத்துகிறோம். அத்தகைய சூழ்நிலையைத் தொழில் நிறுவனர்கள் ஏற்படுத்தமாட்டார்கள் என்ற நம்பிக்கையையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொழிற் பயிற்சிக்குரிய இளைஞர்களைச் சேர்க்கும் பொறுப்பு நிறுவனங்களைச் சார்ந்ததே. தகுதியுடைய பயிற்சியாளர்கள் போதிய அளவு கிடைக்கவிலர் என்ற நிறுவனங்களின் சமாதானம் சட்டப்படி ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

பயிற்சி பெறுவோரைச் சேர்த்துக்கொண்டவுடன், அவர்களிடமிருந்து, உரிய விண்ணப்பத் தாள்களில் ஒப்பந்தம் பெற்று அரசின் தொழிற் பயிற்சி ஆலோசகருக்கு அனுப்பப்படவேண்டும். ஒப்பந்த நகல் மூன்று தேவை. இவ்வாறு ஒப்பந்தமளிக்காத யாருக்கும் பயிற்சியளிப்பது சட்டத்தின் 31-வது பிரிவின்படி தண்டனைக்குரியதாகும்.

பயிற்சி தொடங்க வேண்டிய சமயத்தில் தொழில் நிறுவனங்கள் செய்தித் தாளில் போதிய அளவு விளம்பரம் செய்ய வேண்டும். அத்துடன், அண்மையிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலர்கள், தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பினையும் பெற்றுத், தேவையான பயிற்சியாளர்களைத் தொழிலகங்கள் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இயக்குநர்,
வேலைவாய்ப்பு, தொழிற் பயிற்சித் துறை,
தமிழ் நாடு அரசு.

மேலும் அன்று மாநிலம் முழுமையிலுமாகத் தேர்தல் நடைபெற்ற ஊராட்சி மன்றங்களின் எண்ணிக்கை ஒரு சில ஆயிரங்களே யாம் ; அவ்வாறிருந்தும் உறுப்பினர் தேர்தல் ஆறு மாத அளவிற்கும் அதற்கு மேலும் கூட நடைபெற்றது.

இம்முறை, வாக்களிக்கத் தகுதியானோரின் எண்ணிக்கை ஏறத்தாழ 190 இலட்சங்களாகும். அவர்கள் ஏறத்தாழ 1,30,000 உறுப்பினர்களையும், 13,000 தலைவர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. வாக்காளர்கள், வாக்குகளைப் பதிவு செய்வதற்காக ஏறத்தாழ 48,000 வாக்குச் சாவடிகள் நிறுவப்பட்டன. அவற்றுள் 46,000 வாக்குச் சாவடிகள் நிலையான கட்டடங்களிலும், எஞ்சியவைகள் தற்காலிக அமைப்புகளிலும் நிறுவப்பட்டன. ஊராட்சி மன்ற வேட்பாளர்கள் தமக்கு ஆதரவு தேடி வாக்காளர்களிடையே பிரச்சாரம் செய்து கொள்ள இரண்டு முழு நாட்கள் இருக்கும் வண்ணம் தேர்தல் விதிகளில் தக்க திருத்தங்கள் செய்யப்பட்டன. வேட்பாளர்கள் தங்கள் வேட்பு மனுவைத் தாக்கல் செய்வதற்கும், தேர்தலுக்கும் இடையே ஊராட்சித் தேர்தல்களைப் பொறுத்தவரை இரண்டு நாட்கள் மட்டுமே இடைவெளி இருந்ததால், வாக்குச் சீட்டுகளை முன்கூட்டியே சென்னை அரசு அச்சகத்தில் அச்சிட்டு வைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. உறுப்பினர், தலைவர் தேர்தல் ஒவ்வொன்றுக்கும் மூன்று வரிசைகளாக ஏறத்தாழ ஆறுகோடி வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கப்பட்டு இரண்டு மாத அளவிற்கும் குறைவான கால எல்லையில் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன. உறுப்பினர், தலைவர் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை வாக்காளர் பிரித்தறியும் வண்ணம், உறுப்பினர் தேர்தலுக்கான சீட்டு வெள்ளை நிறத்திலும், தலைவர் தேர்தலுக்கான சீட்டு இளஞ்சிவப்பு நிறத்திலும் அமையுமாறு அச்சடிக்கப்பட்டன. வாக்குச் சீட்டுகள், அனைத்திந்தியக் கட்சிகளுக்கும் மாநிலக் கட்சிகளுக்கும் ஒதுக்கப்பட்ட சின்னங்களைத் தவிர்த்துப், போதுமான வேறு பொதுவான சின்னங்களையே கொண்டிருந்தன.

உறுப்பினர்கள் தேர்தலில் ஒரு சில முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆள் மாருட்டம் நேரா திருப்பதற்காக வாக்காளர்களின் விரல்களில் அழிக்கமுடியாத மை இடப்பட்டது. மற்றொரு மாற்றம், கண்ணற்றவரும், உறுப்புக் குறைபாடுடையவரும் வாக்களிக்கும் முறை பற்றியது. சட்ட மன்றத் தேர்தலைப் போலவே, வாக்காளரில் ஒருவர் வாக்குச் சீட்டில் குறியிட இயலா நிலையிலிருந்தால் தனக்குத் துணை செய்வதற்காக 21 வயதுக்குக் குறையாத ஒருவரை உடன் அழைத்துச் சென்று வாக்குச் சீட்டில் பதிவு செய்து பெட்டியில் போட அனுமதிக்கப்பட்டனர்.

ஊராட்சி ஒன்றியங்களுக்குரிய தலைவர் தேர்தல் முடிவடைந்து விட்டது. ஊராட்சி ஒன்றியக் கூட்டத்தைக் கூட்ட ஏழு முழு நாட்களுக்கு முன்னதாக அறிவிப்புத் தர வேண்டும் என்ற சட்டம் வரை, யறுக்கப்பட்டு எவ்வளவு விரைவில் தொடங்கமுடியுமோ அவ்வளவு விரைவாக ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தல் தொடங்கப் பெற்றது. கோட்ட ஆட்சித் தலைவர்களே பதவி முறையிலான தலைவர்களாக இருந்து தேர்தல்களை நடத்த வேண்டி உள்ளமையால், தேர்தல் பரவலாக நடத்தப்பட வேண்டியதாயிற்று. சில கோட்ட ஆட்சித் தலைவர்களின் எல்லைக்குள் 8 லிருந்து 12 ஒன்றியங்கள் வரை இருந்தமையாலும் (உதாரணம் : பொள்ளாச்சி—12, இராணிப்பேட்டை 11, நாமக்கல்— 11, ஈரோடு—11 சிவகாசி—11) இங்ஙனம் தேர்தல் பரவலாக்கப்பட வேண்டியதாயிற்று. தேர்தலுக்குரிய நாட்கள், கோட்ட ஆட்சித் தலைவர்களால், அவர்களுடைய நடைமுறை வசதிக்கேற்ப முடிவு செய்து கொள்ளப்பட்டன.

> இதயத்திலே எழுகின்ற பரிசுத்தமான ஆசை எதுவும் நிறைவேருமல் போவதில்லை. ஏழை எளியவர்களுக்குத் தொண்டு புரிய வேண்டும் என்பது என் உள்ளத்தில் எழுந்த ஆசை. அந்த ஆசை என்னை ஏழைகளிடம் கொண்டு சேர்த்தது. அவர்களோடு சரிசமமாகக் கலந்து பழகி, அவர்களில் ஒருவனுகிவிடும் சக்தியையும் தந்தது.
>
> —காந்தியடிகள்

தேர்தலை நடத்துவதற்கு அமைத்த திட்ட முறையினைக் கடவாமல், தேர்தல் பல படிநிலைகளிலும் மிக விரைந்து நடந்தேறியது, குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பாகும். 1965-ஆம் ஆண்டு நடைபெற்ற ஊராட்சி மன்றத் தேர்தல்களுடன் இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகத் தெளிவாகப் புலனுகும். அப்போது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தம் பொறுப்புகளை 2—2—1965 அன்று ஏற்றனர். அவர்களிடையே நடத்திக் கொள்ள வேண்டிய தலைவர்கள் தேர்தல் இரண்டு முறை தள்ளிவைக்கப்பட்ட பின் முடிவாக 1965 ஏப்ரல் திங்கள் இடையில்தான் நடைபெற்றது. அவ்வாறே ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் பொறுப்பேற்பதற்குரிய நாள், முதலில் 14—2—1965 என்று முடிவு செய்யப்பட்டது. பிறகு அது மாற்றப்பட்டு அந்நாள் 20—4—1965 எனக் கொள்ளப்பட்டது. இதன் விளைவாக 1965 பிப்ரவரி 22 முதல் 25-க்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டிய ஊராட்சி ஒன்றியத்தலைவர்கள் தேர்தல் 1965 ஏப்ரல்இறுதியில் நடைபெற வேண்டியதாயிற்று.

இவற்றிலிருந்து கடந்த தேர்தல்களில் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும். இடையே நெடிய காலக்கழிவு உண்டாயிற்று என்பது வெளிப்படை. அக்காலக் கடப்புகள் இம்முறை வெல்லப்பட்டன; தள்ளப்பட்டன.



# அமோக விளைச்சலுக்கு PSG பம்பு செட்டுகள்



■ நீங்களும் பிஎஸ்ஜி பம்பு செட்டை இன்றே வாங்குங்கள் ■ என்ஜின் அல்லது மோட்டாரில் இயங்குவது ■ தாராளமாக தண்ணீர் பெறுங்கள் ■ ஏராளமாக விளைச்சல் காணுங்கள் ■ நிறைய செல்வம் அடையுங்கள்

*விவரங்களுக்கு எழுதுங்கள்:*

**பி எஸ் ஜி இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்**

கோயமுத்தூர் 4 தென்னிந்தியா

PSG *the hallmark of high standard*

*விற்பனைக் கிளைகள்:*

*311, தம்பு செட்டி வீதி, சென்னை 1. 217 & 218, மேலமாசித்தெரு, மதுரை 1.*
*பப்ளிக் கார்டன் ரோடு, சைபாபாத், ஹைதராபாத் 4.*
*13/85, ஜெயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர் 2.*

VSK PSG 213



(தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் மதுரைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு—-23-8-70.)

பல்கலைக் கழக வேந்தர் அவர்களே !
இணைவேந்தர் அவர்களே !
துணை வேந்தர் அவர்களே !
பேராசிரியப் பெருமக்களே !
பட்டம் பெறும் பாசமிகு நண்பர்களே !

**கயலெழுதிய இமயநெற்றியின்**
**அயலெழுதிய புலியும் வில்லும்**
**நாவலந் தண் பொழின் மன்னர்**
**ஏவல் கேட்பப் பாரர சாண்ட**
**மாலை வெண் குடைப் பாண்டியன்** மதுரையில்

பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தும் பெருமை மிகு வாய்ப்பு—கல்லூரி கண்டிலேன் ஆயினும் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றி மூத்த தமிழின் வளம் சிறிது கண்ட பேற்றினன் என்ற நிலையில் எனக்குக் கிடைத்தது எனும் ஒரு பெரும் நம்பிக்கையில் உம் முன்னால் நிற்கின்றேன். உவகை பூக்கின்றேன். சங்கம் கண்டு தமிழ்த்தங்கம் தோண்டிக் கொடுத்த சிங்கப் புலவர் உலவிய மண் இது ! சீறியெழுந்த புலியாளுள், பசுவனைய பத்தினியாள் கண்ணகி தேவி. செங்கோல் வளைந்த தென்று வேங்கைப் பாண்டியனும் வேட்டையில் சிக்கிய சிறு முயல் போல் ஆனான். அந்தச் சிறப்பு மிகு சிலப்பதிகாரக் கதையின் உச்சக் கட்டம் நிகழ்வுற்ற கூடல் மாநகர்தனிலே கூடியிருக்கின்றோம். தலையாலங்கானத்தான்—ஆரியப்படை கடந்தான்—என்றெல்லாம் பட்டம் சுமந்த பாண்டியர்களின் சீமையிலே பல்கலைக்கழகம் வழங்குகின்ற பட்டம் பெறக் குழுமியுள்ள உங்கள் அன்பு நெஞ்சங்களோடு உறவாட வந்திருக்கும் இந்த உடன் பிறப்பின் வாழ்த்துக்களை முதலில் ஏற்றிடுவீர் ! பின்னர் ஏற்றிடுவீர் எட்டுத் திக்கும் நமது வெற்றிக் கொடி ! ஏற்றிடுவீர் எத்தனையோ பொறுப்புக்களை எனினும் எத்தகு பொறுப்பினை நீவிர் போற்றிடுவீர் என அறியும் திறனோ என்றனுக்கில்லை. பயிற்றுவித்த ஆசிரியப் பெருமக்கள் உணர்வர். உமது உள்ளங்கள் அந்த உண்மைதனை உரைத்திடத் தவறா. உலகின் ஒரு சிறு பகுதியைச் சுற்றிவிட்டு வந்தேன். நான் சென்ற இடமெல்லாம் எனக்கு முன்னே என் தமிழ்த் தாயின் பெருமை சென்றிருப்பதை உணர்ந்தேன். அதனை உரைத்து மகிழ்ந்தனர் ஒரு சில அறிஞர் ! மதித்து வரவேற்றனர் தமிழர் மாண்பினைப் புரிந்

# வசதியுள்ள பட்டதாரிகள் வழிவிடுக ஏழையர்க்கே!



தோர் ! இசை நயமிக்க மொழி என்றனர்— இனிக்கும் தேனமுது இதுவன்றோ எனப் புகன்றனர் ; என் உரை கேட்டல்ல ; இன் தமிழாம் பொன்பூவின் மென்மணம் சுமந்த தென்றலை நுகர்ந்து ! நமது மொழியின் பெருமை நானிலம் அறிகிறது. . . . . . நாற்றிசை நாட்டோரும் நாகரீக நகராம் பாரிசில் கூட நம் மொழியை உயர்தனிச் செம்மொழி எனக் கூறிக் களித்தனர். நேரிலே கண்டேன். நிறைவினை மனத்தினில் கொண்டேன். தமிழ் உயர்ந்தது. தலை சிறந்தது ஒளிமிக்கது. உயிரானது. எல்லாம் சரி. ஆனால் என் நெஞ்சில் ஏக்கப் பெருமூச்சு ஏன் எழுந்தது ? அந்தத் தமிழன்னை ஈன்றெடுத்த செல்வங்கள் பலநூறாயிரம்— பெயரில்தானே செல்வங்கள் ; வாழ்வில் வறுமையின் சின்னங்களன்றோ? முகில் முட்டும் மாடங்கள் கூடங்கள் அங்கே கண்டேன் ; முழு நிறைவான வாழ்வு என் தமிழர்கள் எல்லார்க்கும் எப்போது கிடைக்கும் என்ற கேள்வியால் எழுந்த நீர்த்துளிகள் அந்த மாட கூடங்களைப் பார்க்க வொட்டாமல் என் விழிகளைத் தடுத்துவிட்டன. வாழ்வின் இனிமையைத் துய்ப்போர் வெளி நாடுகளில் ! இதுவும் ஒளிநாடாய் ஆனால் அன்றோ அத்தகையோரை இங்கும் காண இயலும். அதற்குத் தனியொருவனின் முயற்சி போதுமா ? அவனது உழைப்பு, தியாகம், ஆற்றல், அறிவு பயன் படுத்தப்பட்டால் மட்டும் வெற்றி கிட்டுமா ? தனி மனிதர்கள் தத்துவங்களைப் போதிப்பர். அறிவுரைகளை வழங்குவர். உலகச் சந்தையில் மலிவாகக் கிடைக்கும் பொருள்கள் தத்துவம்—வேதாந்தம்—அறிவுரைகள்தான் !

தனி மனிதன் வாழ்வின் தித்திப்புக்காகவே சமுதாயம் உழைப்பதுதான் தர்மம் எனில் அந்தப் பெருங் கூட்டத்தில் கசப்பு எழுதல் இயற்கை. தனி மனிதனும் தன்னைச் சமுதாயத்தில் ஓர் அங்கம் எனக் கருதிடல் வேண்டும். சமுதாயம் என்பது தனி மனிதர்களின் சங்கமே என்பதிலும் தெளிவு தேவை. அந்தத் தெளிவுடன் துணிவையுங் கலந்து பணியாற்ற அனைவரும் பயிற்சி பெறின் பொது வாழ்வுப் பல்கலைக் கழகத்தின் புகழ்மிகு பட்டயங்கள் பெற்றிடலாம். எம்நாடு ஏற்ற மிக்கது ! எம்மவர் வாழ்வு எழில் மிக்கது ! எனப் பீடு நடை போட்டு உலா வரலாம்.

உழைப்பு ! உழைப்பு ! என்கிறீர்களே ; அதோ விலா எலும்பு ஒடிய வண்டியிழுக்கிறானே ; இதோ வியர்வை மழை யெனக் கொட்ட வேலை செய்கிறானே ; கழனியில்—இவை யெல்லாம் உழைப்பன்றோ ? இது போதாதோ ? இன்னுமா வேண்டும் உழைப்பு ? இப்படி நம் உள்ளம் கேட்கின்றது. போதாதுதான் ! அவன் உழைப்பைக் குறைக்க நாம் உழைத்தாக வேண்டும் !

அப்படியென்றால் ; ஆலையில் மாடெனப் பாடுபடும் தொழிலாளித் தோழனுடன் நாமும் சென்று இணைந்து கொள்வதல்ல ; உழைப்பின் அளவை அவனுக்குக் குறைக்கும் வழி !

வேறென்ன செய்திடல் வேண்டும்—தனி மனிதனின் ஒத்துழைப்பால் அதனைச் செய்திடல் இயலாது. நாடே வளமாகிட வேண்டும். அதற்கு அனைவரும் வெவ்வேறு முனைகளில் உழைத்திடல் வேண்டும். மறுபடியும் உழைக்கத்தானே சொல்லுகிறாய் ? கேட்கத் தோன்றும் ! ஆனால் சற்று ஆழமாகச் சிந்தித்தால் அனைத்தும் விளங்கும். பலர் பல முனைகளில் உழைப்பதால் —பல வகைகளில் உழைப்பதால்—உழைப்பதற்கு ஒரு சிலரே பிறந்துளார் என்ற '' தலையெழுத்துத் தத்துவம் '' தலை மறைவாகிவிடும். கழனியில் இருப்பவனுக்கும், கட்டை வெட்டுபவனுக்கும் வேலை செய்யும் நேரம் போக மிச்சமுள்ள களைப்பாறும் நேரம், களியாட்ட நேரமாகிறது. ஆலையில், சாலையில், அலுவலகத்தில் பாடுபடுவோர் அனைவருக்கும் உழைப்பின் அளவுக்கு உற்சாகத்தின் அளவும் உயர்கிறது. இதுதான் ; நாடு வளமாயுள்ளது என அறிவிக்கும் கண்ணாடி. இந்தக் கண்ணாடியில் முகம் தெரிந்தால் போதாது, அனைவர்க்கும் சுகம் வேண்டும் என்ற சமதர்ம அகம் தெரிந்தாக வேண்டும்.

'' பயின்றோம், பலகாலம் ! பட்டம் பெறுகிறோம் ; இன்று ! இட்டமுடன் கற்றோரும் உண்டு— பெற்றோர்க்குப் பொருள் நட்டமுடன் கற்ற மற்றோரும் உண்டு—எமை நோக்கி ' உழைப்புத் தேவை ! ' என்கின்றீர்—' தியாகம் புரிந்திடுக ' என அடுத்து மொழிந்திடுவீர்—ஏனய்யா; இதனைக் கேட்கவா யாம் இங்கே கூடியுள்ளோம்—உம் கூற்றுப்படி உழைக்கின்றோம் — அதற்காகவே பட்டம்பெற்றுள்ளோம்—எல்லாம் சரிதான் எங்கே —யாம் பணிபுரிய வாய்ப்பு ? வேலை வாய்ப்பு ? தருவிரோ அந்த வாய்ப்புதனை ''

என நீவிர் கேட்பீர் ; எனக்கு நன்றாகத் தெரியும். கேள்விக்கு நான் விடையளிக்குமுன் சிந்தனைக்குச் சிலவற்றை வைக்கின்றேன்.

விடுதலை பெற்று இருபத்துமூன்று ஆண்டுகள் உருண்டோடி விட்டன. திட்டங்கள் மூன்றும் நீட்டிச் செயல்பட்டோம். இடையில் இரண்டொரு ஆண்டுகள்—நான்காம் திட்டம் நகரவே இல்லை. ஓரிரு திங்கட்கு முன்பே உயிர் பெற்று

ளது. திட்டமிடாக் காலத்தில் தீயெனப் பரவிய வேலை வாய்ப்பின்மை வறுமையை விதைத்தது. வாட்டமே மிகுந்தது. வான்முட்டப் பேருருக் கொண்டு நிற்கும் வேலையில்லாத் திண்டாட்டப் பேயினை வாள் கொண்டு வீழ்த்திட இந்தியப் பேரரசு இன்றே முனைதல் நன்றாம் என்போம்! அதுவரை பொறுமையாக இருந்திடுக எனச் சொல்லத்தான் பீடிகையோ என எண்ணுதீர்! மாநில அளவில் வேலையின்மையை வீழ்த்திடச் சீரான திட்டங்கள் சிலவற்றை வகுத்திடச் செயல் முறை தொகுத்துள்ளோம். ஆதலின் பட்டம் பெறுவோர் நம்பிக்கை கொள்க!

உயர் கல்வி கற்பது எதற்காக? உடனடிப் பதவியொன்று பெறுவதற்காக! கேள்விக்குப் பதில் இப்படி இருத்தல் நலமன்று. கல்வி அறிவினைப் பெருக்க! ஆற்றலை வளர்க்க! உண்மைதான்; எம் வயிற்றினை—எம் இல்லத்தார் வயிற்றினை வளர்க்க வேண்டாமோ? வினா புறப்படும், வில் விட்டுக் கிளம்பும் கணை போல! நான் மறுக்கவில்லை. அவர்களுக்குத்தான் சொன்னேன்; மாநில அரசின் முயற்சியால் வேலை வாய்ப்புக்கு வழிஉண்டு, நம்பிக்கை கொள்க என்று!

பதவிகள் பெற்று வாழ்வினை நகர்த்திடப் படிப்போர் தொகை பெரிதென்போம்! சிறிதெனினும் தொகை—செல்வர்கள் வீட்டுப் பிள்ளைகள் படிப்பது வயிற்றுப் பிழைப்புக்கு அல்லவே!

அவர்களும் வேலையை நாடுதல் ஏனோ! பணம் குவிந்து கிடப்பினும், அலுவல் ஒன்றில் இருப்பது தான் அவர்க்குப் பெருமை என எண்ணுதல் தவிர்த்திட வேண்டும்.

பணம் படைத்தோர் தாம் பெற்ற கல்வி அறிவை வாழ்க்கையை நகர்த்தப் பயன்படுத்தும் நிலையினர் அல்லர்! அவர் தம் அறிவுச் செல்வம், நாட்டில் பல்வகைத் தொழில் துறை வளரப் பயன்படல் நலமாம். சமுதாயப் பணிகள்—பொதுப் பணிகள்—பட்டம் பெற்ற பணக்கார இளைஞர்களின் பார்வையில் படுதல் வேண்டும். அலுவலக வேலைக்கு அவர்களும் மனுப் போட்டால் அன்றாடம் வாழ்வில் அவதிப்படும் பட்டதாரிகள் படுந்துயருக்கு முடிவே இல்லாமல் போகும். இந்தக் கொள்கையில் அரசுடன் ஒத்துழைக்க, வசதியுள்ள பட்டதாரிகள் வருதல் வேண்டும். தினம் தினம் தீயில் கருகும் ஏழை எளிய பட்டதாரிகளுக்காக அவர்கள் செய்திடும் தியாகம் என அதனைக் கருதிட வேண்டும். இந்த நிலை, முழுப் பயனை அளிக்கவல்ல தல்ல எனினும், அழும் குழந்தைக்குப் பால் தர முடியாமல் தவிக்கும் தாய், அதனைத் தோளில் போட்டுத் தட்டிக் கொடுத்துத் தூங்க வைக்கும் அளவுதான் வேலை வாய்ப்பு வழங்குவதன் அளவும் அமையும் எனினும், அதையாவது செய்ய மாநில அரசு முனையாவிடில், அழுது அழுது குழந்தையின் வெறும் வயிறு வீங்கி விடும். காய்ச்சல் பற்றும். கடும் பிணி தாவிடும். முடிவு கண்ணீர்க் கதையாகும்.

வாழ்வில் அல்லற்படுவோர்—வயிற்றைக் கட்டி வாயைக் கட்டிப் பொருளீட்டித் தம் பிள்ளைகளைப் படிக்கவைத்து வயதான காலத்தில் நாலுகாசு சம்பாதித்துத் தமக்குச் சோறு போடுவான் என நம்பியிருக்கும் ஏழைத் தெய்வங்களுக்கு ஏமாற்றத்தைப் பூசை நைவேத்யமாக்காமல் ஏதோ எம்மால் முடிந்த ஊதுவத்தியைக் கொளுத்தி வைக்க எண்ணுகிறோம், மாநில அளவில் அதன் அதிகாரங்களுக்கு உட்பட்டு வேலை வாய்ப்புகளைப் பெருக்கும் வகையில்!

வசதி படைத்த குடும்பத்திலிருந்து வந்து பட்டம் பெறுவோர்க்கு நாட்டில் பணிகளா இல்லை?

"தமிழன் என்றோர் இனமுண்டு—தனியே
அவற்கொரு குணமுண்டு."

என்பதனை அறியாத தமிழர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். அவர் தம் உள்ளங்களில் தமிழ் விளக்கு ஏற்றி வைக்கும் பணியினைச் செய்தல் எத்துணைப் பெருமை மிக்கது! எத்துணை இன்பமூட்டுவது!

அறிவியல் துறை! ஆராய்ச்சித் துறை! அழைக்கிறது வா வா என! வந்து புகுந்திடு! வையகம் புகழ்ந்திடத் தமிழகத்தின் மேன்மையை நிலைநாட்டு! என அழைக்கிறது. வந்திடத் தயங்குவது எதற்காக?

தோல்வியால் துவண்டு, காலூன்றி எழவும் முடியாமல் வீழ்ந்து கிடந்த மேற்கு ஜெர்மானிய நாடு வெகு விரைவில் சுடர் முகந் தூக்கி எழுந்து நிற்பது அங்கு வளர்ந்த தொழில் துறையால்!

அறிவுச் செல்வம் பெற்றோர், தம் கையில் உள்ள அழியும் செல்வத்தை அழியாச் செல்வமாக்க அரசுடன் இணைந்து தொழில்துறை வளர்ச்சியில் நாட்டம் செலுத்திடின் அஃதோர் நற்பணி ஆகாதோ! நாடு வளம் தரும் பூக்காடென மாறாதோ?

"சாதிகள் இல்லையடி பாப்பா" எனப் பாடிய பாரதி தன் ஆயுளைப் பாதியில் முடித்துவிட்டான். மீதியைச் செயலாக்கி சாதி சமயச் சழக்கு அறுத்திடத் துணிந்து பணியாற்றலாமே!

"இனிமைத் தமிழ் மொழி எமது; எமக்கின்பந் தரும்படி வாய்த்த நல் அமுது" எனப் பாரதிதாசன் பாடியதை ஏட்டோடு நிறுத்திவிடாமல் அந்த அமுதினை நாட்டுக்குப் பாட்டு மொழியாக மட்டும் தராமல் பாட மொழியாக்கவும்



அரசு மேற்கொண்ட செயலுக்கு உறுதுணையாக இருந்திடலாமே. இன்று தமிழில் பயிற்று மொழி யென்பதைத் தடுத்திடும் இயல்பினரும் இருக்கின் றனரே. அதனைத் தகர்த்திடும் வகையில் எதிர்காலம் அமைந்தால்தானே ''தமிழன் என்றோர் இன முண்டு'' எனும் நாமக்கல்லார் பாட்டுக்குப் பொருள் புரிந்தவர்களாவோம்.

உத்தமர் காந்தியடிகள் உரைத்த மொழியொன் றினை இவண் குறித்திடல் பொருத்தமாகும்.

''தாய்ப்பாலிடம் இருக்கும் பற்றுதலைப் போலவே எனக்குத் தாய் மொழியின்பாலும், அதில் எவ்வளவுதான் குறைபாடுகள் இருந்தாலும் பற்று தல் இருக்க வேண்டும். அது ஒன்றுதான் எனக்கு வாழ்வளிக்கும் பால் தர முடியும். தாய் மொழி யல்லாத பிற மொழியைப் பாட மொழியாகக் கொண்டுள்ள ஒரு நாட்டின் குழந்தைகள் தற்கொலை செய்து கொள்பவர்கள் ஆவார்கள் என்று நான் உறுதியாக நம்புகி றேன். குழந்தைகளின் எல்லாத் தன்னாற்றலையும் அது பறித்துக் கொள்கிறது. அவர்களின் வளர்ச்சியை அது தடுப்ப தோடு மட்டுமல்லாமல் அவர் களைக் குடும்பச் சூழ்நிலையிலிருந்து தனித்து நிற்கச் செய்கிறது. ஆகவே இப்படிப்பட்ட ஒரு செய்கையானது இந்த நாட்டின் முதல் தரமான சோக நிகழ்ச்சி என்றே நான் கருதுகிறேன். உடனடியாகப் பயிற்று மொழி மாற்றப்பட்டு மாநில மொழிகள் உரிய இடத்தைப் பெறுவதற்கு எப்பாடு பட்டாவது தகுந்த முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். உயர் கல்வி நிலையில் பெருகிடும் மொத்த விரயத் திற்குப் பதிலாகத் தற்காலிகக் குழப்பங்கள் மேலானது என்று ஏற்றுக்கொள்கிறேன்''.

அண்ணல் காந்தியின் அறி வுரை இஃது! இதற்கு முரண் பட்டுப் பேசுவோரும் தமிழ் நாட் டில் உண்டு. சொல்லித் தெரிவ தில்லை. சொல்லாமலே புரியும் உமக்கு. முதற் பட்டமளிப்பு விழாவினை இங்கு நிகழ்த்தி, இன்று மூதூராம் மதுரையிலே சிலையாக நிற்கின்ற நம் அண்ணன் ''தாய் மொழி என்னும் தகுதிக்கு ஈடாக வேறு எந்தத் தகுதியையும் ஒரு மொழிபெற்றிடத் தேவை யில்லை'' என உரைத்து, ''உலகுடன் ஒட்டி வாழ்ந்திட உலகின் அறிவுக் களஞ்சியத்தின் துணை பெற ஆங்கில மொழியறிவு இன்றியமையாததா கிறது. இந்தியாவின் பல பகுதிகளுக்கு இணைப்பு மொழியாகவும், இந்தியாவுக்கும், வெளி நாடு களுக்கும் இணைப்பு மொழியாகவும் ஆங்கிலம் இருந்திடட்டும்'' எனத் தெளிவாக்கித் தமிழ்ப் பயிற்று மொழியின் இன்றியமையாமையைக் கோடிட்டுக் குறித்துள்ளார். அவரை மறவாதது போலவே அவர்தம் சீரிய கருத்தினையும் மறந்திட வில்லை நாம். தாய்மொழியில் அறிவியல், மருத் துவ இயல், கலைச் சொற்களைப் பயின்று, செழிப் பையும் சிறப்பையும் காணுகிற நாடுகள் சிலவற் றைக் கண்டுவந்தேன் நான். பயிற்று மொழியில் காட்டும் பற்று மட்டுமின்றித் தமிழ் மொழியானது அகம், புறம் எனும் கருவூலங்களை வெளிப்படுத்தும் சிந்தனைக் கருவியாக மாத்திரம் இராமல் அணு வின் ரகசியங்களையும் நிலவின் பயணங்களையும் விளக்கிக் கூறத் தக்க திறன்மிக்க புதுயுக மொழி யாகவும் விளங்கிடப் பொறுப்பேற்றுப் பணியாற் றிடல் வேண்டும்.



எம். ஏ. பொருளாதாரத்தில் முதலிடம் பெற்றுள்ள மாணவி எஸ். ஜெயா.

பட்டம் பெறும் அத்துணைப் பெருமா வேலை கிடைக்கும் திக்கு நோக்கி விழி திருப்பப் போகின் றீர்! உம்மில் எத்தனை பேர் இங்கர்சாலோ! எத்தனை பேர் ரூசோவோ? எத்தனை பேர் வால் டேரோ? எத்தனை வள்ளுவரோ? இளங்கோவோ? கம்பரோ? காந்தி யோ? நேருவோ? அண்ணாவோ? அவரளவு ஈடு இல்லையெனினும் அவர் தம் வழி நின்று பணி யாற்றும் திறனுடையோர் திரண் டிருக்கக் காணுகின்றேன். அத னால்தான் உமது ஆற்றலை நாடு செழித்திடக் கேட்கின்றேன். உலக மிசை உணர்வெழுப்பி உதித்தெழும் கதிரோனிடம் தான் ஒளி கேட்கின்றேன். நீடு துயில் நீக்கப் பாடிவரும் நிலா விடம்தான் குளுமை கேட்கின் றேன். வெண்சங்கு நிறங்காட்டி வேலியோரத்தில் படர்ந்து கிடக்கும் முல்லையிடம்தான் மணம் கேட்கிறேன். தென்ற லிடம்தான் இனிமை கேட்கி றேன். தென்பொதிகை மலை யிடம்தான் அகில் கேட்கின் றேன். அன்புறு நண்பர்காள்! உம்மிடம்தான் ஆற்றல் கேட் கிறேன்; அன்பான ஒத்துழைப்பு கேட்கிறேன்.

''உற்றுழி உதவியும்
உறுபொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனியாது
கற்றல் நன்றே.''

எனப் புறப்பாடல் எழுதிய முடியுடை வேந்தன் நெடுஞ்செழியப் பாண்டியனின் மண்ணில் வளர்ந்த குளிர் தருக்கள் நீங்கள்! உங்களிடம் கோடை யிலே இளைப்பாற நிழல் கேட்கிறாள் தமிழக அன்னை. தந்திடுவீர்! அந்த உறுதியுடன் உறைவிட்டெழுந்த உடைவாள் போலப் புறப்படுவீர்! நீதிக்குப் புறம் பானவை எங்கிருந்தாலும் களைந்திடுவீர்! நிழல் தரும் தருவென வளர்ந்திடுவீர்!

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர்; அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1.

# வேளாண்மைப் பெருங்குடி மக்களே!





## ஒரு நல்ல சேதி!

## உங்களுக்கு டிராக்டர் தேவையா?
## உடனே எங்களை அணுகுங்கள்!



ஜெட்டார் 2011-25HP (செக்கோஸ்லோவேகியா)
வரியுட்பட ரூ. 16,700



பைலாரஸ் 50HP (ரஷ்யா)
வரியுட்பட விலை ரூ. 18,500

எங்களிடம், இவ்வாண்டு (1970-71) இறக்குமதியான டிராக்டர்களும், அவைகளுக்கான உதிரி இணைப்புப் பாகங்களும் விலைக்குக் கிடைக்கும்.

மற்றும் செக்கோஸ்லோவேகியா 25HP ஜெட்டார் 5511 டிராக்டரும் (விலை ரூ. 24,000), 25HP ரஷ்ய டிராக்டரும், 35HP போலந்து டிராக்டரும் கிடைக்கும்.



யூ 650-65HP (ருமேனியா)
வரியுட்பட விலை ரூ 26,500



ஆர். எஸ். 09-20HP (கிழக்கு ஜெர்மனி)
வரியுட்பட ரூ. 14,500

விவரங்களுக்கு:

**நிர்வாக இயக்குநர்,**
தமிழ் நாடு வேளாண்மைத் தொழிற்கழகம்,
**122. மவுண்ட் சாலை,**
**சென்னை-6.**

Registered No. M. 8657 தமிழரசு




மேலே காணப்படும் வடிவமைந்த கொடியினைத் தமிழக அமைச்சர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், தமிழ் மாநில அளவில் இந்தக் கொடியை அனுமதிக்க வேண்டுமென்றும், இது தேசியக் கொடிக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படுவது அல்லவென்றும், தேசிய விழாக்கள், அரசு அலுவலகங்களில் எப்போதும்போல் இப்போதுள்ள இந்திய தேசியக் கொடியே இடம் பெறும், ஏற்றப்படுமென்றும், மத்திய அரசுக்கு விளக்கமளித்து அதனையொட்டி 23-5-70-ல் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள கொடியின் அமைப்புத்தான் இது !